REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஏப்ரல் 3 சனிக்கிழமை


# தினகரன்

THINAKARAN தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 80 | April 03,Saturday, 2021 | 16 பக்கங்கள் | 30/-

உங்கள் அபிமான மாத இதழ்
வண்ண வானவில் Vanna Vaanavil
கேட்டு வாங்குங்கள்...
ஏப்ரல் மாத இதழ்!
வாசிக்க எக்கச்சக்கமான விடயங்கள் கொட்டிக் கிடப்பது வானவில்லில் மட்டுமே!



தாய்வான் ரயில் விபத்தில் 36 பேர் பலி 02


பம்பரக்கலை தோட்டத்தில் தீ 07

பல்கலை மாணவரின் மந்த மாருதம் 10

இலங்கைக்கு 348 வெற்றி இலக்கு 16

# போர்க்கால சூழலில் மக்களது துயரங்களை துடைக்க முன்னின்றவர்

**மறைந்த ஆயருக்கு பிரதமர் மஹிந்த இரங்கல்**



மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அதி வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவு குறித்த செய்தி அறிந்து மிகுந்த மன வேதனையடைந்தேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டு, 1992 ஒக்டோபரில் திருநிலைப்படுத்தப்பட்டார்.

06

## "கிராமத்துடன் கலந்துரையாடல்" 17 ஆவது நிகழ்வு இன்று வடக்கில்



வட மாகாணத்தின் "கிராமத்துடன் கலந்துரையாடல்" முதலாவது நிகழ்வு வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வெடிவைத்தகல்லு கிராம சேவகர் பிரிவில் நடைபெறும்.

போகஸ்வெவ மகா வித்தியாலய வளாகம் இதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இது "கிராமத்துடன் கலந்துரையாடல்" 17ஆவது நிகழ்வாகும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் இன்று (03) முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பிக்கும்

06

## அமரர் டி.ஆர் விஜேவர்தனவின் ஜனனதின நிகழ்வு இன்று

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் அமரர் டி.ஆர். விஜேவர்தனவின் 135ஆவது ஜனன தினத்தையொட்டி லேக்ஹவுஸ் நிறுவனத்தில் நேற்று (02) இரவு முழுவதும் பிரித் பாராயணம் நடைபெற்றதுடன் இன்று (03) பிக்குமாருக்கான தானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

கடந்த பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி டி.ஆர்.விஜேவர்தவின் 135ஆவது ஜனன தினமாகவிருந்த போதிலும் நாட்டில் நிலவும் கொவிட் 19 தொற்று பரவல் காரணமாக வழமையாக முன்னெடுக்கப்படும் பிரித் ஓதும் நிகழ்வு பிற்போடப்பட்டதுடன், நேற்று இரவு முதல் பிரித்

06

**கட்டாரிலிருந்து 'வன் உம்மா' வட்ஸ்அப் குறூப்**

# அடிப்படைவாத கருத்துக்களை பரப்பிய இருவர் அதிரடி கைது



**பயங்கரவாதி சஹ்ரானின் கடும்போக்குவாத கருத்துக்கள் பகிர்ந்தமை உறுதி**



சுப்பிரமணியம் நிசாந்தன்

வெல்லம்பிட்டி, திஹாரிய பகுதிகளைச் சேர்ந்த 31,32 வயதுடைய அடிப்படைவாத கருத்துக்களை பரப்பிய இரு சந்தேக நபர்கள் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டாரிலிருந்து 'வன் உம்மா' எனும் பெயரில் வட்ஸ் அப் சமூக வலைத்தள குழு ஒன்றை அமைத்து அதன் ஊடாக அடிப்படைவாத கருத்துக்களை பகிர்ந்ததாக கூறப்படுபவர்களை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கட்டாரிலிருந்து 'வன் உம்மா' எனும் வட்ஸ்அப் குழு ஊடாக பயங்கரவாதி ஸஹ்ரான் ஹாஷிமின் கடும்போக்குவாத கருத்துக்கள் பகிரப்பட்டுள்ளமை தெரியவந்ததையடுத்து இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் இருவரும் கட்டாரில் வேலை செய்து வந்துள்ளனர். பொலிஸாரின் கோரிக்கைக்கமைய

06



கிறிஸ்தவர்களின் புனித நாளாக கருதப்படும் பெரிய வெள்ளியான நேற்று யாழ்ப்பாணம் புனித பாசையூர் தேவாலயத்தில் நடைபெற்ற சிலுவை பாதை பவனியை படத்தில் காணலாம். (படம்: ஐ.சிவசாந்தன்)

## கொரோனா தடுப்பூசி ஏற்றல் தற்காலிக இடைநிறுத்தம்



**வைத்திய நிபுணர் சுதத் சமரவீர**

சுப்பிரமணியம் நிஷாந்தன்

இலங்கையில் முதலாவது கொவிசீல்ட் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. முதல் தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசியை வழங்கும் நோக்கிலேயே இந்தத்

06



வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதை முன்னிட்டு ஆலய வடக்கு கோபுர வாயிலில் அமைக்கப்பட்ட மகாகாளி சிற்பம் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவினால் உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் (01) திறந்து வைக்கப்பட்டது.
(படப்பிடிப்பு: கொழும்பு வடக்கு நிருபர்)

**அச்சமின்றி ஆராதனைகளில் ஈடுபடுங்கள்**

## நாட்டிலுள்ள தேவாலயங்களுக்கு உச்ச கட்ட பாதுகாப்பு ஏற்பாடு

**இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா**



உயிர்த்த ஞாயிறு கொண்டாட்டத்துக்காக மக்களுக்கு அதிகபட்ச பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

சமூக இடைவெளி மற்றும் பிற சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம் மக்கள் எந்தவித அச்சமும் இல்லாமல் ஆராதனைகளில் பங்கேற்க முடியுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

06

**திருமறைக் கலாமன்ற நிறுவுனர்**

## கலாநிதி மரிய சேவியர் நேற்று காலமானார்



திருமறைக் கலாமன்றத்தின் நிறுவுனர் கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளார் தனது 82ஆவது வயதில் இறைபதமடைந்தார்.

இளவாலையைச் சேர்ந்த அவர் ஆரம்பக் கல்வியை இளவாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் அதன் பின்னர் புனித ஹென்றிஸ் கல்லூரியிலும் கற்றார்.

06

**அரசிடம் நற்பெயர் பெறுவதற்காக**

## மக்களை வீதியில் விட்ட அதிகாரிகள் மீது கண்டனம்



**முன்னாள் எம்.பி சரவணபவன்**

அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கக் கூடாதென்ற நினைப்புடன் அரசை திருப்திப்படுத்தி மக்களைப் பட்டினிபோட்டு நடுத்தெருவில் விடும் வகையில் வடக்கு அதிகாரிகள் சிலர் செயற்படுகின்றனரென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள்

06

## ஓட்டமாவடியில் இதுவரை 69 சடலங்கள் நல்லடக்கம்

**ஜயந்த கொலம்பகே தெரிவிக்கின்றார்**



லோரன்ஸ் செல்வநாயகம்

கொரோனா தொற்று காரணமாக மரணித்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்யலாம் என்ற வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு, அதற்கான வழிகாட்டல்களும் வெளியான பின்னர், இதுவரை 69 முஸ்லிம்களின் சடலங்கள் ஓட்டமாவடியில்

06

# ஆயிரம் எப்படி பெறுவது என்பது எமக்குத் தெரியும்



**நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை மட்டுமே பொறுமை**

ஹற்றன் சுழற்சி, ஹற்றன் விசேட நிருபர்கள்

ஆயிரம் ரூபா சம்பளத்தை எப்படி பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பது எமக்கு தெரியும்.

நீதிமன்ற தீர்ப்பு வரும் வரையே நாம் பொறுமை காக்கின்றோம். பயத்தால் அல்ல, நீதிமன்ற தீர்ப்பு தொழிலாளர்களுக்கு நன்மையளிக்கும் வகையில் அமையுமென

06

**சர்வதேச கடற்பரப்பில் பலகோடி ரூபா மதிப்புள்ள**

# போதைவஸ்து நிரப்பிய இலங்கை நாட்டு கப்பல்

- சர்வதேச கடத்தல்காரர்களுக்கு விநியோகமா என சந்தேகம்
- அழித்தொழிக்க அதிகாரிகள் தீவிர நடவடிக்கை

பல கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருளை சுமந்துகொண்டு இலங்கைக்குச்சொந்தமான கப்பலொன்று சர்வதேச கடற்பரப்பில் பயணிப்பதாக இந்திய மற்றும் சில நாடுகளின் கடற்படையினர் மிகுந்த அவதானம் செலுத்தி வருகின்றனர்.

சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு பகிர்ந்தளிக்கும் நோக்கில் இந்தக் கப்பலில் போதைப்பொருள் கடத்தப்படக் கூடுமென சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளதுடன், சர்வதேச கடற்பரப்பில் இதனை அழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது

06

**விக்கல் வீராச்சாமி**



என்ன தலைவர் கூட்டத்துக்கு போயிட்டு மக்களுக்கு நிவாரண பொதிகளையும் கொடுக்காம கோபமா திரும்பி வாரார்...?

அது ஒண்டுமில்லை, அவரைச் சுத்திச் சுத்தி கவர் பண்ற டி.வி கார தம்பி கவர் பண்ண வரல்லையாம், அதுதான்...!!!

**கொழும்பில் கோர விபத்து**

## பன்னிப்பிட்டிய சந்தியில் இரண்டு இளைஞர்கள் பலி



கொழும்பு, பன்னிப்பிட்டிய, பொல்வத்தை சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு இளைஞர்கள் பலியாகியுள்ளனர். நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தலவத்துகொடையிலிருந்து வந்த மோட்டார் வாகனமொன்று பொல்கட்டுவ வீதியில் திருப்ப முயற்சித்த போது பன்னிப்பிட்டிய நோக்கி பயணித்த

06

# மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயருக்கு அஞ்சலி



மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப்பின் பூதவுடல் மன்னார் ஆயர் இல்லத்தின் சிற்றாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக கொண்டு வரப்படுவதையும், அரசியல் தலைவர்கள், மக்கள் அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள் மன்னார் குறூப் நிருபர்)

## சர்வதேச செய்திகள்

# தாய்வான் ரயில் விபத்தில் 36 பேர் பலி: பலரும் காயம்

தாய்வானில் டிரக் வண்டி ஒன்றில் மோதிய ரயில் சுரங்கப்பாதை ஒன்றில் தடம் புரண்டதில் 36 பேர் உயிரிழந்திருப்பதோடு மேலும் 72 பேர் காயமடைந்துள்ளனர். கடந்த நான்கு தசாப்தங்களில் தாய்வானில் இடம்பெற்ற மோசமான ரயில் விபத்தாக இது பதிவாகியுள்ளது.

நீண்ட வார இறுதியை நோக்கி தாய்ப்பேயில் இருந்து டெய்ட்டுங்கை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த அதிவேக ரயில் ஒன்றே நேற்று இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த ரயில் கிழக்கு தாய்வானில் ஹுவாலியன் நகரின் வடக்கே தடம் புரண்டதாக தீயணைப்புத் திணைக்களம் தெரிவித்தது.

ரயில் மோதிய வேகத்தில் சுரங்கப் பாதைக்குள் ரயில் பெட்டிகள் உடைந்து இருக்கும் படங்கள் வெளியாகியுள்ளன. இதனால் மீட்பு நடவடிக்கையிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த ரயிலில் மொத்தம் 350 பேர் வரை இருந்ததாக தீயணைப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



முதல் நான்கு பெட்டிகளிலும் இருந்து 80 தொடக்கம் 100 பேர் வெளியேற்றப்பட்டதோடு ஐந்து தொடக்கம் எட்டாவது பெட்டி வரை சிதைந்து காணப்படுவதால் அந்த பகுதியை அணுகுவது கடினமாக உள்ளது என்று அது தெரிவித்துள்ளது.

இதில் டிரக் வண்டியை சரியாக நிறுத்தி வைக்காததால் ரயில் பாதைக்கு சற்று தடங்கலாக இருந்திருப்பதாக சந்தேகிக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தடம்புரண்ட ரயிலுக்கு அருகில் மோதுண்ட டிரக் வண்டியின் சிதைவுகள் இருக்கும் படம் ஒன்றை தீயணைப்புத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

'எமது ரயில் டிரக் ஒன்றுடன் மோதியது' என்று தாய்வான் தொலைக்காட்சிக்கு ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இதில் ரயிலின் முன் பகுதி சுரங்கப் பாதைக்கு வெளியே இருப்பதோடு சுரங்கப்பாதைக்குள் இருக்கும் பெட்டிகளில் உள்ள பயணிகள் பாதுகாப்பாக இருப்பதாக தாய்வான் ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு வடகிழக்கு தாய்வானில் ரயில் தடம் புரண்ட விபத்தில் 18 பேர் கொல்லப்பட்டு மேலும் 175 பேர் காயமடைந்தனர். எனினும் 1981 ஆம் ஆண்டு வடக்கு தாய்வானில் இடம்பெற்ற ரயில் விபத்தில் 30 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஹொங்கொங்கில் இனியும் நியாயமான தேர்தல் இல்லை



ஹொங்கொங்கில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைத்திருப்பது ஜனநாயகத்தை மறுப்பதாகவும் மக்களை அவமானப்படுத்துவதாகவும் உள்ளது என்று அந்த நகர செயற்பாட்டாளர் நாதன் லோ சாடியுள்ளார்.

'ஹொங்கொங்கில் இனியும் சுதந்திரமான நியாயமான தேர்தல் இருக்காது. அரசியல் கொள்கை மூலம் வேட்பாளர்கள் குறைக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலான ஆசனங்கள் சீன கம்யூனிய கட்சி மற்றும் கூட்டணி ஆதரவாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஜனநாயகம் மறுக்கப்பட்டிருப்பது மற்றும் மக்கள் அவமானப்படுத்தப்படுவது சீனா கம்யூனிஸ கட்சி எவ்வாறு நாகரிகத்தையும் சுதந்திரத்தையும் அழிக்கிறது என்பதை காட்டுகிறது' என்று ட்விட்டரில் லோ தெரிவித்துள்ளார்.


ஹொங்கொங் தேர்தல் முறையில் சர்ச்சைக்குரிய மாற்றங்களை கொண்டு வர சீனா ஒரு மனதாக ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் சட்ட மன்றத்தில் மக்களால் தேர்வு செய்யப்படுபவர் எண்ணிக்கை பாதியில் இருந்து ஐந்தில் ஒன்றாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மூலம் சீனா ஹொங்கொங் மீதான பிடியை மேலும் இறுக்கியுள்ளது.

# 'சாத்தான் காலணி' விற்பனை நிறுத்தம்

நைக்கி நிறுவனம், "சாத்தான் காலணிகளை" உருவாக்கிய நியூயோர்க்கைச் சேர்ந்த காலணி நிறுவனம் ஒன்றின் மீது வழக்குத் தொடுத்ததை அடுத்து அந்தக் காலணிகளின் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது.

MSCHF என்ற நிறுவனம் வடிவமைத்த அந்தக் காலணிகளில், நைக்கி நிறுவனத்தின் வணிக முத்திரை இடம் பெற்றுள்ளது. மேலும், அவை நைக்கி நிறுவனத்தின் எயார் மெக்ஸ் 97 காலணிகள் போலவே வடிவமைக்கப்பட்டுள்ளன.



அதனால், அவை நைக்கி நிறுவனத்தின் வணிக உரிமையை மீறுவதாக நீதிபதி கூறினார். அந்தச் சாத்தான் காலணிகள் பிரபல பாடகர் லில் நாஸ் எக்ஸை விளம்பரப்படுத்தி வடிவமைக்கப்பட்டவை.

மொத்தமாக, வெறும் 666 ஜோடிக் காலணிகள் மட்டுமே தயாரிக்கப்பட்டன. அந்த 665 ஜோடிக் காலணிகளும் ஏற்கனவே விற்பனையாகிவிட்டன. அவற்றில், ஒரு துளி மனித இரத்தமும் உள்ளது. அவற்றின் விலையோ 1,018 டொலராகும்.

கருத்துச் சுதந்திரத்தில் வலுவான நம்பிக்கை கொண்டுள்ளதாகவும், வழக்கிற்கு விரைவாகத் தீர்வு காண விரும்புவதாகவும் MSCHF நிறுவனம் தெரிவித்தது.

தனது காலணிகள், தனித்துவமான கலைப் படைப்புகள் என அந்த நிறுவனம் கூறிவருகிறது.

முட்டாள்கள் தினத்தில் ஏமாற்றம்:

# போலி இசை நிகழ்ச்சியில் திரண்ட கூட்டத்தை பொலிஸார் கலைப்பு

பெல்ஜியத் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் ஏப்ரல் முட்டாள்கள் தினத்தையொட்டி, சமூகத் தளத்தில் அறிவிக்கப்பட்ட போலி இசை நிகழ்ச்சிக்கு சுமார் 2,000 பேர் திரண்டுள்ளனர். இதன் போது பொலிஸாருடன் மோதல் ஏற்பட்டதால் கூடியவர்களை கலைப்பதற்கு தண்ணீர் பீச்சியடிக்கப்பட்டது.



பொலிஸ்அதிகாரிகள் மூவர் காயமடைந்ததாகவும், அவர்களில் ஒருவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த மார்ச் 31 ஆம் திகதி சமூகத் தளத்தில் அறிவிக்கப்பட்டிருந்த இசை நிகழ்ச்சி சட்டவிரோதமானது என்றும் அதன் ஏற்பாட்டாளர்கள் மீது வழக்குத் தொடுக்கப்படலாம் என்றும் பிரஸ்ஸல்ஸ் சட்ட அமுலாக்க அதிகாரிகள் எச்சரித்திருந்தனர். அங்கு வெளி இடங்களில் 4 பேருக்கும் அதிகமானோர் ஒன்றுகூடக்கூடாது என்ற கொவிட்–19 தொற்றுக்கு எதிரான கட்டுப்பாடு நடப்பில் உள்ளது.

11.5 மில்லியன் மக்கள் தொகை கொண்ட பெல்ஜியத்தில் 882,000க்கும் அதிகமான கொரோனா தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 23,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 ஏப்ரல் 3 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

03 முதல் 05வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.52 |
| லுஹர் | 12.15 |
| அஸர் | 03.19 |
| மஃரிப் | 06.20 |
| இஷா | 07.30 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் பங்குனி 21

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சப்தமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | நிறைவு |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | பொறுமை |
| தனுசு | வெற்றி |
| மகரம் | முயற்சி |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# முல்லை., ஐயன்குளம் மக்களுக்கு அரசாங்க வேலை வாய்ப்புகள்

## மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவும் நடவடிக்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி



முல்லைத்தீவு, ஐயன்குளம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு ஒரு மாத காலத்தினுள் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

ஐயன்குளம் பொலிஸ் நிலையத்தின் திறப்பு விழா நிகழ்வுக்கு வருகைதந்த பிரதேச மக்கள், முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

ஐயன்குளம் கிராமத்தில் வாழ்ந்து வருகின்ற மக்கள் பல்வேறு அடிப்படை பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக கொக்காவிலிலிருந்து ஐயன்குளத்திற்கான வீதி புனரமைக்கப்படாமையினால் நிர்வாக நகரமான முல்லைதீவிற்கு சுமார் 75 கிலோமீற்றர் தூரம் பயணிக்க வேண்டிய நிலைமை காணப்படுவதுடன் சீரான பஸ் போக்குவரத்துக்களும் மேற்கொள்ளப்படுவதில்லை.

06

# மதங்களை கடந்து மனித நேயம் உயர்வு என வாழ்ந்து காட்டியவர் இராயப்பு ஜோசப் ஆண்டகை

**சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள்**

கிறிஸ்தவ மக்களின் தவக்காலம், இறை நோன்பு காலத்தில் இராயப்பு ஜோசப் ஆண்டகை மறைவு அவரது மத, தவ வலிமையை காட்டுகின்றது. ஓய்வுநிலை ஆயர் எப்பொழுதும் மனித நேயத்தினை மதிக்கும் உயர்பண்பு மிக்கவர்.


மதங்களை கடந்து மனித நேயம் உயர்வானது என வாழ்ந்து காட்டியவர் என புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சரான, பிரதமரினது இந்து மத விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ ராமச்சந்திரக் குருக்கள் பாபு சார்மா தனது இரங்கலுரையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை சமாதானத்திற்கான சமயங்களின் பேரவை மூலம் நோர்வே நாட்டில் நடந்த பல்சமய கருத்தரங்கு நிகழ்வின்பொழுது அவருடன் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. மிகவும் எளிமையாக பழகும் பண்பு கொண்டவர். எமது இந்து பாரம்பரியங்களையும்

06

# ரஜினிகாந்துக்கு அதி உயர் தாதா சாகேப் பால்கே விருது

## இந்திய மத்திய அரசு அறிவிப்பு



இந்திய சினிமாத் துறையில் சாதனை படைத்தமைக்காக நடிகர் ரஜினிகாந்துக்கு தாதா சாகேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

51ஆவது தாதா சாகேப் பால்கே விருது நடிகர் ரஜினிக்கு வழங்கப்படுமென மத்திய அமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்திய சினிமாவில் சிறந்த பங்களிப்பை வழங்கியதற்காக ரஜினிகாந்துக்கு தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்படுவதாக இந்திய ஊடகத் தகவல்கள்

06

இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு

# மூன்று மணி நேரத்தினுள் PCR பரிசோதனை அறிக்கை

## பெற்றுக் கொடுக்க அமைச்சு நடவடிக்கை

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் விரைவாக தமது சுற்றுலாவை ஆரம்பிக்கும் முகமாக மூன்று மணித்தியாலங்களுக்குள் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துளளார்.

மருத்துவ ஆராய்ச்சி சங்கத்துக்கும் அமைச்சர் பிரச்சன்ன ரணதுங்கவுக்கும் இடையில் சுற்றுலாத்துறை அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது விமான நிலையத்தில் மருத்துவ ஆராய்ச்சி ஆய்வகத்தை தனியார் மயப்படுத்தப்பட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சரிடம் மருத்துவ ஆராய்ச்சி சங்கம் கேள்வியெழுப்பியது.

இதற்கு பதில் அளித்த அமைச்சர்,

விமான நிலைய மருத்துவ ஆய்வகத்தை தனியார் மயமாக்குவது தொடர்பாக பொது மக்கள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளனர்.

உலகளாவிய கொவிட் தொற்று நோயை வெற்றிகரமாக கட்டுப்படுத்திய பின்னர்

06

நாட்டின் இறைமை, சுயாதீனத்தை பாதுகாக்க

# தீர்மானத்துக்கு எதிராக நாம் ஒன்றுபட்டு நிற்பது முக்கியம்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



எமது இராணுவ வீரர்களை பாதுகாத்துக்கொள்ளவும் நாட்டின் இறைமை மற்றும் சுயாதீனத்தை பாதுகாக்கவும் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்திற்கு எதிராக நாம் ஒரு நாடாக ஒன்றுபட்டு நிற்பத்து முக்கியமாகுமென கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுடன் நடாத்திய சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மனிதவுரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 12 மணி நேரத்திற்குள், இலங்கை பற்றி ஆராய 13 புதிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பொறிமுறைக்காக 12.8 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இவ்வாறான செயற்பாடுகளுக்கு மனிதவுரிமைகள் பேரவையிடம் நிதி இல்லையென அதன் ஆணையாளர் பகிரங்கமாக கூறியிருந்தார்.

என்றாலும் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணைக்காக சாட்சியங்களை சேகரிக்க 72,000 அமெரிக்க டொலர்களும் வெளிநாட்டு பயணங்களுக்காக 41,500 அமெரிக்க டொலர்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. லண்டன் அல்லது பிற நாடுகளிலிருந்து இலங்கைக்குகூட வராமல் அறிக்கையைத் தயாரிக்கும் வகையில் ஆணையாளர் பணியாற்றியுள்ளார். நாட்டிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவே இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சமர்ப்பிக்கப்படும் ஆதாரங்களை 20 ஆண்டுகளுக்கு பார்க்க அனுமதிக்கப்படாது. இதன்மூலம் சாட்சியங்கள் அனைத்தும் மறைக்கப்படுகிறது.

முகமும் குரலும் இல்லாத மக்களின் வாயிலிருந்து வெளிவருவதைச் செயல்படுத்த முயற்சிக்கின்றனர். இவை நியாயமானவை அல்ல.

# மரியசேவியர் அடிகளாருக்கு வைத்தீஸ்வர குருக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்ப கர்த்தாவாகவும், வழி நடத்துனராகவும் திகழ்ந்தவர், எமது அன்புக்கு மரியாதைக்கும் உரியவராக விளங்கியவர் மரியசேவியர் அடிகள். கலையை உயிராக நேசித்து இறுதி வரை வாழ்ந்தவர். கலையை மேலும் சிறப்புடன் வளர்ப்பதற்கும் கலைஞர்களை ஊக்குவிக்கும் வண்ணம் பலவித பயன்தரு முயற்சிகளில் வெற்றி கண்டவர். எம்முடன் இணைந்து பல நிகழ்வுகள், இன்றும் மனதில் நிறைந்தவை. மரியசேவியரின் மறைவுச் செய்தி மிகவும் கவலை அளிக்கிறது. கலையுலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

06

# தேஜஸ்வராலயா கலைக்கூடம் ஆழ்ந்த அனுதாபம்

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகரும் கலைவாழ்வின் நெறிநின்று தூயவாழ்வு வாழ்ந்தவருமாகிய அருட்தந்தை மரியசேவியரின் பூதவுடல் நீத்து புகழுடலாகிய மறைவுச் செய்தி கேட்டு வேதனையடைகிறோம்.

கலைகளின் வளர்ச்சிக்காக மட்டுமல்லாமல் கலைஞர்களின் உயர்வுக்காகவும் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காகவும் பல்வேறு முயற்சிகளையும் பணிகளையும் முன்னகர்த்திய ஓர் பெருமகன் என்று கூறினால் மிகையாகாது. அமரரது ஆன்ம ஈடேற்றத்திற்காய் எமது தேஜஸ்வராலயா கலைக்கூட்டத்தின் சார்பில் பிரார்த்திக்கிறோம். கலைஞானச் சுடர் ஸ்ரீமதி சுபாஷினி, இயக்குனர், தேஜஸ்வராலயா கலைக்கூடம், கொழும்பு.

கொரோனா தொற்று

# இன்னமும் முழுமையாக கட்டுப்படுத்தப்படவில்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா தொற்று முழுமையாக கட்டுப்படுத்தப்படவில்லை என்றாலும், நிலைமை ஒப்பீட்டளவில் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக தொற்றுநோயியல் நிபுணர் டொக்டர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் 800 ற்கும் மேற்பட்ட நோயாளிகள் பதிவு செய்யப்பட்ட நிலையில் தற்போது 200 பேர் மட்டுமே நாளாந்தம் அடையாளம் காணப்படுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை குறைப்பதென்பது வேண்டுமென்றே தற்கொலை செய்வதற்கு சமம் என்றும் சுதத் சமரவீர சுட்டிக்காட்டினார். இருப்பினும், நாட்டில் சீரற்ற முறையில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் சோதனைகள் தொடர்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், பண்டிகை காலங்களில் முக்கிய இடங்களில் இருந்து வெளியேறும் மக்களுக்கு அன்டிஜென் சோதனைகளை நடத்தப்போவதாகவும் வைத்தியர் சுதத் சமரவீர குறிப்பிட்டார்.

# தேங்காய் எண்ணெய் தேவையில் 30% மாத்திரமே நாட்டில் உற்பத்தி

## உள்நாட்டுத் தேவைக்கு தேங்காய் போதுமானதாக இல்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் தேங்காய் எண்ணெய்யின் வருடாந்த தேவையில் 30 வீதம் மட்டுமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டுக்கு 80,000 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் தேவையாக உள்ளது. இதில் 30 சதவீதம் மட்டுமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்மூலம், உள்ளூர் தேங்காய் எண்ணெய் தேவையில் 70 சதவீதம் இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்றும் அதிகார சபையின் பணிப்பாளர் பியசேன எதிரிமன்னே சுட்டிக்காட்டினார்.

இதன்படி தேங்காய் பொருட்கள் மற்றும் உள்நாட்டு தேவைகள் தொடர்பான தொழில்களின் தேவையை பூர்த்தி செய்ய நாட்டில் தேங்காய் உற்பத்தி போதுமானதாக இல்லை.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக, உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க தேங்காயை இறக்குமதி செய்ய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சிறை அறைகளுக்குள் இருந்தபடி சிரம் தாழ்த்தி அஞ்சலிக்கின்றோம்

## மறைந்த பேராயருக்கு தமிழ் அரசியல் கைதிகள் இரங்கல்

தமிழ் அரசியல் கைதிகள் சிறை வைக்கப்பட்டிருக்கும் அத்தனை சிறைச்சாலைகளினதும் வாசல்களை தரிசித்து கைதிகளின் மனங்களில் தன்னம்பிக்கையை ஊட்டி ஒரு அன்னையை போல ஆற்றுப்படுத்தி ஆசிர் வதித்த பேராயர் ஆண்டகையின் ஆத்மா பரம பதமடைய சிறை அறைகளுக்குள் இருந்தபடி சிரம் தாழ்த்தி அஞ்சலிக்கின்றோமென தமிழ் அரசியல் கைதிகள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

மன்னார் ஆயர் (ஓய்வு ) அதி வணக்கத்துக்குரிய கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கான இரங்கல் செய்தியை சிறைகளுக்குள்ளிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள், தமது பெற்றோர், உறவினர்கள் ஊடாக குரலற்றவர்களின் குரல் அமைப்புக்கு தெரியப்படுத்தியுள்ளனர். அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்களது இரங்கல் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உண்மையான இயேசுவின் சீடராக வார்த்தைகளால் அல்லாமல் செயல்களால் வாழ்ந்து காட்டியவர் முன்னாள் ஆயர் பேரருட்திரு இராயப்பு ஜோசப் ஆண்டகை.

பொதுப் பார்வைக்குக் காட்சிப்படுத்தும் எந்தச் செயல்களிலும் சாட்சியம் இருப்பதில்லை.

விளம்பரம் இல்லா நற்காரியங்களே ஆண்டவன் சன்னிதானத்தில் என்றும் விலைமதிப்பானவை என்பதற் கொப்ப, சிறைக்கொட்டடிகளில் சிதைவுற்றுக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் அத்தியாவசிய விடயங்களில் அழையா விருந்தாளியாக தன்முனைப்பு கொண்டு பலநற்காரியங்களை செய்திருந்தார் ஆயர். மனித நேயமும்.

பிறரன்பும் மிகுந்த பெருந்தகையான இவர் தமிழ் அரசியல் கைதிகள் சிறைவைக்கப்பட்டிருக்கும் அத்தனை சிறைச்சாலைகளினதும் வாசல்களை தரிசித்து கைதிகளின் மனங்களில் தன்னம்பிக்கையை ஊட்டி ஒரு அன்னையை போல ஆற்றுப்படுத்தி ஆசிர் வதித்து வந்திருந்தார்.

இவ்வாறு சொற்கோர்வைகளுக்குள் மாத்திரம் வரையறுத்துவிட முடியாத பரந்து விரிந்த செயலெல்லையை கொண்டிருந்த அதி வணக்கத்துக்குரியவரின் அர்ப்பணிப்புக்களில் இட்டு நிரப்ப முடியாத இடைவெளி ஏற்பட்டுள்ளமையானது பெரும் வருத்தத்திற்குரியதே.

என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று அலுத்தோயாது மக்கள் பணி செய்து வந்த மரியாதைக்குரிய மகானின் பேரிழப்பால் துயரமடைந்திருக்கின்ற அத்தனை மனித இதயங்களுக்கும் தமிழ் அரசியல் கைதிகளாகிய நாம் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழ் மக்களின் ஓர் உயர்ந்த குரல் ஓய்ந்து விட்டது

எமது தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தனது இறுதி மூச்சுவரை இயன்றளவில் குரல் கொடுத்து வந்தவர் மறைந்த முன்னாள் ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப்.

எமது அன்புக்கும் மரியாதைக்கும் உரியவராக விளங்கியவர். எம்முடன் இணைந்து பல இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒன்றாக இணைந்து உயரிய குரல் கொடுத்தவர். தமிழ் மக்களின் சனநாயக உரிமை மறுக்கப்பட்ட பல்வேறு சந்தர்ப்பங்களில் வேதனையுடன் கருத்துக்கள் பகிர்ந்தவர். மதிப்பார்ந்த இராயப்பு ஜோசபின் மறைவுச் செய்தி மிகவும் கவலை அளிக்கிறது.

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 21ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 20

## குறள் தரும் சிந்தனை



ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்

தாம் சேர்த்து வைத்துள்ள பொருளைப் பிறருக்குக் கொடுக்காமல் வைத்திருந்து பின் இழந்து விடும் வன் கண்மை உடையவர், பிறர்க்கு கொடுத்து மகிழும் மகிழ்ச்சியை அறியாரோ.

# அன்றாட உணவுப் பொருட்களில் நச்சு இரசாயனங்களின் ஆதிக்கம்!

இலங்கை மக்கள் உணவுப் பொருட்களின் ஊடாக நச்சுப் பொருட்களை அதிகளவில் உள்ளெடுத்து வருவதாக அதிர்ச்சியூட்டும் தகவல் ஒன்றைத் தெரிவித்துள்ளார் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவ நிபுணர் அநுருத்த பாதெனிய. உலகில் உணவுகளின் மூலம் இரசாயன நச்சுப் பதார்த்தங்களை மிகக் கூடுதலான அளவில் உள்ளெடுப்பவர்கள் இலங்கை மக்கள்தான் என்ற மற்றொரு அச்சமூட்டும் தகவலையும் மருத்துவர் அநுருத்த பாதெனிய குறிப்பிட்டுள்ளார்.

பாரதூரமான இந்த அதிர்ச்சி தருகின்ற தகவலானது சாதாரண ஒரு நபரிடமிருந்து வந்திருந்தால் அதை எம்மால் புறக்கணித்து விட முடியும். ஆனால் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவரான விசேட மருத்துவ நிபுணரிடமிருந்து வந்துள்ள அத்தகவலை அலட்சியப்படுத்து விட முடியாதிருக்கின்றது. அது வெறும் தகவல் அல்ல, அது இலங்கை மக்களுக்கான ஒரு எச்சரிக்கை! எமது மக்களின் எதிர்கால ஆரோக்கியத்தைத் தீர்மானிக்கப் போகின்ற ஒரு விடயம் அது.

நச்சுப் பொருட்களை உள்ளெடுப்பதனால் உடலில் எவ்வாறான பாதகமான விளைவுகள் ஏற்படுமென்பதை புதிதாகக் கூற வேண்டிய அவசியமில்லை. இது தொடர்பாக ஊடகங்களில் தொடர்ச்சியாக அறிவூட்டும் தகவல்கள் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. மக்கள் மத்தியில் அதிகரித்து வருகின்ற சிறுநீரக பாதிப்பு, புற்றுநோய் போன்ற பாரதூரமான வியாதிகள் பலவற்றுக்கு நச்சு இரசாயனங்கள் பெரிதும் காரணமாக அமைவதாக மருத்துவ தகவல்களில் எச்சரிக்கப்பட்டு வருகின்றது.

நச்சு இரசாயனங்கள் மனிதருக்கு மாத்திரமன்றி, எம்மைச் சூழவுள்ள பிராணிகள் மற்றும் தாவரங்களுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. தரைச் சூழல், நீர்ச்சூழல், வளிமண்டலம் ஆகிய அனைத்துக்குமே நச்சுப் பொருட்கள் பெரும் பாதிப்புகளை உண்டாக்குகின்றன. நச்சுப் பொருட்களின் பாவனையானது அதிகரித்துச் செல்வதனால் அதனால் உண்டாகின்ற பாதிப்புகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றன.

நாம் இன்று பயன்படுத்துகின்ற உணவுப் பொருட்கள் அனைத்திலுமே நச்சு இரசாயனப் பதார்த்தங்கள் இரண்டறக் கலந்து விட்டன. தானிய வகைகள், பழங்கள், காய்கறிகள், உபஉணவுப் பொருட்கள், மென்பானங்கள், பொதி செய்யப்பட்ட உணவுகள் என்றெல்லாம் எந்தவொரு உணவை எடுத்துக் கொண்டாலும், நஞ்சற்ற உணவைக் காண்பதே அரிதாகி விட்டது.

அனைத்துப் பயிர்களுக்கும் இடப்படுகின்ற பசளைகளில் நச்சு இரசாயனங்கள் கலந்திருக்கின்றன. பயிர்களுக்கு விசிறப்படுகின்ற பீடைநாசினிகள் அனைத்துமே கொடிய நச்சுப் பதார்த்தங்கள் ஆகும். உணவுப் பொருட்களை பழுதடையாமல் வைத்திருப்பதற்காக இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பழங்களைப் பழுக்க வைப்பதற்காக இரசாயனம் பயன்படுத்தப்படுகின்றது. இவையெல்லாம் போதாதென்று உணவுகளின் மணமூட்டிகள், சுவையூட்டிகள், நிறமூட்டிகள் போன்றவையெல்லாம் எமது உடலுக்கு பெரும் தீங்கை விளைவிக்கின்ற நச்சுப் பொருட்கள் ஆகும்.

எமது அன்றாட உணவுப் பொருட்களில் நச்சு இரசாயனத்தைத் தவிர்ப்பதென்பது இலகுவான காரியமல்ல. சுருங்கச் சொல்வதாயின் நச்சு இரசாயனங்களுக்கு நாம் பழகிப் போய் விட்டோமென்பதே உண்மை. இரசாயனப் பசளைகளுக்குப் பதிலாக இயற்கை சேதனப் பசளைகளைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்ற போதிலும் அத்திட்டம் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியளிப்பதாக இல்லை. இரசாயனப் பசளைகள் இல்லாது போனால் விளைச்சலே கிடையாதென்பதுதான் உண்மை நிலை.

நாம் நீண்ட காலமாக இழைத்து வருகின்ற தவறுகளே இதற்கான காரணங்களாகும். பல தசாப்த காலத்துக்கு முன்னரே எமது விவசாயிகள் இயற்கைப் பசளையைக் கைவிட்டு இரசாயனப் பசளைக்கு பழக்கப்பட்டு விட்டனர். சனத்தொகையின் அதிகரிப்புக்கேற்ப உணவு உற்பத்தியின் அதிகரிப்பு அவசியம். எவ்வாறாயினும் கூடுதலான விளைச்சலை பெற்றுக் கொண்டால் போதுமென்பதே விவசாயிகளின் எண்ணமாக உள்ளது.

இதன் காரணமாக அளவுக்கு மீறிய உரப் பாவனை மற்றும் பீடைநாசினிகளின் பாவனையினால் எமது அன்றாட உணவுகளே விஷமாகிப் போயுள்ளது. கடைகளில் விற்கப்படுகின்ற எந்தவொரு பீடைநாசினியையோ அல்லது உரவகைகளையோ விவசாயிகள் தடையின்றி வாங்கிப் பயன்படுத்துகின்ற நிலைமை ஆரோக்கியமானதல்ல. அதேபோன்று உணவுப் பொருட்களைப் பதப்படுத்துவதற்கும் அவ்வாறுதான் தாராளமாக இரசாயனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

நாம் அன்றாடம் உண்கின்ற அத்தனை உணவுகளுமே இன்று நஞ்சாகிப் போய் விட்டன. இவ்வாறான ஆபத்து தொடர்வதற்கு இனிமேலும் இடமளிக்க முடியாது. உணவில் நச்சுப் பதார்த்தங்கள் கலப்பதைத் தடுப்பதற்கான வழிவகைகளைக் காண்பதில் நாடு இனிமேல் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# நாட்டில் அநாவசிய செலவினங்களை ஜனாதிபதி பெருமளவு குறைத்துள்ளார்

## ஸ்ரீலங்கா பொதுஜன சட்டத்தரணிகள் சங்கத்தின் கண்டி மாவட்ட அமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்வில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2020ம் ஆண்டு ஜனாதிபதி காரியாலயம் மூலம் மாத்திரம் 1.7 பில்லியன் ரூபாவை சேமித்துள்ளதாக விவசாயத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

'அநாவசியமான செலவுகளைக் குறைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வருடத்தில் பெருமளவு பணத்தை நாட்டிற்கு மீதப்படுத்தியுள்ளார். ஆட்சியிலிருந்த கடந்த ஒன்றரை வருட காலத்தில் வெளிநாட்டு பயணங்களுக்காக 32 இலட்சம் ரூபாவை மாத்திரமே ஜனாதிபதி செலவிட்டுள்ளதாக அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2019ம் ஆண்டு ஜனாதிபதி காரியாலய செலவாக 3.02 பில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளார். ஆனால் தற்போதைய ஜனாதிபதி 2020ம் ஆண்டு 1.2 பில்லியன் ரூபாவையே செலவிட்டுள்ளார் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன சட்டத்தரணிகள் சங்கத்தின் கண்டி மாவட்ட அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் கண்டி ரோயல் கண்டியன் ஹோட்டலில் நடைபெற்ற கூட்டத்திலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்ததாவது:

அரசியலமைப்பின் 20வது திருத்தம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை 30க்கும் அதிகமாக அதிகரிப்பார் என சிலர் கூறினார்கள். ஆனால் ஒரு அமைச்சுப் பதவியையும் அதிகரிக்க அவர் நடவடிக்கை எடுக்கவில்லை.



இன்று அமைச்சர்களால் வாகனங்கள் பெற முடியாது. அது தடை செய்யப்பட்டுள்ளது. அரச நிறுவனங்களுக்கு நியமிக்கப்படும் தலைவர்களுக்கு கடந்த அரசாங்கம் மில்லியனளவில் சம்பளம் வழங்கியது. டெலிகொம் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரருக்கு 42 இலட்சம் ரூபா சம்பளமாக வழங்கப்பட்டது.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எந்தவொரு நிறுவனத்தின் தலைவருக்கும் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் சம்பளம் வழங்க வேண்டாமெனக் கூறியுள்ளார். அவர் இதனை விளம்பரத்துக்காக செயய வில்லை. கடந்த ஒன்றரை வருட காலத்தில் ஜனாதிபதி என்ன செய்தார் எனக் கேட்பவர்களுக்கு இவற்றை ஞாபகப்படுத்த வேண்டும்.

பாதாள உலக செயற்பாடுகளை கட்டுப்படுத்தல் மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையை அரசாங்கம் வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறது. கொவிட் 19 தொற்று காரணமாக இன்று சுற்றுலாத்துறை வீழ்ச்சி கண்டுள்ளது. வெளிநாட்டு பணியாளர்கள் மூலம் அந்நிய செலாவணி நாட்டுக்கு கிடைப்பதில்லை. முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய விரும்புவதில்லை. ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்தை அவ்வாறே செயல்படுத்தி வருகின்றார்.

ஒரு இலட்சம் கிலோ மீற்றர் பாதை காபட் இடப்பட்டுள்ளது. 60,000 பட்டதாரிகள் மற்றும் குறைந்த வருமானமுடைய குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சார்பு பொருளாதாரத்திலிருந்து விடுபட்டு உற்பத்தி பொருளாதாரத்தை மேற்கொள்ள நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். கிழங்கு, மிளகாய், பெரிய வெங்காயம் என்பவற்றை இறக்குமதி செய்வதற்கு வருடமொன்றுக்கு 250 பில்லியன் ரூபா செலவாகின்றது. பால்மாவை இறக்குமதி செய்ய நாளொன்றுக்கு ஒரு மில்லியன் டொலர் தேவைப்படுகிறது. எதிர்வரும் நான்கு வருடங்களுக்குள் நாம் பாலுற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டும்".

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன சட்டத்தரணிகள் சங்கத்தின் சிரேஷ்ட உபதலைவர் மற்றும் கண்டி மாவட் அமைப்பின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் உதயன்ன கிரிந்திகொட உரையாற்றுகையில் "முப்பது வருட கால யுத்தத்தில் இருந்து நாட்டை மீட்ட வேளையில் ராஜபக்ஷக்கள் பற்றி போலியான கதைகளை கூறி நல்லாட்சி அரசாங்கத்தை கொண்டு வர சிலர் நடவடிக்கை எடுத்தார்கள். அந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த சிறிது காலத்திலேயே தாம் எடுத்த முடிவு தவறு என்பதை மக்கள் புரிந்து கொண்டார்கள். தேசிய பாதுகாப்பு பூச்சியமாகி பேராபத்து வாசலைத் தட்டும் போதுதான் மக்களுக்கு மீண்டும் ராஜபக்ஷக்களின் மதிப்பு தெரிய வந்தது. நல்லாட்சி அரசாங்கம் இந்த நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் 12 ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருந்தது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியது. நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் எம். சி.சி ஒப்பந்தத்தை ரத்து செய்தோம். இந்த அரசாங்கம் என்ன செய்தது எனக் கேட்பவர்கள் அவற்றை மறந்து விட்டார்கள். இன்று தேசிய பாதுகாப்பு தொடர்பில் மக்களுக்கு எதுவித சந்தேகமோ, பயமோ இல்லை. புலனாய்வுப் பிரிவினர் பலப்படுத்தப்பட்டு சரியான முறையில் அவர்கள் செயல்படுகின்றார்கள்.

சட்டத்தரணிகள் என்போர் தங்கள் திறமையால் கஷ்டப்பட்டு பணம் ஈட்டி அரசாங்கத்துக்கு வரி செலுத்துபவர்கள் ஆவர். கடந்த ஜனாதிபதித் தேர்தல் போன்று பொதுத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சட்டத்தரணிகள் சங்கம் பெரும் பணியாற்றியுள்ளது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகம, அனுராத ஜயரத்ன , பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி வசந்த யாபா பண்டார, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ. தயாரத்ன, செயலாளர் அதுலத் வில்வா, கண்டி அமைப்பின் செயலாளர் ஜானக சகலசூரிய ஆகியோரும் இந்நிகழ்வில் உரை நிகழ்த்தினார்கள்.

தமிழில்:
வயலட்...

# தேங்காய் எண்ணெயின் தரத்தை பேணுவதில் அவதானம் அவசியம்



**உலகில் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக இருந்த நாம் இன்று தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்யும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.**

இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் புற்றுநோய் காரணியான இராசாயனம் அடங்கியுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனுடன் தேங்காய் எண்ணெய் பாவனை தொடர்பாகவும் தேங்காய் எண்ணெயை மீண்டும் உள்ளூரில் உற்பத்தி செய்வது தொடர்பாகவும் சமூகத்தில் பேசப்படுகிறது. பலரும் பலவிதமான கருத்துக்களை முன்வைக்கின்றாரகள்.

தேங்காய் எண்ணெய் எமது நாட்டுக்கு அத்தியாவசியமான ஒன்றாகும். இது பண்டிகை மாதமாகும். தேங்காய் எண்ணெய் எதிர்வரும் இரண்டு வாரங்களில் அதிகமாக பாவனைக்கு தேவைப்படும். இவ்வாறான சூழ்நிலையில்தான் தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் உள்ளதென கண்டறியப்பட்டுள்ளது.

முதியவர்கள் இளையவர்களென அனைவரும் உணவுக்கு அதிகமாக பாவிக்கும் தேங்காய் எண்ணெயில் இவ்வாறான இரசாயனம் காணப்படுவது எவ்வளவு பயங்கரமான விடயமென்பதை புதிதாக கூறத் தேவையில்லை. இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் உலகில் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக இருந்த நாம் இன்று தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்யும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

ஆனால் உண்மை நிலைமை அதுதான். தேங்காய் அதிகமாக உள்ள நாடு எதற்காக தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்ய வேண்டும் என்பதை வேறாக ஆராய வேண்டும். எமது நாட்டில் சரியான முறையில் தேங்காய்களை சேகரிக்க முடிந்தால் கொப்பறா தேங்காய் மூலம் உள்ளூரில் தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் நீண்ட காலமாக இது பற்றி திட்டமிடப்படாமையினால் தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமது நாட்டிலேயே உற்பத்தி செய்திருந்தால் புற்றுநோய்க்கான நச்சு இரசாயனம் நாட்டுக்குள் வந்ததை தடுப்பதோடு அந்நிய செலாவணியையும் மீதப்படுத்தியிருக்கலாம். அதனால் நாம் உடனடியாக செய்ய வேண்டியது நாட்டில் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதாகும். அதுவரை உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தகுதி வாய்ந்த நிறுவனத்தின் மூலம் தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்ய வேண்டும்.

தற்போதைய நிலைமைக்கு காரணம் உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களுக்குப் பதிலாக தரம் குறைந்த தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்யும் நிறுவனத்திடமிருந்து இறக்குமதி செய்து அதனை மீளப் பொதி செய்து விநியோகித்தமையாகும்.

நாம் மேற்கொண்ட தேடுதல்களுக்கமைய தற்போது சந்தையில் எஸ். எல். எஸ் சான்றிதழ் கொண்ட சில தேங்காய் எண்ணெய் வகைகளே உள்ளன. எமது நாட்டில் தேங்காய் எண்ணெய்க்கு எஸ். எல். எஸ் சான்றிதழ் அத்தியாவசியம் என உத்தரவிட முடியாது. அவ்வாறான உத்தரவை பிறப்பிக்க வேண்டுமானால் பாவனையாளர்கள் அதிகாரசபை சட்டமொன்றை பிரகடனப்படுத்த வேண்டும். இவ்வாறான சட்டமொன்றை தாயாரிப்பதன் மூலம் பாவனையாளர்களை பாதுகாக்க முடியும்.

இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் நன்றாக முற்றிய தேங்காய்களை சேகரித்து காய வைத்து கொப்பறாவாக்கி எமது பாட்டி, அம்மாமார்கள் வீட்டிலேயே எண்ணெயை காய்ச்சினார்கள். அந்நாட்களில் தேங்காய் எண்ணெய் பாவனை மிக உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. அன்று இருதய நோய் அபூர்வமாகவே காணப்பட்டது. தேங்காய் எண்ணையால் புற்றுநோய் உண்டானதாக வரலாறு இல்லை. இன்று அனைத்தும் தலைகீழாக மாறியுள்ளன. இன்று பலர் இருதய நோய்க்காக பைபாஸ் சத்திர சிகிச்சை செய்துள்ளார்கள். அதற்குக் காரணம் தவறான உணவுப் பழக்கமும், உணவுக்காக பயன்படுத்தப்படும் எண்ணெயுமாகும்.

இறக்குமதி செய்யப்பட்டிருப்பது புற்றுநோய் இரசாயனம் உள்ளடங்கியது என உறுதி செய்யப்பட்ட தேஙகாய் எண்ணெய் ஆகும். இவ்வாறான வியாபாரம் 2012ம் ஆண்டும் பேசப்பட்டது. அன்று தேங்காய் எண்ணெயுடன் பாம் எண்ணெய் கலந்து விற்கப்பட்டது. இவ்வாறான தரங் குறைந்த எண்ணெய் மூலம் தயாரிக்கப்படும் ஹோட்டல் உணவுகளால் புற்றுநோய், இருதய நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது என வைத்தியர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். அதிகாரிகளும் இது குறித்து கவனம் செலுத்துவது குறைவு. இவ்வாறான தரங் குறைந்த தயாரிப்புகளை நாட்டுக்குள் வர விடாமல் தடுப்பது அவசியம்.

# பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் சமூகத்திற்கு தற்போது முக்கிய தேவை

**ஜனநாயக விழுமியங்களை மதிக்கின்ற தகுதி வாய்ந்த இளம் பெண்கள் அரசியலில் பிரவேசிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று கடந்த வாரம் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் நடைபெற்றது.**

வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பெண் பிரதிநிதிகள் சிலரால் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உள்ளூராட்சி மன்றங்களில் 25 வீதமான இட ஒதுக்கீட்டை பெண்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் 2018 ஆம் ஆண்டு சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த 25 வீத ஒதுக்கீட்டை முழுமையாக பெற்றுக் கொள்வதிலும் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தில் மொத்தமாக 25 பெண் பிரதிநிதிகள் உள்ளனர். இது மொத்த உறுப்பினர்கள் தொகையில் 22 வீதமாகும். இந்நிலையில் பெண் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிக்கும் முகமாக பெண் வேட்பாளர்களை ஊக்கப்படுத்தும் திட்டத்தை கட்சி பேதமற்ற முறையில் முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட பெண் பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

"2018 ஆம் ஆண்டு சட்டமூலம் அமுலுக்கு வந்ததன் பின்னர் அரசியலில் பிரவேசிக்கும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. பெரும்பாலான பெண்கள் இதனை ஒரு மகத்தான வாய்ப்பாக கருதினாலும், சில பெண்கள் சட்ட நிர்ப்பந்தத்தால் சந்தர்ப்பவசமாக அரசியலில் பிரவேசித்தனர். என்றாலும் மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் அரசியலில் களமிறங்கி பிரதிநிதிகளாகச் செயற்பட்டு பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்ட பின்னர் பெண் அரசியல் பிரதிநிதித்துவத்தின் தேவையை அனுபவரீதியாக உணர்ந்துள்ளோம்.

நாம் அரசியலில் ஈடுபட்ட பின்னர் மக்கள் அபிவிருத்திக்காக குரல் கொடுக்கும் சந்தர்ப்பமும், பெண்களை பாதிக்கும் பிரச்சினைகள் பற்றி உரிய இடங்களில் பேசும் வாய்ப்பும் எமக்கு கிடைத்துள்ளது. ஆகவே எதிர்கால தேர்தல்களில் பெண் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். அரசியலில் பெண்கள் இருப்பது பெண்களின் உரிமையை பாதுகாக்கவும் பெண்களை பாதிக்கும் விடயத்தில் தீர்மானம் எடுக்கவும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் வன்முறையற்ற சூழலை உறுதிப்படுத்தவும் தேவையாக இருக்கின்றது. அந்த வகையில் நான்கு அம்சங்களைக் கொண்ட ஒரு பிரேரணையை முன்வைத்து நாம் செயற்பட விரும்புகின்றோம். நான்கு அம்ச பிரேரணைகள் பின்வருமாறு:

சட்டம் இயற்றப்படும் பாராளுமன்றத்திலும் உள்ளூர் மக்களுக்குத் தேவையான முக்கிய தீர்மானங்களை எடுக்கும் இடங்களான உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபையிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்கள், தேர்தல் திணைக்களம், கட்சித் தலைமைகள் மற்றும் சமூக மட்டத்தில் இயங்கும் சகல நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

ஜனநாயக விழுமியங்களை மதிக்கக் கூடிய பல்வேறு துறைகளில் முன்னோடிகளாகத் திகழும் தகுதி வாய்ந்த இளம் பெண்கள் அரசியலில் ஈடுபட முன்வர வேண்டும். அதே நேரம், அரசியல் கட்சிகள், குடும்ப உறுப்பினர்கள், சமூக மட்ட அமைப்பினர் அதற்கான ஊக்குவிப்பை வழங்க வேண்டும்.

சமூகத்தில் வன்முறைகளால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர். பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான வன்முறைகளை தடுத்து, அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, வன்முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பெண்கள் அரசியலில் பிரவேசிப்பது மிகவும் இன்றியமையாததாகும். அத்தோடு பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை சமூகத்தின் தேவையாகவும் பெண்களின் முக்கிய உரிமையாகவும் கருத வேண்டும்.

தற்போது, அரசியலில் உள்ள பெண்களின் தீர்மானம் எடுக்கும் ஆற்றலையும், பொதுத்தளத்தில் தாக்கமான முறையில் இயங்கும் ஆற்றலையும் ஊக்குவிக்க கட்சிகளும் ஏனைய நிறுவனங்களும் முன்வர வேண்டும் என்ற நான்கு அம்ச பிரேரணைகளும் முன்வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



## ஜனநாயக விழுமியங்களை மதிக்கின்ற தகுதி வாய்ந்த இளம் பெண்கள் அரசியலில் பிரவேசிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வவுனியாவில் ஊடகவியலாளர் சந்திப்பு

சில்மியா யூசுப்...

# இன, மத வேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் சேவை புரிகின்றேன்

## நிந்தவூர் பிரதேச சபையின் உபதவிசாளர் வை.எல். சுலைமாலெப்பை கூறுகின்றார்

**'நிந்தவூர் மக்கள் எனக்கும், எனது கட்சிக்கும் வாக்களித்து பிரதேச சபையின் உபதவிசாளர் பதவியை எனக்கு பெற்றுத் தந்தார்கள். பிரதேச சபைக்கு நான் தெரிவு செய்யப்பட்ட நாள் முதல் பல அபிவிருத்திகளை எமது ஊருக்கும், வெளி ஊர்களுக்கும் செய்து வருகின்றேன். அந்த அடிப்படையில் எமது அயல் கிராமமான காரைதீவு பிரதேசத்தில் கல்விக்காக என்னால் உதவி செய்ய முடிந்துள்ளது' என்று நிந்தவூர் பிரதேச சபையின் உபதவிசாளரான வை.எல். சுலைமாலெப்பை தெரிவித்தார்.**

தினகரனுக்கு கருத்துத் தெரவித்த அவர் "கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையின் திருத்த வேலைகளுக்காக கடந்த வருடம் சுமார் 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அன்மையில் திருத்த வேலைகள் முடிவுற்றுள்ளன. முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எம்.முஸ்தாபாவின் அரசியல் பாசறையில் வளர்ந்த நான் இன, மத வேறுபாடுகள் இல்லாமல் அனைவருக்கும் சேவையாற்றி வருகின்றேன். மேலும் காரைதீவு சண்முகா மகாவித்தியாலயத்தின் ஆராதனை மண்டப திருத்த வேலைக்காக சுமார் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதுவும் நிறைவு பெற்றுள்ளது" எனக் குறிப்பிட்டார்.

"மேலும் சில பாடசாலைகளுக்கு ஆளுநரின் பணிப்புரைக்கமைய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன. கடந்த மூன்று வருட காலத்தில் மத்திய அரசு மற்றும் மாகாண சபையினூடாக கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான வேலைகள் எமது ஊரில் என்னால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இன்னும் இன்னும் பல கோடி ரூபா நிதியிலான அபிவிருத்திகளை எமதூருக்கும், அயல் கிராமங்களுக்கும் செய்ய மக்களது ஒத்துழைப்பும் ஆதரவினையும் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாறான அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்துச் செல்ல உதவி செய்யும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், இராஜங்க அமைச்சர் விமலவீர திசாநயாயக்க, அபிவிருத்தி குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வீரசிங்க உட்பட பலருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று உபதவிசாளர் வை.எல். சுலைமாலெப்பை மேலும் தெரிவித்தார்.



# சுற்றுலாத் துறையில் பெண்களுக்கு வாய்ப்பு வழங்கும் ஹில்டன் லிய திரிய திட்டம்

**பெண்கள் பல்வேறு துறைகளிலும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வரும் நிலையில், அவர்கள் சமூகத்தில் பாரிய பொறுப்புகளை வகித்து வருகின்றனர். இவர்களின் பணிகளை ஹோட்டல் துறைகளுக்கும் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் சுற்றுலாவின் விருந்தோம்பல் துறையில் தொழிலை உருவாக்கும் வகையில், ஆர்வமுள்ள உள்ளூர் பெண்களுக்கு பயிற்சியளிக்கப்படவுள்ளது.**

அதற்காக இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்துடன் இணைந்து உலகின் முன்னணி விருந்தோம்பல் சேவைகளை வழங்கும் நிறுவனமான ஹில்டன், பெண்களுக்கான 'ஹில்டன் லிய திரிய' எனும் மேம்பாட்டுத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துள்ளது.

கடந்த 26ஆம் திகதியன்று கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது விருந்தோம்பல் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட 9 யுவதிகளுக்கான அனுமதி சான்றிதழ் வழங்கப்பட்டது. இரண்டு தொகுதிகளாக இடம்பெறும் இப்பயிற்சி நெறியின் போது, துறைசார் கோட்பாடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் இருமாத பயிற்சியும், நாட்டிலுள்ள ஹில்டன் கிளை நிறுவனங்களில் ஆறு மாதகால பயிற்சியும் பெற்றுக் கொடுக்கப் படவுள்ளது.

பயிற்சிக் காலத்தின் போது தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படுவதுடன், கொடுப்பனவும் வழங்கப்படும். பயிற்சியின் பின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் வெளிநாடுகளிலுள்ள ஹில்டன் ஹோட்டல் கிளைகளில் பணி புரிவதற்கான வாய்ப்பும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹில்டன் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மேற்படி பயிற்சி நெறிக்கு மகேந்திரன் கிரிஜா, சஞ்சனி சங்கல்பனா, சயுரி ஜயதிலக்க, அருணி நரேந்திரன், செஹாரா பெரேரா, தக்ஷிலா பெரேரா, ஹெரந்தி வாசனா, தினேத்மா பமுனு ஆராச்சி மற்றும் விஸ்பா தசுனி ஆகிய மாணவிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் அவர்களை பயிற்சியில் இணைத்துக் கொண்டதற்கான சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.

திறன் பயிற்சி மற்றும் அபிவிருத்தி மூலம் பெண்களின் பொருளாதாரத்தை வலுவூட்டும் ஹில்டன் லிய முன்னோடி பயிற்சித் திட்டமானது, இலங்கையில் பெண்களை மேம்படுத்துவதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. 2030ஆம் ஆண்டாகும் போது சமூகத்தில் ஏற்படுத்தக் கூடிய தாக்கத்திற்கு ஈடுகொடுக்கும் வகையிலான வளர்ச்சி, நிலையான தீர்வு மற்றும் எதிர்பாராத சூழ்நிலைகளிலும் அனைவருக்கும் பொருளாதார வாய்ப்புகளை உறுதி செய்வதில் தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவது என்ற ஹில்டனின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இத்திட்டம் உருவாக்கப்படடுள்ளதாக ஹில்டன் நிறுவனத்தின் இலங்கைக்கான பகுதி பொது முகாமையாளர் மனேஷ் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய இலங்கை சுற்றுலாத்துறையின் தலைவர் கிமார்லி பெர்னாண்டோ, இலங்கைப் பெண்களின் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்த ஹில்டன் போன்ற உலகளாவிய ரீதியில் பிரபலமான நிறுவனத்துடன் இணைந்து பணியாற்ற சந்தர்ப்பம் கிடைத்தமை மகிழ்ச்சியை தருகிறது.

இவர்களால் வழங்கப்படும் சேவைகளைப் பெற்று பெண்கள் பயனடைய வேண்டும். சமூகத்தில் பெண்கள் பல்வேறு பொறுப்புகளை நிறைவேற்றி வருகின்றனர்.

இந்நிலையில் ஹில்டன் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஹில்டன் லிய திரிய பயிற்சித் திட்டம் பெண்களுக்கான வலுவூட்டல்களை மேற்கொள்ளும் பயனுள்ள திட்டமாக விளங்கும் என தாம் நம்புவதாக தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஹில்டன் கொழும்புக்கான பொது முகாமையாளர் லிண்டா கீப்பிங், ஹில்டன் நிறுவனத்தின் இலங்கைக்கான பொது முகாமையாளர் மனேஷ் பெர்னாண்டோ, இலங்கை சுற்றுலாத்துறையின் தலைவர் கிமார்லி பெர்னாண்டோ உட்பட ஹில்டன் ஹோட்டல் பெண் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.





ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிக்கான சான்றிதழை சுற்றுலாத்துறை தலைவர் கிமார்லி பெர்னாண்டோவிடமிருந்து பெறும் புசல்லாவையைச் சேர்ந்த மாணவி மகேந்திரன் கிரிஜா

தம்புள்ளையில் சர்ச்சைக்குரிய மற்றுமொரு

# தேங்காய் எண்ணெய் கொள்கலன் சிக்கியது

தம்புள்ளை பகுதியில் தரமற்ற தேங்காய் எண்ணெய் உள்ளதாக சந்தேகிக்கப்படும் கொள்கலன் லொறியொன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் தம்புள்ளை பொருளாதார மையத்துக்கருகிலுள்ள ஒரு தனியார் தரிப்பிடத்தில் பவுசர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோதே 28,000 லீட்டர் தேங்காய் எண்ணெய்யுடன் லொறி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தம்புள்ளை மேயர் ஜாலிய ஒபாத, பொலிஸ் தலைமையக ஆய்வாளர் எஸ்.பி. எதிரிசிங்க மற்றும் பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந் நிலையில் பறிமுதல் செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் மனித நுகர்வுக்கு தரம் வாய்ந்ததா? என்பதை கண்டறிய அவற்றின் மாதிரிகள் பெறப்பட்டு, ஆய்வக பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயரின் மறைவு ஆழ்ந்த துயரையளிக்கிறது

## காதர் மஸ்தான் எம்.பி.

மன்னார் ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவு செய்தியறிந்துஆழ்ந்த துயருற்றேன்

என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவருமான காதர் மஸ்தான் தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

மன்னார் மாவட்டத்தில் ஆயராக பணியாற்றிய காலப்பகுதியில் கத்தோலிக்க மக்களுக்கு மதரீதியான தலைமைத்துவத்தை சிறப்பாக வழங்கிய ஒருவராக அவரை நான் காண்கிறேன்.

அனைத்து இனமக்களோடும் ஒற்றுமையாகவும் நல்லிணக்கமாகவும் வாழவேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக அவர் திகழ்ந்தார்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவில் பிறந்த அவர் தமிழுணர்வு மிக்கவர்.

தனது மக்களை மிகவும் நேசித்தவர்,வைத்தியரான அவரது தந்தையும் இனமத பேதமற்றவர், மக்களுடன் சகோதரத்துவ வாஞ்சையுடன் நடந்தவர். இவ்வாறான பின்னணியைக் கொண்ட முன்னாள் மன்னார் மறை மாவட்ட ஆயரின் மறைவில் முழு மன்னார் மாவட்டமே வேதனையுற்றிருக்கிறது. அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் ஆயர் இல்லத்தினர், குருமார்கள் மற்றும் உறவினர்கள் கத்தோலிக்க பெருமக்கள் அனைவருக்கும் எனது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மதங்களை கடந்து...(03 ஆம் பக்கத் தொடர்)

தெரிந்தவர். 'போருக்கு எதிரான முன்னணி' அமைப்பு மூலம் சமாதான கௌரவ விருது அவருக்கும், எனக்கும் கிடைத்தது. அது எனக்கு பெருமையாக இருந்தது. கிறிஸ்தவ மக்களின் நன்மதிப்புப்பெற்ற அவரது மறைவு ஈடுசெய்ய முடியாதது என பாபுசர்மா குறிப்பிட்டுள்ளார்.

## மரியசேவியர் அடிகளாருக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

அமரரது ஆத்ம ஈடேற்றத்திற்கு பிரார்த்தனை செய்கிறோம் என இந்து குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ.கு.வை.க.வைத்தீஸ்வர குருக்கள் விடுத்துள்ள அனுதாப செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் மக்களின்...(03 ஆம் பக்கத் தொடர்)

தமிழ் மக்களின் ஓர் உயர்ந்த குரல் ஓய்ந்து விட்டது. அமரரது ஆத்ம ஈடேற்றத்திற்கு இறை பிரார்த்தனை செய்கிறோம் என இந்து குருமார் அமைப்பின் சார்பில் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ. கு.வை.க.வைத்தீஸ்வர குருக்கள் மற்றும் செயலாளர் பிரம்ம ஸ்ரீ கா. சந்திரசேகர சர்மா ஆகியோர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

## முல்லை., ஐயன்குளம்... (03 ஆம் பக்கத் தொடர்)

அதேபோன்று, ஐயன்குளம் மக்களுக்கான பிரதேச வைத்தியசாலையான மல்லாவி வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இன்மை மற்றும் அம்பியூலன்ஸ் வசதி சீராக இல்லாமை போன்ற காரணங்களினால் உரிய நேரத்தில் வைத்திய சிகிச்சையை பெற்றுக் கொள்வதும் கடினமான காரியமாக காணப்படுகின்றது.

இவ் விடயங்கள் மற்றும் யானை வேலியின் அவசியம், வேலையில்லாப் பிரச்சினை உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக பிரதேச மக்களினால் நிகழ்வில் கலந்து கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சரத் வீரசேகர போன்றோரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

பிரதேச மககள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அனைத்தும் முன்னுரிமை அடிப்படையில் தீர்த்து வைக்கப்படும் எனவும், அவை தொடர்பான நடவடிக்கைகளும் ஒரு மாத காலத்தினுள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, ஐயன்குளம் கிராமத்தை சேர்ந்த கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியடையாத சுமார் 20 இளைஞர் யுவதிகளுக்கு அரசாங்க வேலைவாய்ப்பை வழங்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும், அதற்கான பெயர்ப் பட்டியலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்குமாறும் தெரிவித்தார்.

## ஓட்டமாவடியில் இதுவரை...

அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயந்த கொலம்பகே, சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## கலாநிதி மரிய சேவியர்...

இவர் தன் வாழ்வைக் குருத்துவப் பணியில் அர்ப்பணிக்கும் பொருட்டு 1952 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மருதனார் குருமடத்தில் சேர்ந்து சென்ட். பற்றிக்ஸ் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

1956ஆம் ஆண்டு எஸ்.எஸ்.சி.பரீட்சையில் சித்தியடைந்து, குருத்துவ மேல் நிலைப்படிப்பைக் கண்டி அம்பிட்டிய குருமடத்தில் தொடர்ந்தார்.

1958 ஆம் ஆண்டு இசையியலில் உயர் பட்டம் பெறும் பொருட்டு ரோம் நகருக்குச் சென்று தனது 21 ஆவது வயதில் பி.ஏ, எம்.ஏ பட்டங்களைப் பெற்றதுடன் உரோம் தமிழ்ச் சங்கத் தலைவராக 1960 1961 ஆம் ஆண்டு பணிபுரிந்தார்.

இவர் ஒருவர்தான் பட்டப் படிப்பின் இறுதி ஆண்டில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் முழுப்புள்ளிகளையும் பெற்றுப் பாராட்டுப் பெற்றவர்.

கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளார் 1962 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி ரோம் நகரில் தனது 22 ஆவது வயதில் திருச்சபைச் சட்டத்தின் படி பரிசுத்த தந்தை 23 ஆம் அருளப்பரின் சிறப்பு அனுமதியுடன் வயதுக்குறைவான குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் பதினைந்து வயதில் எழுதிய "மலரும் தமிழகமே மறந்து விடாதே" என்னும் கட்டுரை கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மலரில் வெளிவந்தது.

சிறுவயது முதல் நாடகங்களில் நடித்துவந்த இவர், 1966 ஆம் ஆண்டு உரும்பராயில் திருமறைக் கலாமன்றம் என்ற அமைப்பை நிறுவி பல நாடகங்களை உள்ளூரிலும் ஐரோப்பிய தேசங்களிலும் மேடையேற்றினார்.

இவ் வமைப்பினூடாக 1990 ஆம் ஆண்டு "கலைமுகம்" என்னும் காலாண்டுக் கலை இலக்கிய இதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராகக் கடமையாற்றியதுடன் சிறிது காலம் பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

பன்மொழிப்புலமை பெற்றிருந்த அடிகளார் ஆங்கிலத்தில் நாடகங்களையும் அருளும் இருளும் என்ற நடன நாடகத்தையும் ஆக்கியளித்துள்ளார்.

இவருக்கு ஆளுநர் விருதும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டமும் அளித்துள்ளது.

## அடிப்படைவாத கருத்துக்களை...

அவர்கள் கடந்த 2020 நவம்பர் மாதம் 21 ஆம் திகதி நாடு கடத்தப்பட்டுள்ளனர். அவர்கள் அந்த வட்ஸ் அப் குழு ஊடாக பல்வேறு வகைகளில் அடிப்படைவாத கருத்தை பரப்பியுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இதேவேளை, பயங்கரவாதி ஸஹ்ரான் ஹாஷிமின் அடிப்படைவாத, பயங்கரவாத பயிற்சி மற்றும் பிரசங்கங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

37 மற்றும் 38 வயதான இரண்டு சந்தேக நபர்கள் மூதூரில் கைது செய்யப்பட்டதுடன், மூதூரில் கடும் போக்குவாத பிரசங்கங்களை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியதாக சந்தேக நபர்கள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் பிரசாத் ரணசிங்கவின் மேற்பார்வையில், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸின் ஆலோசனைக் கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## நாட்டிலுள்ள தேவாலயங்களுக்கு...

ஒவ்வொரு தேவாலயத்துக்கும் தனித்தனியே பாதுகாப்பு வழங்குவது மிகவும் கடினம் என்பதனால் பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவமும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்தார்.

பாதுகாப்பை வழங்கும் செயற்பாடுகள் இந்த வார ஆரம்பத்திலிருந்து அடுத்த இரண்டு நாட்களுக்கு அமுல்படுத்தப்படுமென்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா குறிப்பிட்டார்.

## ரஜினிகாந்துக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

தெரிவிக்கின்றன.

அமிதாபச்சன், வினோத் கண்ணா, லதா மங்கேஷ்கர் , கன்னட நடிகர் ராஜ்குமார், கேரள இயக்குனர் அடூர் கோபாலகிருஷ்ணன் ஆகியோருக்கு ஏற்கனவே தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்பட்டுள்ளது. தமிழ் சினிமாத்துறையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், இயக்குநர் கே.பாலச்சந்தர் ஆகியோர் தாதா சாகேப் பால்கே விருது பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மூன்று மணி நேரத்தினுள்... (03 ஆம் பக்கத் தொடர்)

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தங்கள் பி.சி.ஆர் அறிக்கைகளை மிகக் குறுகிய காலத்தில் பெற்று தங்கள் சுற்றுப்பயணத்தைத் தொடர்வதை உறுதிசெய்யும் நோக்கிலேயே இந்த நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனைகளுக்காக விமான நிலையத்திற்குள் மணிக் கணக்கில் சுற்றுலாப் பயணிகள் காத்திருக்க வேண்டியுள்ளது. இது தொடர்பில் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து தொடர்ந்து குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. விமான நிலைய ஆய்வகத்தை முறைப்படுத்துவதே புதிய திட்டத்தின் நோக்கம். இதனால் சுற்றுலாப் பயணிகள் தமது பி.சி.ஆர் அறிக்கையை மூன்று மணி நேரத்திற்குள் பெற்று சுற்றுப்பயணத்தைத் தொடங்க முடியும்.

எவ்வாறாயினும், மருத்துவ ஆய்வக சங்கம் முன்வைத்த திட்டங்களை மறுபரிசீலனை செய்யத் தயாராக இருப்பதாகவும், நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் செயல்பட ஒத்துழைப்புகளை வழங்க தயாராக இருப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

## "கிராமத்துடன் கலந்துரையாடல்"...

இந்நிகழ்வில் மாவட்டத்தின் அமைச்சர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், அமைச்சுக்களின் செயலாளர்கள், பல்வேறு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொள்வர்.

வவுனியா நகரிலிருந்து 38 கிலோ மீற்றர் தூரத்தில் கிழக்கு மற்றும் தெற்கில் அனுராதபுர மாவட்டத்தின் பதவிய, கெப்பித்திகொல்லாவ பிரதேச செயலகப் பிரிவிற்கும் மேற்கில் நந்திமித்திர கிராமத்தையும் எல்லையாகக் கொண்டு வெடிவைத்தகல்லு கிராம சேவகர் பிரிவு அமைந்துள்ளது.

வெடிவைத்தகல்லு மற்றும் அதனை சூழவுள்ள கிராம மக்கள் நீண்டகாலமாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். கல்வி மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் இதில் பிரதானமானவையாகும். 2010 ஆம் ஆண்டின் பின்னர் அபிவிருத்தி செய்யப்படாத வீதிகள், வீடுகள், மின்சாரம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படாமை, குடிநீர், பயிர்ச் செய்கைக்கான நீர் பற்றாக்குறை, விவசாய பிரச்சினைகளுடன் யானைகளின் அச்சுறுத்தலுக்கும் மக்கள் நீண்டகாலமாக முகங்கொடுத்து வருகின்றனர். காணி உறுதி தொடர்பான பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றை பெற்றுக்கொள்வது, குளங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைத்தல், போகஸ்வெவ வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல், உர களஞ்சியசாலை ஒன்றை நிர்மாணித்தல் போன்றவை கிராம மக்களின் ஏனைய வேண்டுகோள்களாகும்.

கிராமிய மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஒருதரப்பு நியாயங்களை மட்டும் கவனத்தில் கொண்டு புரிந்துகொள்வது, தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதை தாமதப்படுத்தும் என்பதே ஜனாதிபதியின் கருத்தாகும். அதிகாரிகள் ஒரு முறையிலும் கிராமத்தினர் வேறு ஒரு முறையிலும் பிரச்சினையை காண்கின்றனர். பிரச்சினையின் எல்லா பக்கத்தையும் சரியாக இனங்கண்டு கொள்வதன் மூலம் தீர்வை பெற்றுக்கொடுப்பது இலகுவானதாகவும் உடனடியாக அத்தீர்வை பெற்றுக்கொடுக்க முடியுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

## பன்னிபிட்டிய சந்தியில்...

மோட்டார் சைக்கிளில் மோதியுள்ளது.

இந்த விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் மற்றைய இளைஞர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் எட்டியாந்தோட்டை, மலல்கொட பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடைய கசுன் பண்டார மற்றும் மீகொட பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடைய பிரபோத மதுஷான் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## போர்க்கால சூழலில்...

மனிதாபிமான நடவடிக்கையின் போது நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாகவிருந்தது. அந்தவகையில் போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில்துன்பங்களைச் சுமந்து நின்ற மக்களின் துயரங்களைத் துடைக்கவும், ஏழை மக்களுக்கு உதவவும் அவர் அரும்பாடுபட்டார்.

மடு அன்னை தேவாலயத்தை பாதுகாப்பதற்கான இராயப்பு ஜோசப் ஆண்டகையின் அர்ப்பணிப்பை இத்தருணத்தில் நன்றியுடன் நினைவுகூர வேண்டும். வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இழப்பால் துயருறும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## போதை வஸ்த்து நிரப்பிய...

குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சர்வதேச போதைப்பொருள் வலையமைப்புடன் இணைந்து பணியாற்றும் இலங்கை குழுவொன்றும் இரண்டு ரோலர் படகுகளுடம் பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அண்மையில் இந்திய கடற்படையால் சுற்றிவளைக்கப்பட்டதுடன், அது தொடர்பிலான விசாரணைகளுக்கு இந்திய கடற்படை இலங்கை படையினருக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கி வருகிறது.

இந்த இரண்டு ரோலர் படகுகளிலும் கடத்தப்பட்ட 500 கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருள் மீட்கப்பட்டதாக இந்திய கரையோர பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். அத்துடன், கடத்தல் காரர்களிடமிருந்த துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

இந்திய பாதுகாப்புப் படையினரிடம் தகவல்களை பெற்று மேலதிக விசாரணைகளை இலங்கை பொலிஸார் இது தொடர்பில் மேற்கொண்டுவருகின்றமையும்குறிப்பிடத்தக்கது.

## கொரோனா தடுப்பூசி ஏற்றல்

தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தொற்று நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இலங்கையில் இதுவரை 9,23,954 பேருக்கு முதலாவது கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு கட்டாயம் இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதன் காரணமாக முதலாவது தடுப்பூசியை வழங்கும் செயற்பாடு தற்காலிகமாக (நேற்று) நிறுத்தப்பட்டுள்ளது. கொவெக்ஸ் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 84 இலட்சம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன. அவற்றில் இதுவரை 2,64,000 தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை கிடைக்கப்பெற்றதும் மீண்டும் முதலாவது தடுப்பூசி வழங்கும் செயற்பாடு ஆரம்பமாகும்.

அதேபோன்று சினோபார்ம் தடுப்பூசியை வழங்கும் செயற்பாடு எதிர்வரும் 5ஆம் திகதி முதல் ஆரம்பமாகும். சினோபார்ம் தடுப்பூசி தொடர்பில் எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இத்தடுப்பூசி செலுத்தப்பட்டு பெற்றுக்கொடுள்ளப்பட்டுள்ள தரவுகளின் பிரகாரம்தான் அதற்கான அனுமதி இலங்கையில் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதேவேளை, புத்தாண்டு காலப் பகுதியில் பொது மக்கள் உரிய சுகாதார வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும். சமூக இடைவெளி மற்றும் முகக் கவசங்களை கட்டாயம் அணிய வேண்டும். என்பதுடன், பாரிய ஒன்றுக்கூடல்களை தவிர்ப்பதன் மூலம் தொற்று பரவுவதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியும் என்றார்.

## அமரர் டி.ஆர் விஜேவர்த்தனவின்...

நிகழ்வு ஆரமாகி இன்றும் தானம் வழங்குதல் நடைபெறுகிறது.

ஆங்கிலேயர்களிடம் சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள தேசபற்றாளர்களுடன் இணைந்து சிங்களம், தமிழ், ஆங்கிலப் பத்திரிக்கைகளை ஆரம்பித்து அன்னார் ஆற்றியது உன்னதமான பணியாகும். பத்திரிகைகளின் ஊடாக நாட்டுக்கு சுதந்திரத்தை பெற்றுக்கொடுக்கும் வழிநடத்தல்களில் டி.ஆர்.விஜேவர்தனவின் பங்களிப்பு அளப்பரியதாகும்.

பத்திரிகைகளின் தாய்வீடாகவுள்ள லேக்ஹவுஸ் நிறுவனத்தை 1926ஆம் ஆண்டு ஆரம்பித்து இலங்கையில் பத்திரிக்கைத்துறைக்கு மிகப்பெரிய பங்களிப்பை பெற்றுக்கொடுத்ததுடன், வர்த்தக துறையிலும் பத்திரிக்கைக்கு உத்துயிர் கொடுத்திருந்தார்.

1886ஆம் ஆண்டு பெப்ரவரி 23ஆம் திகதி தொன் பிலிப் விஜேவர்தனவுக்கு மகனாக டி.ஆர்.விஜேவர்தன பிறந்ததுடன், ஹலோனா விஜேவர்தன அவரது தாயாகும். மோதரை சாந்த தோமஸ் கல்லூரியில் ஆரம்ப கல்வியை பெற்றுக்கொண்ட டி.ஆர்.விஜேவர்தன, இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் உயர் சட்டக் கல்வியை பெற்று நாட்டுக்கு வந்தார்.

ஆழமான கலாசார, அரசியல் அறிவையும் தேசப்பற்றையும் கொண்டிருந்த டி.ஆர்.விஜேவர்தன 1950 ஆண்டு ஜுன் மாதம் 13ஆம் திகதி இவ்வுலகைவிட்டு பிறிந்தார்.

கொழும்பு மத்தியில் அவர் உருவாக்கிய லேக்ஹவுஸ் கட்டடம் கலாசாரமாக மிளிர்வதுடன், லேக்ஹவுஸ் நிறுவனப் பத்திரிகைகள் இலங்கை பத்திரிகைத் துறையில் இன்றும் முன்னோடியாக தேசப்பற்றுடன் வெளியாகி வருகின்றன.

## மக்களை வீதியில் விட்ட...

அதிகரித்ததையடுத்து யாழ். நகர் மத்திய பகுதி மற்றும் திருநெல்வேலி, பாற்பண்ணை கிராமம் என்பன முடக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதி மக்களுக்கு அரச உதவிகள் எவையும் கிடைக்கவில்லை. அது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.நகர் மத்திய பகுதியிலுள்ள நவீன சந்தையில் தொற்றாளர்கள் சிலர் எழுமாற்றுப் PCR பரிசோதனையில் கண்டறியப்பட்டனர். அதையடுத்து நகரின் முக்கிய பகுதி முடக்கப்பட்டுள்ளது. சுமார் 225 வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. அவற்றில் பணியாற்றும் 800 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இதுவரை 117 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனாலும் மாவட்டச் செயலாளர் அறிவித்த முடக்கப் பகுதிக்குள் அரச மற்றும் தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள் செயற்படுகின்றன. எமது உள்ளூர் வர்த்தக நிலையங்கள் மாத்திரம் மூடப்பட்டுள்ளன. அதுவும் பண்டிகைக்காலத்தில் எமது வர்த்தகர்கள் பெருமளவு முதலீடு செய்துள்ள நிலையில் அவர்களின் வர்த்தக நிலையங்கள் முடக்கப்பட்டு மறுபுறம் பல்தேசிய மற்றும் தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்கள் அதற்கு அண்மித்த பகுதிகளில் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

இது மாத்திரமல்லாமல் திருநெல்வேலி கிராமத்தின் ஒரு பகுதியான பாற்பண்ணை கிராமம் முடக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியை அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினருடன் இணைந்து முடக்கி வைத்துள்ளனர். ஆனாலும் 'கண்காணிப்பு வலயம்' என்ற ஒரு சொல்லாடலைப் பயன்படுத்தி வருகின்றனர். முடக்கம் என்று அறிவித்தால் அரசின் 05 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கவேண்டும். அது போதாதென்பது வேறு. ஆனாலும் அந்த நிவாரணத் தொகையை மக்களுக்கு வழங்கக் கூடாது என்பதற்காக அல்லது வழங்குவதை தவிர்ப்பதற்காக 'கண்காணிப்பு வலயம்' என்று அறிவித்திருக்கின்றார்கள்.

இது தொடர்பில் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டால், ஒருவரும் பொறுப்பெடுக்கின்றார்கள் இல்லை. பொறுப்பை மற்றவர்கள் மீது சுமத்தி விட்டு தப்பிக்கும் யுக்தியையே கையாள்கின்றனர்.

தென்னிலங்கை வர்த்தக நிலையங்களில் தொற்று வராதென்ற அடிப்படையில் அவர்களை வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கும் அதிகாரிகளால் ஏன் உள்ளூர் வர்த்தக நிலையங்களை திறக்க அனுமதிக்கக் கூடாது என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

## ஆயிரம் எப்படி பெறுவது...

நம்புகின்றோம் என்று இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் அமைந்துள்ள சீ.எல்.எப் கேட்போர் கூடத்தில் நேற்று (02) நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படும் குறைநிறைகளை கண்டவறிதற்கான கலந்துரையாடலில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வு நடைபெற்ற பின்னர், 1,000 ரூபா சம்பள உயர்வு மற்றும் கம்பனிகளின் செயற்பாடுகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் ஜீவன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

50 ரூபா, 100 ரூபா என கூறிக்கொண்டு கடந்த ஆட்சியின்போது 05 வருடங்கள் கடத்தப்பட்டன. அதற்கு எதிராக விமர்சனங்கள் முன்வைக்கப்படவில்லை. ஆனால் இன்று கம்பனிகளுக்கு எதிராக நாம் நீதிமன்றம் வரை சென்றுள்ளோம்.

இந்நிலையில் தொழிலாளர்களை உசுப்பேத்துவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர்.அரசாங்கத்திடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது, அப்படி இருக்கையில் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றியாவது ஏன் சம்பள உயர்வை வழங்க முடியாது எனவும் கேட்கின்றனர். எடுத்த எடுப்பிலேயே எல்லாவற்றையும் செய்துவிட முடியாது. அதற்கென நடைமுறைகள் உள்ளன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாகத்தான் சம்பள நிர்ணய சபை ஊடாக தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கு எதிராக மேன்முறையீடு செய்யும் உரிமையும், நீதிமன்றம் செல்லும் உரிமைகளும் கம்பனிகளுக்கு இருக்கின்றன. ஆனால் 05 ஆம் திகதி நல்ல முடிவு வருமென நம்புகின்றோம்.

தொழிற்சங்க ரீதியில் தொழிலாளர்களின் பல பிரச்சினைகளுக்கு நாம் தீர்வுகளை பெற்றுக்கொடுத்துள்ளோம். பெற்றுக்கொடுத்தும் வருகின்றோம். மற்றைய தரப்பினரும் தொழிற்சங்கம் நடத்துகின்றனர். அவர்கள் விமர்சனங்களை முன்வைப்பதையே பணியாக முன்னெடுக்கின்றனர். நாம் பொறுமையாக இருக்கின்றோம். அதற்கு பயம் காரணம் அல்ல. நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை காத்திருக்கின்றோம்.

அதேவேளை, ஊவாவில் தமிழ் கல்வி அமைச்சை எவ்வாறு பெற வேண்டும் என்பதும் எமக்கு தெரியும். மாகாணசபைத் தேர்தல் முடிந்ததும் அதனை பார்க்கலாம் எனவும் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டார்.




# மலையகத்தில் பலத்த பாதுகாப்புடன் கிறிஸ்தவ ஆலயங்களில் பெரிய வெள்ளி வழிபாடுகள்





## கொவிட் 19 சுகாதார விதிமுறைகளும் பின்பற்றல்

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

பெரிய வெள்ளி தினமான நேற்று நாடளாவிய ரீதியில் அனைத்து கிறிஸ்தவ ஆலயங்களுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மரணத்தின் அர்த்தத்தை மாற்றி எழுதியது இயேசுவின் மரணம் என்பது உலகறிந்த உண்மை.

புனித வெள்ளியை பெரிய வெள்ளி என்றும் ஆண்டவருடையை திருப்பாடுகளில் வெள்ளி (Good Friday) என்றும் சொல்கின்றனர்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நாளையே புனித வெள்ளியாக உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் அனுஷ்டிக்கின்றனர்.

எனினும் கடந்த ஆண்டு கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக பெரிய வெள்ளி வழிபாடுகள் இடம்பெறவில்லை. அந்த வகையில் மலையக கிறிஸ்தவ ஆலயங்களிலும் பொலிஸ் பாதுகாப்போடு வழிபாடுகள் இடம்பெற்றன.

பெரிய வெள்ளி அனுஷ்டிப்பின் ஆரம்ப நிகழ்வாக இயேசு கிறிஸ்துவின் பாடுகளை நினைவுகூறும் முகமாக ஆலய வளாகங்களில் சிலுவை பாதை இடம்பெற்றது, அதனைத் தொடர்ந்து மாலை திருச்சிலுவை ஆராதனை நிகழ்வுகள் இடம்பெற்றன.

மலையகத்தில் பிரதான நகரங்களில் ஒன்றான ஹற்றன் நகர திருச்சிலுவை ஆலயத்தில் அருட்தந்தை நியூமன் பெரேரா தலைமையில் வழிபாடுகள் ஆரம்பமாகின. பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஆலய நிர்வாக குழுவினரின் பரிசோதனையின் பின்னர் பக்தர்கள் ஆலயத்தினுள் உள்வாங்கப்பட்டதுடன் கொவிட் 19 சுகாதார விதிமுறைகளை பேணி பெரிய வெள்ளி தினத்தை அனுஷ்டித்தமை குறிப்பிடத்தக்கது.




# பம்பரக்கலை தோட்டத்தில் திடீர் தீ

## 13 வீடுகள் எரிந்து நாசம்




**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா பம்பரக்கலை தோட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை ஏற்பட்ட திடீர் தீவிபத்தினால் 13 வீடுகள் கொண்ட தொடர் குடியிருப்பில் மூன்று வீடுகள் தீயினால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த மூன்று வீடுகளிலும் இருந்த 15 பேர் தற்காலிகமாக உறவினர்கள் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த தீ விபத்தின் போது, எவருக்கும் தீ காயங்கள் ஏற்படவில்லை என்பதோடு, பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள்,துணிகள் மற்றும் பாடப்புத்தகங்கள் என பெரும் பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

தீ ஏற்பட்ட போது வீட்டில் இருந்தவர்கள் எரிவதை கண்டு கூச்சலிட்டதாகவும், அதன் பிறகு அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் பல மணி நேரத்திற்கு பின்பு தீயை நுவரெலியா மாநகர சபை தீயணைப்பு பிரிவுடன் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதேவேளை இது தொடர்பாக நுவரெலியா பொலிஸ் நிலையத்திற்கு பிரதேசவாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்பின் சம்பவயிடத்திற்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களை கண்டறிய மேலதிக விசாரணகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பசறை, 13ஆவது மைல் கல் விபத்து பஸ் சாரதியின் விளக்கமறியல் நீடிப்பு

- கையடக்கத் தொலைபேசியை பயன்பாடு
- சாரதி அனுமதிப்பத்திரமின்மை
- பஸ் அட்டவணையை பின்பற்றாமை
- கவனயீனம்
- கடும் வேகம்

## பஸ்சாரதிக்கு எதிராக தீவிர விசாரணை



**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பசறை, 13ஆவது மைல் கல்லருகே ஏற்பட்ட விபத்தையடுத்து தனியார் பஸ் சாரதியும் எதிர்த்திசையில் வந்த லொறி சாரதியும், பசறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து பஸ் சாரதியை, எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படியும், லொறிச் சாரதியை ஐந்து இலட்சம் ரூபா கொண்ட இரு சரீரரப்பிணைகளில் விடுவிக்கும்படியும், பசறை நீதவான் நீதிபதி சமிந்த கருணாதாச உத்தரவிட்டார். அத்துடன் நீதிபதி சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்ட லொறிச் சாரதியை, எதிர்வரும் 8ஆம் திகதி மீளவும் பசறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் பணித்தார்

பொறுப்பற்ற வகையில் பஸ்சை செலுத்தியமை, கையடக்கத் தொலைபேசியை பாவித்தமை, கடும் வேகம், சாரதி அனுமதிப்பத்திரமின்மை, பஸ் சேவை கால அட்டவணைக்குப் புறம்பாக பஸ்சை செலுத்தியமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பசறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 20ஆம் திகதி காலை, பசறை 13ஆவது மைல் கல்லருகே தனியார் பஸ் விபத்துக்குள்ளாகியது. இவ்விபத்தில் 14 பேர் பலியானதுடன், 32 பேர் காயங்களுக்குள்ளாகினர். இவர்கள் பதுளை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதுடன், இவர்களில் ஐந்து பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# இம்புல்பே பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா

**(பலாங்கொடை தினகரன் நிருபர்)**

பலாங்கொடை இம்புல்பே பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா கடந்த 31ஆம் திகதி சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் நடைபெற்றது. 1971 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கூட்டுறவு சங்கத்தில் சுமார் 14 ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ளனர். 11 வங்கிக் கிளைகள் எரிபொருள் நிலையம் ஒன்று 4 கோப்சிடி விற்பனை நிலையங்கள் இந்த பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமானவையாகும்.

50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அன்றைய தினம் மரநடுகை நிகழ்வு ஒன்றும் வளாகத்தில் இடம்பெற்றது. கூட்டுறவு சங்கத்தின் அதிகாரிகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு என்பன ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இடம்பெற்றது.

இந்த வைபவ நிகழ்வில் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில சாலிய எல்லாவள காமினி வலேபொட முன்னாள் மாகாணசபை அமைச்சர் பானு முணுப்பிரிய பலாங்கொடை பிரதேச சபைத் தலைவர் சுனில் பேமசிரி இம்புல்பே பிரதேச சபை தலைவர் ஸ்ரீலால் செனரத் இம்புல்பே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பி. தயாசிறி பல்லேமுல்ல உட்பட பணிப்பாளர் சபை அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.



அண்மையில் பசறையில் ஏற்பட்ட பஸ் விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், உயிரிழந்த 14 பேரின் குடும்ப உறுப்பினர்களுக்கும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட காயமடைந்த 32 பேருக்கும் பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமானால் லுனுகல பிரதேச சபையில் வைத்து நிதி உதவி வழங்கி வைக்கப்பட்ட போது...

# தேயிலை தூளில் கலப்படம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

தேயிலை தூளை உற்பத்தி செய்யும் சில தொழிற்சாலைகளில் சுண்ணாம்பு சீனி மற்றும் இரசாயனப் பொருட்கள் கலப்படம் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

இவ்வாறு தேயிலை தூள்களில் சீனி மற்றும் ஏனைய இரசாயன பொருட்களை கலப்படம் இடம்பெறுவதால் மக்களின் சுகாதார மற்றும் சமூக நலன்களில் இவை பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

தேயிலைத் தூளை கருமையாக்க சீனி மற்றும் சுண்ணாம்பு கலக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறந்த ரக தேயிலைக்கு சந்தையில் அதிக விலை கிடைத்து வருவதனால் குறுகிய நோக்கம் கொண்ட வியாபாரிகள் அதிக இலாபம் பெறுவதற்காக தேயிலைத் தூளின் நிறத்தை மாற்றி பாவனையாளர்களுக்கு சுகாதாரப்பாதிப்பினை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

## இரத்தினபுரி மாவட்டத்தில்

# எலிக்காய்ச்சல் தீவிரம் இதுவரை 4 மரணங்கள்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் தீவிரமடைந்து வருவதாக மாவட்ட தொற்று நோய் தடுப்பு பிரிவின் வைத்திய நிபுணர் அஜித் கோணார நேற்று தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் 1154 பேர் எலி காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை வருவதாகவும் இவர்களில் நான்கு பேர் உயிரிழந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்களில் இருவர் பாடசாலை மாணவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

# வான் மோதி மூன்றரை வயது குழந்தை பலி

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பதுளை – முடகமூவை என்ற இடத்தில் வான் மோதியதில் மூன்றரை வயது பெண்குழந்தையொன்று சிகிச்சை பயனளிக்காது குழந்தை உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று முற்பகல், இடம்பெற்றுள்ளது. வான் மோதியதினால் படுகாயமுற்ற நிலையில் பதுளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட குழந்தை சில நிமிடங்களில் உயிரிழந்துள்ளது. பதுளை முடகமூவ என்ற இடத்தைச் சேர்ந்த நெத்மி நிசன்சா என்ற மூன்றரை வயதுடைய பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

வீட்டின் முன்னால் பாதையில் விளையாடிக் கொண்டிருந்த போதே, அப்பாதையில் பயணித்த வான் குழந்தை மீது மோதியுள்ளது. இது குறித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது, வான் சாரதியின் கவனயீனத்தினால் இவ்விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. பொலிஸார், வான் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

# கிழக்கின் குரல்



## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர சம்பளம்; விரைவில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிப்பு

### மட்டக்களப்பில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)



முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர சம்பளம் வழங்கும் செயற்பாட்டினை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பிலான அமைச்சரவை பத்திரம் ஒன்றினை தயாரிக்கும் பணிகளை கல்வி அமைச்சர் ஜி.எல் .பீரிஸ் முன்னெடுத்து வருவதாகவும், எதிர்வரும் தினங்களில் அமைச்சரவையில் சமர்பிக்கவுள்ளதாவும் தெரிவித்தார்.

கிராமிய பொருளாதார மேம்பாட்டு தேசிய வேலைத்திட்டதின் சமூக அபிவிருத்தி உட்கட்டமைப்பு தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் (1) நடைபெற்றது.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா ஜகம்பத், இராஜாங்க அமைச்சர்களான எஸ்.வியாழேந்திரன், ரொசான் லால் சிங்க, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு முன்பள்ளி இராஜாங்க அமைச்சர் நிஸாந்த டீ சில்வா உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநேசதுரை சந்திரகாந்தன், நசீர் அஹமட், கோவிந்தன் கருணாகரம், இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கல்வி, விளையாட்டு, சுகாதாரம் உள்ளிட்ட மாவட்டத்தின் முக்கிய தேவைகளாகவுள்ள கிராமிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பான வேலைத்திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், பல திட்டங்கள் மற்றும் தேவைப்பாடுகளுக்கான தீர்வுகளும் இதன்போது வழங்கப்பட்டன. அடுத்த மாதம் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் யுவதிகளின் நன்மை கருதி இலங்கையில் உள்ள நிறுவனங்கள் மற்றும் அரச திணைக்களங்களை ஒருங்கிணைந்ததாக மாபெரும் தொழிற்சந்தையொன்றை நடாத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் பல்வேறு குறைபாடுகள் குறித்து இங்கு தெரிவிக்கப்பட்ட நிலையில், அவற்றினை நிவர்த்திப்பதற்கான உத்தரவுகளும் அமைச்சின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டன.

## சாகாமம் குளத்தின் மூலம் மேற்கொள்ளும் விவசாய செய்கை 1787 ஏக்கராக அதிகரிப்பு

### ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பபாகரன்





வாச்சிக்குடா விஷேட நிருபர்

அக்கரைப்பற்று சாகாமம் நீர்ப்பாசன குளத்தின் மூலமும் மற்றும் வடிச்சல் நீர் மூலமும் சிறுபோக செய்கை மேற்கொள்ளக்கூடிய விவசாய நில அளவின் எண்ணிக்கை 1787 ஏக்கராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற சிறுபோகச் செய்கை தொடர்பான இரண்டாவது கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பகுதியில் சிறுபோக செய்கை மேற்கொள்ளக்கூடிய 2955 ஏக்கர்களில் முதற்கூட்டத்தில் 1677 ஏக்கர் வயல் நிலங்களுக்கு மாத்திரம் அனுமதியளிக்கப்பட்டது.

இதன் பின்னராக அதிகரித்த மழை வீழ்ச்சி காரணமாகவே மேலதிகமாக 110 ஏக்கருக்கு மேலதிகமாக அனுமதியளிக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற இரண்டாவது கூட்டத்தில் உதவிப்பிரதேச செயலாளர் ஆர். சுபாகர் இக்கூட்டத்தில் தம்பிலுவில் மாகாண பிரதி நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் பி.விகர்ணன் மற்றும் பிரதேச நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் வி.விவேக்சந்திரன், பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன் உள்ளிட்ட அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். இதன் பிரகாரம் பட்டிமேடு வடக்கு, பட்டிமேடு தெற்கு, பட்டிமேடு மத்தி, மொட்டையால், சேனைக் கண்டம், ஊரக்கை கண்டம் ஆகிய பகுதிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தின் போது வடிச்சல் நீரை பயன்படுத்தி மேலதிகமாக நெற்செய்கையை மேற்கொள்வதற்கான கோரிக்கையினை விவசாயிகள் முன்வைத்தனர்.

தற்போது சாகாமக் குளத்திலுள்ள நீரின் அளவை வைத்தே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டது.



மட்டக்களப்பு மாவட்டத்தில் கத்தோலிக்க தேவாலயங்களில் நேற்று (02) விசேட ஆராதனைகள் இடம் பெற்றதுடன், திருச்சிலுவை ஊர்வலங்களும் இடம்பெற்றன. மாவட்டத்தின் பிரதான திருச்சிலுவை பாதயாத்திரை மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தின் முன்னால் ஆரம்பமானது. பெருமளவிலான கத்தோலிக்க பக்தர்கள் சுகாதார நடைமுறைகளைப் பேணி கலந்து கொண்டனர். சிலுவைப்பாதை பாதயாத்திரையையொட்டி பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருந்தது. (படம்: மட்டக்களப்பு குறூப் நிருபர்)

### இராஜாங்க அமைச்சர் நிஸாந்த டீ சில்வாவினால்

## மட்டு. வின்சன்ட் பெண்கள் உயர்தர பாடசாலைக்கு ரூ. 3.2 மில் நிதியொதுக்கீடு



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

தேசியப்பாடசாலைகள் வெறுமனே தேசியப் பாடசாலைகள் என்ற பெயரில் மாத்திரம் இயங்குவதை பார்க்கிறேன் அப்படி பாடசாலைகள் இருக்கக் கூடாது அதற்கான வளங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு முன்பள்ளி மற்றும் இராஜாங்க அமைச்சர் நிஸாந்த டீ சில்வா தெரிவித்தார்.

மட்டக்களப்பு வின்சன்ட் பெண்கள் உயர்தர தேசியப் பாடசாலைக்கு நேற்றுமுன்தினம் (01) விஜயம் செய்த அமைச்சர், இதன் போது பாடசாலை அதிபர் ஆசிரியர்களை சந்தித்த போது அங்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வேண்டுகோளை யேற்று திடீர் விஜயத்தை இங்கு மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர், பாடசாலையின் விஞ்ஞான ஆய்வு கூடத்தையும் பார்வையிட்டு அதன் குறைபாடுகளை கண்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து அதன் அபிவிருத்திக்காக 3.2 மில் ரூபாவை ஒதுக்கீடு செய்வதாக வாக்குறுதியளித்துள்ளார்.

இதன் போது இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் அமைச்சின் செயலாளர் திருமதி.குமாரி ஜயசேகர மட்டக்களப்பு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி.சுஜாதா குலேந்திரன், பாடசாலை அதிபர், அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரும் அதில் கலந்துகொண்டனர்.

## ஜனாஸா நல்லடக்கத்திற்கான உபகரணங்கள் அன்பளிப்பு

(கல்முனை விசேட நிருபர்)

சாய்ந்தமருது மஸ்ஜிதுல் ஆரிபீன் பள்ளிவாசலுக்கு நீண்டகாலத் தேவையாக இருந்து வந்த ஜனாஸா குளிப்பாட்டும் பெட் மற்றும் ஜனாஸாவை தூக்கிச் செல்லும் சந்தூக் ஆகியவற்றை கல்முனை ரஹ்மத் சமூக சேவை அமைப்பு வழங்கி வைத்துள்ளது.

இவற்றை அமைப்பின் தலைவரும் கல்முனை மாநகர பிரதி மேயருமான ரஹ்மத் மன்சூர், பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் நேற்று வெள்ளிக்கிழமை கையளித்தார்.

இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில்; வை.எம்.எம்.ஏ. பேரவையின் அனுசரணையுடன் அம்பாறை மாவட்டம் பூராவும் கல்முனை ரஹ்மத் சமூக சேவை அமைப்பு முன்னெடுத்து வருகின்ற சமூக நலத்திட்டத்தின் கீழ் மேற்படி தேவைகள் நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டினார்.

இம்மாவட்டத்தில் எம்மால் முடியுமான சில மனித நேயப் பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம். சில பிரதேசங்களில் வறிய குடும்பங்களை நேரடியாக இனங்கண்டு வாழ்வாதார உதவிகளையும் வழங்கி வருகின்றோம் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மஸ்ஜிதுல் ஆரிபீன் நிர்வாக சபைத் தலைவர் எம்.எம். முபாறக் மௌலவி, உப தலைவர் நௌபர்.ஏ.பாவா, செயலாளர் எச். எம்.றியாஸ் உள்ளிட்ட நிர்வாகிகள், உலமாக்கள் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.



பெரிய வெள்ளி ஆராதனையை திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தின் ஏற்பாட்டில் ஒல்லாந்தர் குடா கடற்கரையில் பங்குதந்தை றொபின்சன் அடிகளால் நேற்று (02) நடாத்தப்பட்டது. இதில் பெருமளவிலான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர். (படம்: தம்பலகாமம் நிருபர்)

## மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் 98 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

(கொக்கட்டிச்சோலை நிருபர் )

கிழக்கு மாகாணத்தினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்திற்கு அமைய மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் கடமையாற்றிய 98 ஆசிரியர்கள் வேறு வலயத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

மேலும் வேறு கல்வி வலயங்களில் இருந்து 7 ஆசிரியர்கள் மாத்திரமே மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கஷ்ட, அதிகஷ்ட பாடசாலைகளை முழுமையாக கொண்ட வலயமாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் உள்ளமையுடன், ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவி வருகின்றது. இந்நிலையில் அதிகளவிலான ஆசிரியர் இங்கிருந்து இடமாற்றப்பட்டு குறைந்தளவிலான ஆசிரியர்கள் குறித்த வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை கவலையளிப்பதாக மட்டக்களப்பு மேற்கு கல்வி சமூகத்தினர் தெரிவிக்கின்றனர்.

## நடமாடும் சேவையில் ஆவணங்களை பெற முடியாதவர்களுக்கு உதவு தொகை



திருமலை மாவட்ட விசேட நிருபர்

திருகோணமலை மாவட்ட த்தின் மூதூர் மற்றும் வெருகல் பிரதேச பிரிவுகளில் பிறப்பத்தாட்சி பத்திரம் மற்றும் அடையாள அட்டை பெறுவதற்கான ஆவணங்களை பெறமுடியாதவர்களுக்கு உதவும் வகையில் அதற்கான முத்திரை உள்ளிட்ட செலவுகளுக்கான கொடுப்பனவு நேற்றுமுன்தினம் (01) வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதியை திருகோணமலை கோணேஸ்வரா இ. கி. ச இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் பிரதேச செயலகத்தில் ஒப்படைத்தனர்.

அண்மையில் இதற்கான நடமாடும் சேவைகள் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்டது.

இதன்போது இரு பிரிவுகளிலும் 500 இற்கும் அதிகமான வறியவர்கள் பதிவின்றி சிரமப்பட்டுகின்றனர்.

இந்நிலையில் இதற்கான நிதியை பழைய மாணவர்களிடம் இளைஞர் அபிவிருத்தி அகம் கோரியதற்கிணங்க ஆவணங்களின் முக்கியத்துவம் கருதி பழைய மாணவர்கள் இந் நிதியை வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து ஆவணங்களை மக்கள் முற்றிலும் இலவசமாக பெறும் வகையில் இந் நிதி திட்டமிடல் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டது.

## அக்கரைப்பற்று வலய கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)



அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றி, சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சிரேஷ்ட அதிபரும், வலயக் கல்வி அலுவலக இணைப்பு உத்தியோகத்தருமான ஏ.எல்.கே.முகம்மட் மற்றும் சமாதானக் கல்வி அதிகாரி எஸ்.எல்.எம்.அனஸ் ஆகியோரின் பணியைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, அக்கரைப்பற்று வலயக் கல்வி அலவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஏ.ஜி.பஸ்மில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசிம் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில், ஓய்வுநிலை உத்தியோகத்தர்கள் ஏ.எல்.கே.முகம்மட், எஸ்.எல்.எம். அனஸ் ஆகியோர் பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப் பா, நினைவுப் பரிசு, பொற்கிழி வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதம அதிதி அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசிம், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் தங்களது அலுவலகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதுவே இவ்வலுவலகத்திற்கு சர்வதேசம், தேசியம், மாகாணம் மட்டங்களில் அதிகமான வெற்றியையும், நற்பெயரையும் பெற்றுத் தருகின்றது.

ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக, வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தராகப் கல்விப் பணியாற்றிய உத்தியோகத்தர்களின் சேவையை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது என்றார்.

# இன விடுதலையின் குரலாக ஒலித்தவர் இராயப்பு ஜோசப்

முன்னாள் எம்.பி சந்திரகுமார்



ஆன்மீகத்தின் குரலாக மட்டுமன்றி இன விடுதலையின் குரலாகவும் ஒலித்தவர் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் பெரும் மதிப்புக்குரிய ஆயர் இராயப்பு ஜோசப்பின் மறைவு ஆன்மீகத்திற்கு மட்டுமன்றி இனத்திற்கும் பேரிழப்பு. மறைந்த ஆயர் ஆன்மீகத்தின் குரலாக மட்டுமன்றி ஒடுக்குமுறைக்குள்ளான இனத்தின் குரலாகவும் ஒலித்தவர்.

இன்று அந்த குரல் ஓய்ந்துவிட்டது. மன்னார் மறை மாவட்டத்தில் ஆயராக அவர் பணியாற்றிய காலத்தில் ஆன்மீகப் பணிகளுக்கு அப்பால் பலவிதமான மனிதாபிமான பணிகளில் அதிக அக்கறையோடு செயற்பட்டுள்ளார். முக்கியமாக ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் இனத்தின் பலமான குரலாக ஒலித்தவர்.

இனம் சார்ந்து உண்மைகளை சர்வதேசம் வரை கொண்டு சென்ற ஒரு சக்திமிக்க குரல் ஓய்ந்துவிட்டது. இவரின் இழப்பு கிறிஸ்தவ மக்களுக்கு மட்டுமன்றி தமிழ் இனத்திற்கும் பேரிழப்பாகும்.

வட மாகாண சுகாதார தொண்டர்கள்

# ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் உள்ளீர்க்க ஜனாதிபதி உறுதி

**சாவகச்சேரி விசேட நிருபர்**

வடக்கு மாகாணத்தில் நீண்ட காலமாக சுகாதார தொண்டர்களாக பணியாற்றி நிரந்தர நியமனமின்றி நடுத்தெருவில் நிற்கும் சுகாதாரத் தொண்டர்களை ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு திட்டத்திற்குள் உள்ளீர்த்து அவர்களுக்கான நியமனத்தை வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுடனான சந்திப்பின் போதே வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பான தீர்மானம் எட்டப்பட்டது.

இதன்போது, யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அங்கஜன், வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் பலர் யுத்த, இடர் காலங்களில் கூட அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளனர். அவர்களுக்கு கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் நியமனம் வழங்கப்பட்டு பின்னர் அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



இதனால் அவர்கள் நீதி கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களின் நியமனம் தேர்தல் காலத்தில் வழங்கப்பட்டிருந்தாலும் கூட அவர்களுடைய சேவை மற்றும் குடும்ப நிலைமையை கவனத்தில் கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து சுகாதார தொண்டர்களை ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு திட்டத்திற்குள் உள்ளீர்த்து நியமனம் வழங்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

# ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு விசேட ஏற்பாடுகள் -பாதுகாப்பு தீவிரம்

**வவுனியா விசேட நிருபர்**

ஜனாதிபதியின் வவுனியா வருகையை முன்னிட்டு கலாபோகஸ்வேவ பகுதியில் பல்வேறு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வடக்கு மாகாணத்திற்கான முதல் விஜயமாக வவுனியா சிங்கள குடியேற்ற கிராமமான கலாபோகஸ்வேவ பகுதிக்கு இன்று விஜயம் செய்யவுள்ளார்.

கிராமத்துடன் உரையாடல் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் கலாபோகஸ்வேவ பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் குறைநிறைகள் தொடர்பாக கேட்டறியவுள்ளதுடன், பல்வேறு கிராமிய அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்தவுள்ளார்.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு கலாபோகஸ்வேவ பாடசாலை முழுமையாக சிரமதானம் செய்யப்பட்டு பிரமாண்டமான



கொட்டகை அமைக்கப்பட்டு அப்பகுதி வீதிகளும் அவசர அவசரமாக செப்பனிடப்பட்டு வருகின்றன.

மாவட்ட அரச அதிபர், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், வவுனியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மின்சார சபையினர், சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரும் விடுமுறையையும் பொருட்படுத்தாது நிகழ்வுக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். அத்துடன் அப் பகுதியின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

# சர்வதேச ரீதியிலும் எமது வீரர்கள் சாதிக்க வேண்டும்

ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளர்

**கரவெட்டி தினகரன் நிருபர்**



தேசிய ரீதியாக மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் எமது மண்ணிலிருந்து பல வீரர்கள் விளையாட்டுத்துறையில் சாதிக்க வேண்டும். அதற்கான சிறந்த சந்தர்ப்பம் தற்போது நாட்டில் உருவாகியுள்ளது என பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் நடத்தும் 34 ஆவது மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி புத்தூர் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில்,

நாட்டை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனா தொற்றுக்கு மத்தியிலும் இந்த விளையாட்டு நிகழ்வு சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதேநேரம் எமது மாவட்டம் நீண்டகாலமாக யுத்தத்தின் பிடிக்குள் சிக்கி பல்வேறு துன்ப துயரங்களை சந்தித்துவந்த நிலையில் விளையாட்டு துறையில் சாதிக்க துடித்த வீரர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போன நிலைமை காணப்பட்டது.

ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது. நாட்டில் விளையாட்டுத் துறைக்கென சிறந்த ஒரு இளம் அமைச்சர் குறிப்பாக விளையாட்டுத் துறையை மட்டுமல்லாது இளைஞர்களின் கனவுகளையும் நன்கு அறிந்த ஒருவர் இருப்பதால் எமது பிரதேசத்தின் இளைஞர் யுவதிகளினதும் சாதிக்கும் கனவுகள் நனவாக்கப்படும் நிலை உருவாகியுள்ளது என்றார்.

# மூத்த ஊடகவியலாளர் கௌரவிப்பு



**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா மாவட்ட மூத்த ஊடகவியலாளர் பொ. மாணிக்கவாசகத்தின் 75வது பிறந்த தினத்தில் ஊடக அமையத்தினால் கௌரவிக்கப்பட்டார்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் யுத்த காலத்தில் போரில் ஈடுபட்ட இரு தரப்பினரின் இழப்புக்கள், மக்களின் மனிதாபிமான நடவடிக்கைகள் இடம்பெயர்வுகள் உட்பட களநிலைத் தகவல்களை பி.பி.சி தமிழோசை செய்தி அறிக்கை ஊடாக உலகுக்குத் தெரியப்படுத்தினார்.

இவர் நேற்று முன்தினம் அவரது இல்லத்தில் 75வது அகவை தினத்தை முன்னிட்டு வவுனியா ஊடக அமையத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் ஊடக அமைப்பின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு அவரது ஊடகத்துறை சார்ந்த செயற்பாடுகளுக்காக கௌரவித்து மதிப்பளித்தனர்.

# நீதிபதிகள் இடமாற்றம்

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவானாக கடந்த இரு வருடங்களாக கடமையாற்றிய மாணிக்கவாசகர் கணேசராஜா மன்னாரிலிருந்து திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றிய நீதிபதி பெருமாள் சிவகுமார் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதியாக இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் திங்கட்கிழமை தொடக்கம் புதிய இடங்களில் தங்கள் பொறுப்புக்களை ஏற்கின்றனர். அத்துடன் மன்னார் நீதவான் நீதிமன்றில் தற்காலிகமாக பணியாற்றி வந்த நீதிமன்ற பதிவாளர் கந்தசாமி நவநீதன் மன்னாரிலிருந்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றுக்கும் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றிய தர்சிக்கா தர்ஷன் மன்னார் நீதவான் நீதிமன்ற பதிவாளராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# மதத்துக்கப்பால் மனித நேயம் மிக்க பண்பாளர்

அனுதாப செய்தியில் ரிஷாட்

**மன்னார் குறூப் நிருபர்**



மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை பேராயர் இராயப்பு ஜோசப், மதத்துக்கு அப்பாலும் மனித நேயத்துடன் வாழ்ந்த பண்பாளர் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

பேராயரின் மறைவு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அனுதாப அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை பேராயர் இராயப்பு ஜோசப் இழப்பானது, அனைத்து இன மக்களுக்கும் அதிர்ச்சியையும் கவலையையும் தருகிறது. அவர் சகல இன மக்களினதும் கௌரவத்துக்கு உரியவராகவும் நன்மதிப்பை பெற்றவராகவும் இருந்தார்.

அது மாத்திரமின்றி அவர் அனைவராலும் நேசிக்கப்பட்டவர். இன, மத பேதங்களுக்கு அப்பால் மாவட்டத்தின் அபிவிருத்தியில் கூடிய கரிசனை செலுத்திய பேராயர், துன்பப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான பேதமுமின்றி உதவி புரிந்தவர்.

அவர் ஏழை மக்களின் அன்புத் தோழனாக இருந்தது மாத்திரமின்றி, இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் விரும்பினார். அதற்காக அரும்பாடுபட்டார். அனைத்து மத பெரியார்கள், அரசியல் பிரதிநிதிகள், சாதாரண மக்கள் ஆகியோருடன் நல்லுறவைப் பேணி, சமூக முன்னேற்றத்துக்காக உழைத்தார்.

# போதைப் பொருட்களுடன் வவுனியாவில் ஐவர் கைது

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் போதை பொருட்களுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிசாரின் விசேட நடவடிக்கையின் போது வவுனியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு இவர்களிடம் இருந்து ஹெரோயின் மற்றும் கஞ்சா மீட்கப்பட்டது.

இதில் வைரவபுளியங்குளம் பகுதி மற்றும் சிவபுரத்தை சேர்ந்த இருவரிடமிருந்து 620 மில்லிக்கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மற்றைய மூவரிடமிருந்து 04 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இத் தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.





யாழ்.தெல்லிப்பளை பகுதியில் ஈ.பி.டி.பி கட்சியின் மக்கள் சந்திப்பின் போது...

# சங்கிலிய மன்னனின் புதையல் தேடி அகழ்வு?

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள வீடொன்றினுள் புதையல் தேடி அகழ்வுகள் இடம்பெற்றனவா எனும் கோணத்தில் பொலிசார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நல்லூர் சங்கிலியன் வீதியில் உள்ள வீடொன்றினுள் இராணுவத்தினர் என தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட சிலர் நேற்று முன்தினம் நண்பகல் அகழ்வு பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என பொலிசாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

நீதிமன்ற அனுமதி பெறப்படாத நிலையில் அகழ்வு பணிகளை முன்னெடுக்க முடியாது. அதனால் பொலிசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். பொலிசாரின் வருகையை கண்டதும், அகழ்வு பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் அவ்விடத்திலிருந்து தப்பி சென்றுள்ளனர்.

அதனையடுத்து வீட்டின் உரிமையாளரை பொலிசார் விசாரணைக்கு உட்படுத்திய போது முன்னுக்கு பின் முரணான தகவல்களை வழங்கியுள்ளார். அதனை அடுத்து வீட்டினை பொலிசார் பார்வையிட்ட போது, வீட்டினுள் சாமி அறை பகுதியிலேயே அகழ்வு பணிகள் இடம்பெற்றுள்ளன.

பல்கலை மாணவரின்
மந்த மாருதம்

# இயற்கையின் பொக்கிஷமான கண்டல் தாவரங்கள்..!

## மிருசுவில் கண்டல் காடு நோக்கிய பயணம்..!!



பா.நிர்மலா
இரண்டாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்





இயற்கை அழகு ஒன்றாகச் சங்கமித்து இருக்கக்கூடிய கண்டற் சூழற்தொகுதிகள் இன்று பொருளாதார நடவடிக்கைகளால் அதிகம் அழிக்கப்பட்டு வருகின்றன.

உவர்நீருடன் சேறு கலந்த அமிலத்தன்மையுடனான சதுப்பு நிலப் பிரதேசங்களில் வேறுஎந்தத் தாவர இனங்களும் வளர முடியாத சூழலில் சூழற் காரணிகளின் தாக்கங்களை எதிர்கொள்ளக் கூடியவாறான தனித்துவமான விசேட இசைவாக்கங்களைப் பெற்று அடர்ந்து பசுமையாக செழித்து வளர்ந்து காணப்படும் அதிசயத் தாவர இனங்களே இக் கண்டல் தாவரங்கள் ஆகும்.

இவை மரங்களாகவும், செடிகளாகவும் மற்றும் ஒரு வித்திலைத் தாவரங்களாகவும் இனத்திற்கு இனம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. கண்டல் தாவரங்கள் உவர்நீர்ச் சூழலில் வளர்வனவாக இருந்தாலும் கழிமுகங்களிலும், கடனீரேரிகளில் கடல்நீர் உவர்ப்பை விடக் குறைந்த அளவிலான உவர்த்தன்மை கொண்ட நீர்ச் சூழலிலும் செழித்து வளர்கின்றன.

> கண்டல் தாவரத் தடிகள் அலங்காரப் பொருட்களின் உற்பத்திக்காக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கண்டல் காடுகள் நுண்ணங்கிகள் முதல் முலையூட்டிகள் வரையிலான பலவகை உயிரினங்களின் வாழ்விடமாகவும் உள்ளன. விசேடமாக ஓகஸ்ட் மாத நடுப் பகுதியில் பிறநாடுகளிலிருந்து இலங்கையை நாடிப் புலம் பெயரும் ஈரநிலப் பறவைகளின் சரணாலயமாகவும் இக் கண்டற் சூழற் தொகுதிகள் திகழ்கின்றன.

கண்டல் காடுகளில் காணப்படுகின்ற தாவரங்கள், விலங்குகள், நுண்ணங்கிகள் போன்ற உயிர்ச்சூழல் காரணிகளுடன் இணைந்துள்ள உயிரற்ற சூழற் காரணிகள் அனைத்தும் ஒன்றாக 'கண்டற் சூழற் தொகுதி' என அழைக்கப்படுகின்றது. கண்டற் சூழற்தொகுதி மனிதர்களின் பொருளாதாரத்திற்கும் அதிகளவில் பங்காற்றி வருகின்றன.

உலகில் ஏறத்தாழ 112 நாடுகளில் கண்டல் காடுகள் காணப்படுவதாக அறிக்கைகள் கூறுகின்றன. இக்கண்டற் காடுகள் உலகின் மொத்த நிலப்பரப்பில் 18 மில்லியன் ஹெக்டேயர்களாகவும் கணக்கிடப்பட்டுள்ளன. உலகில் காணப்படும் மொத்த கண்டற் பரப்பின் 0.1 சதவீதமான கண்டல் காடுகள் மாத்திரமே இலங்கையில் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, புத்தளம், மன்னார் ஆகிய 14 கரையோர மாவட்டங்களிலே இக்கண்டல் காடுகள் வியாபித்துள்ளன. இலங்கையில் ஏறத்தாழ 6000 ஹெக்டேயர் மட்டுமே கண்டல் காடுகள் உள்ளன எனக் கரையோரப் பாதுகாப்புத் திணைக் களத்தின் அறிக்கை கூறுகின்றது. இலங்கையில் கண்டல் காடுகள் அதிகம் உள்ள மாவட்டமாக புத்தளம் காணப்படுகின்றது. அதற்கு அடுத்ததாக யாழ்ப்பாணம் காணப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுகண்டல்,பெருங் கண்டல் என்ற இரு வகையான கண்டல் காடுகள் நிறைந்தஅழகானதொரு பிரதேசமே தென்மராட்சிப் பகுதியின் மிருசுவில் என்ற இடமாகும். இங்குசிறுகண்டல் காட்டுப் பகுதியில் கண்ணா (வெண்கண்டல்), சிறுகண்டல் (நரிக்கீரி), தில்லை மற்றும் தாழை போன்ற நான்கு வகையான கண்டல் தாவர இனங்களை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கண்ணாவை (வெண்கண்டல்) அவதானிக்கும் போது இத்தாவரமானது தோல் போன்ற சுற்றுக்கணியத்தால் மூடப்பட்டுள்ளது. இதன் முதிர்ந்தகாய்கள் தாய்மரத்தில் இருந்தவாறு ஓரளவு மட்டும் முளைகொண்டு நீர்ச்சூழலில் விழுந்து, பின்னர் மிதந்து செல்லும்போது நீரை உறிஞ்சிப் பொருமுவதன் காரணமாக சுற்றுக்கனியத்தில் பிளவுகள் ஏற்பட்டு, ஆதாரத்தை அடைந்ததும் வேரூன்றி வளர்கின்றன.

அதேபோன்று, சிறுகண்டல் (நரிக்கீரி) தாவரத்தின் வித்துக்கள் தாய்மரத்தில் இருந்தவாறே முளைத்து, வித்திலைக் கீழ்த்தண்டு கூராக நீண்டு வளர்ந்து தொங்கும். பருவமடைந்ததும் தாய் மரத்தை விட்டு இவ் வித்திலைக் கீழ்த்தண்டுகள் நிலைக்குத்தாக நீர்ச் சூழலில் விழுந்துக் கிடையாக மிதக்கும். இதன்போது நீர் உறிஞ்சப்பட்டு இதன் அடிப் பகுதி கனதியடைவதால் நிலைக்குத்தாக மாறி மிதக்கும். இதன்போது தகுந்த ஆதாரத்தை அடைந்ததும் வேரூன்றி வளர ஆரம்பிக்கும்.

தில்லைக் கண்டல் தாவரத்தின் காய்கள் முதிர்ந்ததும் இதன் சுற்றுக்கனியப் பிரிசுவர்கள் மூன்று பாகங்களாகப் பிளவுபட்டு வித்துக்கள் வெளியேற்றப்படும். இத்தில்லையின் வித்துக்கள் கருமை நிறமுடையதாக அல்லது கடும் கபில நிறமுடையதாகக் காணப்படும். இவ் வித்துக்கள் அளவில் சிறியதாகவும் பாரம் குறைந்தும் காணப்படுவதால், இலகுவாக நீரால் காவிச் செல்லப்பட்டுத் தகுந்த ஆதாரத்தை அடைந்ததும் முளைத்து வருகின்றன.

இக்கண்டல் தாவரங்கள் நிலத்தில் சாதகமான சூழ்நிலைகள் முளைத்தலுக்கு இல்லாத காரணத்தால் தாய்த் தாவரமானது அப் பழங்கள் மரத்தில் இருக்கும்போதே முளைக்கச் செய்து, பின்னர் அவற்றை கீழே விழச் செய்கின்றன. இவ் விசேட முளைத்தல் முறை 'சீவகவித்து முளைத்தல் முறை' என அழைக்கப்படுகின்றது. இவற்றைக் கண்டல் தாவரங்களில் அவதானிக்க முடிகின்றது.

மிருசுவில் சிறுகண்டல் காட்டுப் பகுதியில் உள்நாட்டு பறவையினங்கள் மட்டுமின்றி வெளிநாட்டுப்பறவை இனங்களையும் அவதானிக்க முடிகின்றது. வெளிநாட்டுப் பறவைகள் பெரும்பாலும் இந்தியாவின் சிலபகுதிகளில் இருந்தும் ஐரோப்பா போன்ற நாடுகளில் இருந்தும் வந்துசெல்வதாக அப் பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர். இப் பறவையினங்கள் தமது சொந்த நாட்டில் சாதகமான காலநிலை மாற்றமடையும் போது, அக் காலநிலையிலிருந்து விலகி, இங்கு உணவைத் தேடி வருகின்றன.

'இந்த வலசைப் பறவையினங்கள் சிறுகண்டல் காட்டுப் பகுதியில் கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதாகவும், அவற்றைச் சிலர் அழித்து உண்பதால் அவை கலைந்து போகின்றன. அவ்வாறு அப்பறவைகள் கலைந்து செல்வதனால் அவற்றின் முட்டைகளைக் காகம் போன்ற பறவைகள் சேதப்படுத்தி விடுகின்றன' என அப் பிரதேச மக்கள் கவலையோடு குறிப்பிடுகின்றனர். உணவு தேடி தற்காலிகமாக பறவைகள் வந்து மீண்டும் தமது சொந்த நாட்டிற்குச் செல்லுதல்' வலசைப் போதல்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது.

இச் சிறுகண்டல் காட்டுப் பகுதியில் காணப்படும் உயிரினங்களாகப் பல்வேறு மீனினங்கள் மற்றும் நண்டினங்களும் காணப்படுகின்றன. அண்மைக் காலத்தில் வந்து சேர்ந்த மீனினமாக 'திலாப்பியா' காணப்படுகின்றது. இவ்வாறு பல்வேறு உயிர்ப் பல்வகைமை கொண்ட இக் கண்டல் தாவரப் பகுதியானது அப் பகுதியின் உயர்காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்துவனவாகவும் காணப்படுகின்றன. இச் செயற்பாட்டின் காரணமாக கண்டல் தாவரப்பகுதிகள் 'அலையாத்திக் காடுகள்' என்ற சிறப்பு பெயரால் அழைக்கப்படுகின்றன.

கண்டல் தாவரங்கள் மக்களின் பொருளாதாரத்திலும் பாரிய பங்களிப்பினைச் செய்கின்றன. இங்கு நன்னீர் மீன்பிடியில் மக்கள் அதிகம் ஈடுபடுவதால், அதன் மூலமாக நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்லும் வருமானத்தை அம் மக்கள் பெற்றுக் கொள்கின்றனர். இவற்றை தமது நாளாந்த உணவுத் தேவைக்காகவும் அவற்றை அம் மக்கள் பயன்படுத்துகின்றனர்.

மேலும், இக் கண்டல் தாவரத் தடிகள் அலங்காரப் பொருட்களின் உற்பத்திகாக வெளிநாடுகளுக்கு ஒரு கிராம் கண்டல் தடி நாற்பது ரூபாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கண்டல் தாவரத் தடிகள் மீன்வலைகள் மற்றும் நூல்களுக்குச் சாயம் போடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. அதன் மூலமும் மக்கள் வருமானத்தை ஈட்டிக் கொள்கின்றனர்.

மேலும், வெட்டப்பட்ட கண்டல் மரத்தின் பகுதிகள் நீரில் போடப்படுவதால் அப்பகுதிகள் மீன்களின் வாழ்விடமாகவும், இரைகொல்லிகளிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொண்டு அவை இனப் பெருக்கத்தை மேற்கொள்வதற்கான சிறந்த இடமாகவும் திகழ்கின்றன. இப் பகுதிகளில் சிலவாரங்களுக்குப் பின்னர் வலைகள் போடப்பட்டு மீன்களும் பிடிக்கப்படுகின்றன.

மேலும், கண்டல் காடுகள் உள்நாட்டுப் பறவைகள்,வெளிநாட்டுப் பறவைகள் மற்றும் விலங்குகளின் வாழ்விடமாகக் காணப்படுவதால், ஊரவர்களுடன்; வேறு பிரதேசங்களில் இருந்து வருகை தரக்கூடிய இளைஞர்கள் எனப் பலரும் மீன்களைப் பிடித்தல், படகுகளின் மூலம் கண்டல் உட்பகுதிக்குள் சென்று பறவைகளை இரசித்தல் மற்றும் இயற்கையை இரசித்துப் பொழுது போக்குதல் என இப் பிரதேசமே ஒரு சிறிய சுற்றுலாத் தலமாக மாறியிருக்கிறது.

இங்குள்ள கண்டல் தாவரங்கள் பெரும்பாலும் இப் பகுதி மக்களின் விறகுத் தேவைக்காகவும் பயன்படுத்தப்படுவதால், கண்டல் காடுகள் பெருமளவிலான பாதிப்பை எதிர்கொள்வதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக விறகுத் தேவைக்காக இக் கண்டல் வளங்கள் அதிகம் பயன்படுத்தப்படுவதனால் அக் காடுகள் அழிவடைந்து வருவதோடு சட்டத்திற்குப் புறம்பான தங்கூசி மீன்பிடி முறையினால் மீனினங்களும் அழிவடைந்து வருவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக அப் பகுதியை நம்பி தொழில் புரிகின்ற மக்களினது வாழ்க்கை பாதிப்படைவதுடன் இயற்கையை அழகுபடுத்துகின்ற பறவை இனங்களும் அழிவடைந்து வருவதை அப் பகுதியில் அவதானிக்க முடிகின்றது.

நாட்டிற்கும் சமூகத்திற்கும் மிகப் பெரிய பொக்கிஷமாகத் திகழும் கண்டல் காடுகளைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமை ஆகும். இது பற்றிய தெளிவு மக்கள் மத்தியில் காணப்படும் பட்சத்தில் இயற்கை வளங்களை அழிவடையாது பாதுகாத்துக் கொள்ள முடியும்.

# போதையால் மாறும் பாதை..!
# தடுக்கத் திருவுளம் கொள்வோம்..!





உ.நிந்தனா
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

போதைப் பொருளுக்கு அடிமையாதல் மற்றும் அதனுடன் தொடர்பான ஏராளமான பிரச்சினைகளுக்கு இலங்கை முகங்கொடுத்து வருகிறது. எம் மக்களின் மத்தியிலே நல்லவற்றைவிடத் தீய விடயங்களால் அதிகம் ஈர்க்கப்படுகின்ற எழுதப்படாத ஒரு விதிமுறை காணப்படுகின்றது.

அதாவது, நல்ல மாற்றங்களை விடவும் தீய மாற்றங்களையே மக்கள் அதிகம் விரும்புகின்றனர். இலங்கையில் முதல் முதலாகத் திறந்த பொருளாதாரக் கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை போன்ற காரணிகள் நவீன போதைப் பொருட்கள் நாட்டினுள் பிரவேசிக்க வழி வகுத்தன.

எம் நாட்டில் போதைப்பொருள் பாவனையாளர்கள் 1920களிலேயே முதலில் அடையாளங் காணப்பட்டிருந்ததாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. 1980களில் போதைப்பொருள் பாவனையை ஒரு வளர்ந்து வரும் பிரச்சினையாக இலங்கை அரசு முகங்கொடுக்க ஆரம்பித்தது.

தற்காலத்தில் பள்ளி மாணவர்கள் முதல் இளைஞர்கள் வரை மது, புகையிலை, சிகரெட், கஞ்சா போன்றவற்றுக்கு அடிமையாகி, தமது எதிர்கால வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கி வருகின்றனர். எமது நாட்டினைப் பொறுத்தவரைக்கும் குச்சொழுங்கையில் இருந்து முச்சந்திவரை போதைப் பொருட்களுக்காகவே ஒரு பகுதியினர் கூடிக் கலைகின்றனர்.

இன்றைய சமுதாயம், எம்முடைய மூத்தோரினுடைய பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் அனைத்தையும் தொலைத்துவிட்டு, எங்கிருந்தோ வருகின்ற அநாகரீகங்களைப் பின்பற்றி நாகரீக வளர்ச்சி என்ற பெயரிலே போதைப்பொருள் பாவனையினால் அவர்தம் வாழ்வை அபாயகரமாக்கிக் கொண்டு செல்கின்றனர்.

இப் போதைப்பொருட்களின் பாவனை உச்சி முதல் உள்ளங்கால் வரை உடலின் அநேக பகுதிகளைப் பாதிப்பிற்கு உள்ளாக்குகின்றது என்பதை இவர்களில் பலரும் உணர்வதில்லை. இதன் பயன்பாட்டினால் ஈரல் நிரந்தரமாகப் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், உடலின் புரதத்தொகுப்பு, நஞ்சகற்றல் தொழிற்பாடு என்பன பாதிக்கப்படுவதோடு,சிறுநீரக நோய், குடற் புண்கள், இரத்தவாந்தி, புற்று நோய், தசையழற்சி எனப் பலகொடிய நோய்களின் தாக்கத்திற்கும் உள்ளாகும் நிலை ஏற்படுகின்றது.

மேலும், மலட்டுத் தன்மை போன்ற பாலியல் ரீதியான பிரச்சினைகளும் இதனால் உருவாகுகின்றன. இது மட்டுமன்றி உளச்சோர்வு, நித்திரையின்மை, மனவழுத்தம், குடும்ப வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பொருளாதாரப் பின்னடைவு, வீதி விபத்துக்கள், குடும்ப உறவுகள் அநாதரவாகும் நிலை போன்றனவும் போதைப் பொருட்களின்பாவனையினால்உண்டாகும்துன்பியல்புகளாகும்.

ஒருவர் மதுப் பழக்கத்தைக் கொண்டிரா விட்டால் அவரை ஏளனமாகப் பார்ப்பதும், ஒதுக்குவதும் தாழ்த்திப் பேசிக் கிண்டல் செய்யும் நிலையும் அண்மைக் காலத்தில் பரவலாகக் காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல், பிறந்தநாள் மற்றும் விசேட, மகிழ்ச்சிகரமான நிகழ்வுகளிலும் மரணச் சடங்கு உள்ளிட்ட துக்கச் சம்பவங்களின் போதும் மதுவைப் பயன்படுத்துதல் ஒரு பாரம்பரியமாக மாறிவருகின்றது. இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

ஆண்களும் பெண்களும் என இரு பாலினரும் போதைப்பொருளுக்கு அடிமையாகி வருகின்றனர். ஓடியாடி இளமைப் பருவத்தினைக் கழிக்க வேண்டிய இன்றைய இளம் சமுதாயம் இப் போதையின் பாவனையால் மூலையில் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு, இதற்கு அடிமையான சிலர் பணம் இல்லாத நிலையிலே களவு, கொலை, வழிப்பறி போன்ற செயல்களில் ஈடுபடுகின்றமையும் கவலைக்கிடமான ஒன்றாகும்.

மேலும், போதைப்பொருள் பாவனையினால் குடும்பத்தில் சண்டை மற்றும் அயலவரோடு சண்டை, பாலியல் துஷ்பிரயோகம் போன்றனவும் நடைபெறுகின்றன. உதாரணமாக, புங்குடுதீவு மாணவி வித்தியா வன்கொடுமைக்கு ஆளாகி கொலை செய்யப்பட்ட துர்ப்பாக்கியச் சம்பவத்தில் குற்றவாளிகளின் போதைப்பொருள் பாவனையும் ஒரு முக்கிய காரணமென விசாரணையில் கண்டறியப்பட்டது.

மேலும், பல பெண்களும் சிறுமிகளும் இதே போன்ற போதைவஸ்துக்கு அடிமையானவர்களால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் நாடளாவிய ரீதியிலும் நிகழ்ந்துள்ளன.

1989ம் ஆண்டில் இருந்து ஆனி மாதம் 26 ஆம் திகதியைச் சர்வதேசப் போதைப்பொருள் ஒழிப்புத் தினமாக ஐ.நா பிரகடனப்படுத்தியுள்ளது. இலங்கை அரசும் குறிப்பிட்ட வாரத்தைப் போதைப்பொருள் ஒழிப்புவாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசாங்கம் இப் போதைப் பொருட் பாவனையினைக் கட்டுப்படுத்தும்; முகமாகப் பல்வேறு சட்டதிட்டங்களை உருவாக்கி வருகின்ற போதிலும் அவை பெரியளவில் வெற்றியளிக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

போதைப்பொருள் பாவைனையிலே மேல் மாகாணம் முதலிடத்தில் இருந்து வருகின்றது. அண்மைக் காலங்களில் வடக்கு மாகாணத்திலும் போதைப்பொருள் பாவனையானது அதிகரித்துக் காணப்படுகின்றது எனவும், இப் பாவனையாளர்களில் 50 சதவீதமானவர்கள் திருமணமாகாத இளைஞர்கள் எனவும், அதில் 69 சதவீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் எனவும் சுகாதார அமைச்சின் அண்மைய அறிக்கை கூறுகின்றது. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான பல மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகுகிறார்கள் எனவும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

'மது மற்றும் போதைப்பொருள் பாவனையால் மூளைக்கு உண்டாகும் தாக்கத்தினால் ஏற்படும் பிரதிபலிப்பாக, கதைக்கும்போது தடுமாற்றம் ஏற்படல், பார்வைக் கோளாறு, தவறான தீர்மானம், அதிக கோபம் போன்ற உளநலச் சிக்கல்கள் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன. கர்ப்பிணிகள் மதுபானம் அருந்துவதால் பிறக்கும் குழந்தைகள் விகாரமடைந்து அங்கவீனமடையும் நிலையும் ஏற்படுகின்றது 'எனப் புதுக்குடியிருப்புப் பொது வைத்தியசாலை வைத்தியரான பிரியதர்சினி சாந்தகுமார் குறிப்பிடுகிறார்.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த சட்டங்களைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் மேலும், புதிய சட்டங்களை உருவாக்கி அவற்றினைச் சரியான முறையில் நடைமுறைப் படுத்தல் அவசியம்.

தேசிய வேலைத்திட்டத்தினை உருவாக்கி கிராமந்தோறும் அதனை அமுல்படுத்த வேண்டும். இவ்வாறான செயற்திட்டங்கள் மூலமே போதைப் பொருளுக்கு அடிமையான எமது சமூகத்தினை அதில் இருந்து விடுவிக்க முடியும்.

1984ஆம் ஆண்டிலிருந்து தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு வாரியம் இலங்கையிலிருந்து போதைப்பொருள் பாவனையை ஒழிக்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்றது. இது, போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவது மாத்திரமல்லாமல் போதைப்பொருள் பாவனையில் இருந்து நபர்களை மீட்டு மறு வாழ்வளிக்கும் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது. ஒரு தேசத்தை அல்லது ஒரு சமுதாயத்தை அல்லது ஒரு தனிநபரைத் திட்டமிட்டு நசுக்கிவிட ஏவப்படுகின்ற ஓர் ஆயுதந்தான் போதைப் பொருள். தினமும் போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. வெவ்வேறு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியும் கடத்தல்கள் நடைபெறுகின்றன.

போதைக்கு அடிமையானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கி, மறு வாழ்வு அளிக்க வேண்டும். போதைப்பொருள் விற்பனையைத் தடை செய்தால் மட்டுமே இவ்வாறான அடிமைத்தனங்களைத் தடுக்க முடியும். எவ்வாறாயினும், மனித மனங்களில் சீர்திருத்தங்களையும் நல்ல எண்ணங்களையும் உருவாக்குவதே இதற்கு ஆரோக்கியமானதும் நிரந்தரமானதுமான தீர்வாகஅமையும்.

# நாடளாவிய கண்காணிப்பில் 4,511 குற்றச்சாட்டுக்கள் பதிவு

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய ரீதியில் நேற்று காலை வரை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கமைய 4,511 குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

நாடளாவிய ரீதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி ஏற்படும் இழப்புக்களை தவிர்ப்பதற்காக விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையானது நேற்று வரை இடம்பெற்றது.

அதற்கமைய நேற்று காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் 4,511 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மதுபோதையில் மோட்டார் சைக்கிள்களை செலுத்தியதாக 122 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பாதுகாப்பு தலைக்கவசம் அணியாமல் இருந்ததாக 650 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீதி ஒழுங்கு விதிகளை முறையாக பேணாமை தொடர்பில் 1,021 பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் 10 வாகன விபத்துகள் பதிவாகியுள்ளதுடன், 12 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்போது 5 பாதசாரதிகளும், மோட்டார் சைக்கிளில் பயணித்த 3 பேர், முச்சக்கர வண்டியில் சென்ற 3 பேர் மற்றும் லொறியில் பயணித்த ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

தற்போது மோட்டார் சைக்கிள்களை இலக்குவைத்து முன்னெடுக்கப்பட்டு வரும் சோதனை நடவடிக்கைகள், மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்களை சிரமத்துக்குள்ளாக்கும் நோக்கில் எடுக்கப்பட்ட தீர்மானம் கிடையாது.

விபத்துக்களினால் அவர்களுக்கு ஏற்படும் இழப்புகளை தவிர்ப்பதற்காகவே இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

# ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

50 கிராம் ஐஸ் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்ததாக குடும்பத் தலைவர் ஒருவர் காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பளை கட்டுவனைச் சேர்ந்த ஒருவரே நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கைது செய்யப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர். காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான 50 கிராம் ஐஸ் போதைப்பொருள் சந்தேநபரிடம் கைப்பற்றப்பட்டது.

# "அம்மா நித்திரை கொள்கிறார் என்று என்னை புகையிலை வாங்கிவர சொன்னார்"

## பரந்தனில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில்

## 6 வயது மகன் சாட்சியம்



**பரந்தன் குறூப் நிருபர்**

" அம்மா நித்திரை கொள்கின்றார் என்றும் என்னை புகையிலை வாங்கி வருமாறு" கடைக்கு அனுப்பி விட்டு தானும் செத்து விட்டார் எனப் பரந்தன் சிவபுரம் பகுதியில் கணவன் மனைவி சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தில் அவர்களது 6 வயது சிறுவன் நீதவான் முன்னிலையில் பகீர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

பரந்தன் சிவபுரம் பகுதியில் நேற்று முன்தினம் மனைவியை கடுமையாக தாக்கி கொலை செய்துவிட்டு தானும் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துள்ள சம்பவம் இடம்பெற்றது. இச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் சோகத்தையும் ஏற்படுத்தியது.

சடலங்களை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிவான் ரீ. சரவணராஜா நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் பார்வையிட்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு கட்டளையிட்டுள்ளார்.

இதன்போது சடலத்தை பார்வையிட்ட நீதவான் முன்னிலையில் உயிரிழந்தவர்களின் ஆறு வயது மகன் வாக்குமூலம் வழங்கினார். அதில்," தான் பாடசாலையில் இருந்து வீட்டுக்கு வந்து அம்மாவை கூப்பிடும் போது அப்பா கதவை திறந்தார்.

நான் அம்மாவுடன் போய் நிற்கும் போது அம்மா நித்திரை கொள்கின்றார் என்று சொல்லிக் கொண்டு என்னை கடைக்குச் சென்று புகையிலை வாங்கி வருமாறு அனுப்பிவிட்டு தான் செத்துவிட்டார்" என்று குறிப்பிட்டார்.


1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தத்தின் படி 1961 ஆம் ஆண்டின் 29 D ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

PEOPLE'S BANK

மக்கள் வங்கி

**காணிநிலம் , காணியிலிருக்கும் கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக மதிப்பு மிக்க வர்த்தகச் சொத்தின் ஏல விற்பனை**

அனுமதி பெற்ற நில அளவையாளர் H. சிரிபட்டன என்பவரால் தயாரிக்கப்பட்டு 07.11.2001 ஆய்வு செய்யப்பட்ட நிலவரைப்பட இலக்கம் 1896 இல் லொட் C என குறிக்கப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்ட களுவிதரங்க வட்ட அல்லது படுவட்ட அல்லது மெதகொரட்டுவ என அழைக்கப்படும் நிலமானது, தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், தெற்கு கிருவபத்துவவில் தங்காலை பிரதேச செயலகப்பிரிவில்), தங்காலை மாநகர சபை எல்லைக்குட்பட்ட, மெடக்கெட்டிய கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மெடக்கெட்டிய தங்காலையின் ஹம்பாந்தோட்டை வீதியில் இல.106 இல் அமைந்துள்ளது. கூறப்பட்ட லொட் இலக்கம் C காணி,

வடக்கெல்லை : திட்ட இலக்கம் 1896 இல் குறிப்பிடப்பட்ட லொட் B மற்றும் D ஆலும்
கிழக்கெல்லை : ஹம்பாந்தோட்டை வீதியில் இல.106/1 இல் குறிப்பிடும் டந்துகே வட்ட அல்லது வீரகஹவட்டவாலும்
தெற்கெல்லை : ஹம்பாந்தோட்டை வீதியில் இல.02 இல் குறிப்பிடும் A. A. தீரசேகர நொத்தரிசுவின் நிலத்தாலும்
மேற்கெல்லை : தங்காலையிலிருந்து ஹம்பாந்தோட்டை வரையிலான பிரதான வீதியாலும்

சூழப்பட்டிருக்கிறது. நிலவரைப்பட இலக்கம் 1896 இலக்க நிலவரைப்படத்துக்கேற்ப, காணியிலிருக்கும் கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக காணியின் பரப்பளவு பதின்மூன்று புள்ளி ஒன்று பேர்ச்சஸ் (A-0 R-0 P-13.1) ஆகும். தங்காலை நிலப்பதிவில் G 01/111 இல் பதியப்பட்டது.

**மக்கள் வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்,**
நான் மேலே உள்ள சொத்துக்களை பொது ஏலத்தில்
**வியாழக்கிழமை 29 ஏப்ரல் 2021 அன்று மு.ப 10.30 இற்கு**
**மக்கள் வங்கி -பிராந்திய அலுவலகம் (ஹம்பாந்தோட்டை),**
**146A, மாத்தறை வீதி, தங்காலையில் இரண்டாம் மாடியில் விற்பனை செய்கிறேன்.**

**சொத்துக்கான வழி**
தங்காலை நகர பிரதான சுற்றுவட்ட சந்தியிலிருந்து, தங்காலை ஹம்பாந்தோட்டை பிரதான வீதியில் 250 மீட்டர் தூரம் சென்று குறித்த இடத்தை அடையலாம். பிரதான வீதியின் வலப்புறத்தில் அமைந்துள்ளது.

**தீர்மான அறிவிப்புகளுக்காக**
மேலதிக தகவல்களிற்கு 2020 ஜூலை மாதம் 10 ஆம் திகதி அரச வர்த்தமானி மற்றும் டெய்லி நியூஸ், தினமின, மற்றும் தினகரன் பத்திரிகைகளை பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை: -**
ஏல விற்னையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பனமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்)
(4) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்)
(5) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி
(6) கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிராந்திய தலைமைக்காரியாலயம், ஹம்பாந்தோட்டைக்கு, இல 146A மாத்தறை வீதி, தங்காலை எனும் முகவரியில் 2 ஆம் மாடியில் அமைந்துள்ள தங்காலை கிளையில் செலுத்தப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தை செலுத்த முடியவில்லை எனில் ஏற்கனவே செலுத்திய கொள்முதல் விலையின் 10% இனை பறிமுதல் செய்ய வங்கிக்கு உரிமை உள்ளதுடன் சொத்தை மறுவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமை அலுவலகம்- ஹம்பாந்தோட்டை,
தங்காலை கிளை 2 ஆம் மாடி, இலக்கம் 146A, மாத்தறை வீதி, தங்காலை.
தொலைபேசி. 047-2220902, 047-2220903

முன்னறிவிப்பின்றி மேல் குறிப்பிட்ட ஏல விற்பனையை இரத்துச் செய்யவும்/நிறுத்தவும் வங்கிக்கு உரிமை உண்டு.

DK's AUCTIONS To Professionally Serve the Nation

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதேரா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com



**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29D இன் கீழான விற்பனை**

**மக்கள் வங்கி**

PEOPLE'S BANK

**பொலன்னறுவ நகர கிளை (232)**

**பெறுமதி மிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை**

வடமேல் மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட, மெத பற்று, பொலன்னறுவை நகர சபை எல்லைகளுக்குள், இல.171, தோப்பாவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில், தோப்பாவெவ கிராமத்தில் அமைந்துள்ள, "தலகஹவத்த" என அழைக்கப்படும் அனுமதிபத்திரம் பெற்ற நில அளவையாளர் டீ.முதுன்கொத்கே அவர்களால் 1996 நவம்பர் 23ஆம் திகதி வரையப்பட்ட, 1293ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு "01" எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்: ஏ~00 : றூ.01 : ப.6.6**
**அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக**

**பொலன்னறுவை காணிப்பதிவகத்தில் A25/273 ஆம் இலக்க இணைப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி**
**2021 ஏப்ரல் 21ஆம் திகதி புதன்கிழமை**
**மக்கள் வங்கியின் பொலன்னறுவை நகர கிளை (232) வளாகத்தில்**
**மு.ப. 11.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்**

**சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID-19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏல விற்பனை நடைபெறும்.**

**தீர்மான அறிவித்தலுக்கு**
தீர்மான அறிவித்தலுக்கு தயவு செய்து 2020 நவம்பர் 03ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியை பார்வையிடவும்.

**காணியை சென்றடைவதற்கான வழி:**
பொலன்னறுவை பண்டாரநாயக்க சிலை சுற்று வட்டத்திலிருந்து சுதர்சனாராம மாவத்தைக்கு திரும்பி சுமார் 25 மீற்றர் வரை சென்றதும் குறித்த ஆதனம் பாதையில் இறுதியில் அமைந்திருப்பதை காணலாம் (வாகனம் செல்லும் பாதை என்பதால் பிரவேசிக்க எவ்வித தடையும் இல்லை)

**கொடுப்பனவு செய்யும் முறை:**
ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக தனித்தனியாக முழுமையாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 ½ % (இரண்டரை சதவீதம்)
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்
(6) முத்திரை கட்டணம் மற்றும் விற்பனைச் சான்றிதழுக்கான நொத்தாரிஸ் கட்டணம்

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் முகாமையாளர், மக்கள் வங்கி பொலன்னறுவை நகர கிளை, என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும் உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் மேலே கூறப்பட்ட முகாமையாளர், மக்கள்வங்கி, பொலன்னறுவை நகர கிளை முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி : 0272223294/0272222138

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம**

*ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்*
**129 வருடகால மகோன்னத சேவை**

like us on facebook

**தலைமை அலுவலகம்**
**24, டொரிங்டன் வீதி, கண்டி.**
**தொலைபேசி : 081-2227593**
**தொலை/பக்ஸ் : 081-2224371**
**மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk**

**நகர அலுவலகம்**
**6A, பெயார் பீல்ட் கார்ட்ன்,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி : 011-2671467, 011-2671468**
**தொலை/பக்ஸ் : 011-2671469**
**மின்னஞ்சல்: schokman@samera1892.com**

**இணையதளம்: www.sandslanka.com**



## கேள்வி அறிவித்தல்

**சுகாதார சேவை திணைக்களம் - மேல் மாகாணம்**

**அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல் – 2021**

எமது கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகப் பிரிவிற்குரித்தான பின்வரும் நிறுவனங்களின் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| லொட் இல. | நிறுவனத்தின் பெயர் | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|
| 1 | அவிசாவளை தள வைத்தியசாலை (பெரியவை மற்றும் சிறியவை) | 1000.00 |
| 2 | ஹோமாகம தள வைத்தியசாலை (பெரியவை மற்றும் சிறியவை) | 1000.00 |
| 3 | மாளிகாவத்தை வைத்தியசாலை (பெரியவை மற்றும் சிறியவை) | 500.00 |
| 4 | தலங்கம வைத்தியசாலை (பெரியவை மற்றும் சிறியவை) | 500.00 |
| 5 | நவகமுவ வைத்தியசாலை (பெரியவை மற்றும் சிறியவை) | 500.00 |
| 6 | கொஸ்கம வைத்தியசாலை (பெரியவை மற்றும் சிறியவை) | 500.00 |
| 7 | பாதுக்க வைத்தியசாலை (பெரியவை மற்றும் சிறியவை) | 500.00 |
| 8 | அத்துருகிரிய வைத்தியசாலை (பெரியவை மற்றும் சிறியவை) | 500.00 |
| 9 | பாலியல்சார் நோய்கள் ஒழிப்புப் பிரிவு (பெரியவை மற்றும் சிறியவை) | 500.00 |
| 10 | 71 பற்சிகிச்சை நிலையங்களுக்காக (பெரியவை மற்றும் சிறியவை) | 200.00 |

கேள்வி ஆவணங்களை 2021-04-03ஆம் திகதி முதல் 2021-04-26ஆம் திகதி வரை வாரத்தின் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப.2.45 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணத்தை மேற்குறிப்பிடப்பட்ட வகையில் இயைபுடைய லொட் இலக்கத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை கொழும்புப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

தேவையாயின் கேள்வி ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை 0112326248 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்திய இரு நகல்களிலான கேள்வி ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக) வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக்குறி பொறித்து இந்த அலுவலகத்தின் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத் தபாலில் தவிசாளர், பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. 1287, புதிய செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு கிடைக்கச் செய்யலாம்.

கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அழுக்குத் துணிகளை சலவை செய்தல் - லொட் இல. (…….) வழங்கலுக்கான விலைகள் - 2021'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

2021-04-27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுறும் என்பதுடன் அவைகள் 2021-04-27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இவ்வலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**த.பெ. இல. 1287, புதிய செயலகக் கட்டிடம்,**
**மாளிகாவத்தை,**
**கொழும்பு-10**



திகதி 01.04.2021 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4444
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 14,424,280.00
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 8 5 3 9 9 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,328,813.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2739
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,129,000.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 12 30 60 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,371,516.40

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 805
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,473,660.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 126,246,338.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,938,204.80
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து M சுப்பர் இலக்கம் 13 வெற்றி இலக்கங்கள் 26 35 55 73

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 481
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,132,400.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 12 17 55 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 91,158,495.20

செவன
சீட்டிழுப்பு இலக்கம் : 327
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,500,580.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 13 32 39 49
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,000,000.00

01.04.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 767,068
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரு.35,659,920.00
ரு. 2,000,000.00 பரிசுகள் 02 ரு. 1,000,000.00 பரிசுகள் 04 ரு. 100,000.00 பரிசுகள் 35

- ரு. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

**மின் பாவனையாளர்களுக்கு சிறந்த விநியோகம் மற்றும் சேவையினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மின்சார சபை கீழ் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சார தொகுதி பராமரிப்பு, புனரமைப்பு அல்லது கட்டுமானங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்காக அப்பிரதேசங்களில் தற்காலிக மின்வெட்டு கீழ் காட்டப்பட்டுள்ள நாட்களில் / நேரங்களில் இடம்பெறும். இதற்காக வாடிக்கையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்வதோடு திட்டமிட்ட திருத்தங்கள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் விநியோகத்தினை வழமைபோல் மேற்கொள்ள இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.**

# ஊவா மாகாணம் - 01 - ஏப்ரல் 2021

## மின் பொறியலாளர் பிரதேசம் : தியதலாவ

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : தியதலாவ

2021-04-05 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த** : ஹப்புதலைபெட்றோலியம்,
**விநியோகம்** : ஹப்புதலை கொவில் வீதி, ஹப்புதலைநகரம், ஹப்புதலை சீ பெட்கோ

2021-04-06 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : மொரகெட்டிய, நிக்கனபொத்த, லேமஸ்தொட்ட, அக்கர 100 கக்குடுஅராவ, முத்துவநாகம, முருத்தஹின்ன

2021-04-07 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : மொரகெட்டிய

2021-04-08 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : மொரகெட்டிய, நிக்கபொத்த, லேமஸ்தொட்ட, அக்கர 100 கக்குடுஅராவ, முத்துவநாகம, முருத்தஹின்ன

2021-04-09: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : மொரகெட்டிய

2021-04-10: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : அக்கர 100 கக்குடுஅராவ

2021-04-28 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : மொரகெட்டிய, நிக்கபொத்த, லேமஸ்தொட்ட, அக்கர 100 கக்குடுஅராவ, முத்துவநாகம, முருத்தஹின்ன

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : பண்டாரவளை

2021-04-03 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த** : யொவுன் சேனாங்கய
**விநியோகம்** : பூனாகல பாதை (கல்வெல), பயிற்சி கல்லூரி பிந்துனுவெவ, மதுவெல் பத்தன

2021-04-05 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : பூனாகல பாதை (கோயில்)

2021-04-06 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம்** : ஜலசாகந்த
**விநியோகம்** : தெஹிவின்ன, வேல்லேவெல

2021-04-07 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த** : ஜடீஎன் நாயபெத்த
**விநியோகம்** : பட்டவல, மீரியகஹா சந்தி, சுரம்யகம, கெடியாரொத, திக்கராவ, வேல்லேவெல, அம்பேகொட, திகனதென்ன, ஹீல்ஓய

2021-04-08 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : மதுவெல்பத்தன, தெஹிவின்ன, வேல்லேவெல

2021-04-09 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : தெஹிவின்ன, மிரஹாவத்த, மகுலெல்ல குருந்துகொல்ல

2021-04-10 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : மிரஹாவத்த பாடசாலை, வேல்லேவெல

2021-04-12 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : அமுனுமில்ல

2021-04-15 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : அபேபுர

2021-04-16 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : பெரஹெட்டிய

2021-04-17 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : எத்தலகெதர

2021-04-19 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம்** : ஊவா ஹைலண்ட்
**விநியோகம்** : அமுனுதோவ,

2021-04-20 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : குருகுதே, ஹீல்ஓய

2021-04-21 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : கட்டுகஹசந்தி, அமுனுதோவ

2021-04-22 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம்** : ஐஸ்லெபி தோட்டம்
**விநியோகம்** : ஹீல்ஓய

2021-04-23 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : கரந்தகொல்ல, ஹுணுகெட்டிய

2021-04-24 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : அமுனுதோவ

2021-04-27 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : அம்பதண்டேகம

2021-04-28 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : தியபிபில, சென். தோமஸ்கல்லூரி, அமுனுதோவ, ஹீல்ஓய

2021-04-29 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : லக்சிரிகம

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : வெலிமடை

2021-04-03 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : பொரலந்த நகரம், பொரலந்த கல்லூரி

2021-04-05 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : பிட்டபொல

2021-04-06 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : கல்லேதன்ட, கம்பெத்த

2021-04-07 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : ஹன்னாரங்கொல்ல, வத்துகொடவெல

2021-04-08 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம்** : கொலிட்டிசீட்
**விநியோகம்** : கந்தேபுஹுல்பொல

2021-04-09 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : வங்கியகும்புர, ஓலகம

2021-04-19 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : ஊவாபென்ஹெட்தோட்டம், நெதுன்கமுவ3 (ஆலயம்)

2021-04-20 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : நெதுன்கமுவபாடசாலை

2021-04-21 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம்** : கலுபுலுலந்தடெலிகொம்
**விநியோகம்** : மெதோவிட்ட, கலுபுலுலந்தடெலிகொம், வியலகும்புர

2021-04-22 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : அமரகோன்கம

2021-04-23 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : டீ.சீ. புஹுல்பொல, மொரகொல்ல

2021-04-24 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : டிசிதுரகல

2021-04-27 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : புஹுல்பொல புதிய, பிரயிம் லேன்ட்

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : ஊவா பரனகம

2021-04-03 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : துப்பிட்டிய, மஹகும்புர, கலபட்டிய புலத்வத்த

2021-04-06 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : மீரியகமத்த

2021-04-08 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : துப்பிட்டிய, மஹகும்புர, கலபட்டிய புலத்வத்த

2021-04-09 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : கலபட்டிய புலத்வத்த

2021-04-10 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : மீரியகமத்த

2021-04-20 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : துப்பிட்டிய, மஹகும்புர, கலபட்டிய புலத்வத்த

2021-04-22 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : மீரியகமத்த

2021-04-23 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : கலபட்டிய புலத்வத்த

2021-04-29 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : கலபட்டிய புலத்வத்த

## மின் பொறியலாளர் பிரதேசம் : மஹியங்கனை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : கந்தெகெட்டிய

2021-04-03 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : ஹாபத்கமுவ

2021-04-05 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த** : கெதிக் இன்ஜினியரிங், மெலிபந் ஜவுளி 2, ஜயசிரி அரிசி ஆலை
**விநியோகம்** : அக்லஉல்பொத்த, அத்துருஎல்ல, கொடயகம, கரந்தகஹமட, கிரிகால லந்தகரந்தகஹமட, அராவ (புதிய), பொல்கஹ அராவ, மஹியங்கனை வீதி - 16 ஆம் கட்டை, விஹாரலன்த, பலகொல்ல, வீதி அபிவிருத்தி அதிகார சபை, மெலிபந்ஜவுளி1

2021-04-06 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : பதுளுஓயா

2021-04-09 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : கதபொத்தாவ, போபிட்டிய, லிந்தஹென்ன

2021-04-18 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : மகுல்கொல்ல - மீகஹகிவுல

2021-04-24: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : தலகஹகும்புர

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : ரிதீமாலியத்த

2021-04-05 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : தமுனகெட்டிய, புபுல, சீ.பீ.எல். அக்ரோ, குரவித்தான, ரத்மலகெட்டிய (பீரலின்த), தம்பகஹாபிட்டிய, தம்பகொட உடுயாய, வீரகொல்ல, பின்னகொல்ல, கல்கொடயாயமஹகம பாடசலை, உடதோவ மஹகம, பலன்தல்கொல்ல, உரகோடே, ரிட்டிகஹஅராவ, திக்யாய, குருபங்வெலகொஹான

## மின் பொறியலாளர் பிரதேசம் : மொனராகல

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : மொனராகல

2021-04-03 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : கரந்தவத்தை, மாகந்தனமுல்ல 2, காமிணிபுர, மொனராகல 2 (நீதிமன்றத்துக்கு அருகில்)

2021-04-05 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : கரவில, சிரிகல வைத்தியசாலை, ஒக்கம்பிட்டிய, விஹாரமுல்ல வீதி

2021-04-06 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம்** : தொழில்நுட்ப கல்லூரி, மொனராகல தோட்டம்
**விநியோகம்** : எல்லகரவில, கல்தென்மண்டிய

2021-04-07 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : அலுபொத்த, டீ.சீ. சிரிகல (பொத்துவில் பாதை), ஒக்கம்பிட்டிய2போகஸ்சந்தி, சிரிவிஜயபுர

2021-04-08: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : படல்கும்புர 1 (வைத்தியசாலை அருகில்), கல்தென்மண்டிய 2, ஹிந்திகிவுல 1

2021-04-09: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : போகஹபெலஸ்ஸ, மாலிகாவில (102 சந்தி), பாலாறுவ (ஹொரம்புவ)

2021-04-16 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம்** : இ.பொ.ச. - மொனராகல
**விநியோகம்** : தம்பகொட, ஹுலந்தாவசந்தி

2021-04-17 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : தெஹிகின்தகம, நியதெல்ல, கலவெலராகம

2021-04-19 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : ஹீலந்தாவ தெற்கு, மட்டுகொட்டந் அராவ புதிய, மாலிகாவில நீர் விநியோக, கும்புக்கன்ன

2021-04-20 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : ஹீலந்தாவ இடது, தமபேயாய வெவே பெதெச, மஹகொடயாய

2021-04-21 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : வெதிகும்புர, கட்டுவாமட 1, தொழிற்சாலை காலணி

2021-04-22: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : கரமெட்டிய, ராஜகண்டிய திக்யாய, கிவுலேஆர

2021-04-23: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : மீகஹயாய, புன்சிசிகம, கெமுனுபுரயாய ஹீலந்தாவ, ஒக்கம்பிட்டிய 1

2021-04-24 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த:** பெல்வத்தை சீனி கூட்டுத்தாபனம் படல்கும்புர,
**விநியோகம்** : வசிபன, இஹவ கஹம்பான

2021-04-27 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : புஸ்பெத்த, எலமானயாய, கஹம்பான, நியதெல்ல

2021-04-28 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : மட்டுகொட்டந் அராவ 16 ஆம் கட்டை, வெஹெரகொட, கடொல்பெத்த, ஒக்கம்பிட்டிய 1

2021-04-29 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : தலவாகம, நீர் விநியோகம் கட்டுகஹகல்கே, தெனகல்லந்த

2021-04-30 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : உடகங்கொட, நீர் விநியோக பம்ப் லுனகல ஜனபதய, மரத்தொழில் வலயம் 1, நியதெல்ல

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : வெள்ளவாய

2021-04-03 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த** : தொல் லங்கா 3, தொல் லங்கா 4, தொல் லங்கா 5, தொல் லங்கா 1, தொல் லங்கா 2, தொல் லங்கா 6
**விநியோகம்** : மெதகம - நெலுங்கம (னரவில கொட்டுவ), வெவேயாய வகுருவெல, வுகுருவெல, அலுத்வெல, வேகட - யட்டியல்லாதொட்ட, கோனகெட்டிய ரஜ மாவத்தை, வெல்பத்ஆர, கோன்கெட்டிய 18 ஆம் கட்டை, வள்ளியம்மா கம 17 ஆம் கட்டை, கோன்கெட்டிய19 ஆம் கட்டை, கல்பிட்ட ஆரகம, பீலெஸ்ஸவெவகிராமம், கொனாகங்ஆர, தியகிரித்த, ப்லொக் 15 - 16

2021-04-04 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : ஹிங்குருகடுவ, கெஹெல் அந்கல, உடஅராவ (பெரகெட்டிய)

2021-04-05 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த** : தொல் லங்கா 3, தொல் லங்கா 4, தொல் லங்கா 5, தொல் லங்கா 1, தொல் லங்கா 2, தொல் லங்கா 6
**விநியோகம்** : மெதகம - நெலுங்கம (னரவில கொட்டுவ), வெவேயாய வகுருவெல, வுகுருவெல, அலுத்வெல, வேகட - யட்டியல்லாதொட்ட, கோனகெட்டிய ரஜ மாவத்தை, வெல்பத்ஆர, கோன்கெட்டிய 18 ஆம் கட்டை, வள்ளியம்மா கம 17 ஆம் கட்டை, கோன்கெட்டிய19 ஆம் கட்டை, கல்பிட்ட ஆரகம, பீலெஸ்ஸவெவ கிராமம், கொனாகங்ஆர, தியகிரித்த, ப்லொக் 15 - 16

2021-04-06: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த** : ஹொரபொக்க கருப்பு ஆலை (சிரிக்கத கருப்பு ஆலை), சீ.எச்.டீ. ரன்தெனிய
**விநியோகம்** : ஹிங்குருகடுவ, கெஹெல் அந்கல, உடஅராவ (பெரகெட்டிய), உடஅராவ, புபல, மொரட்டுவாகம, மொரட்டுவாகம 2, ஹொரபொக்க

2021-04-09 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த** : ஹொரபொக்க கருப்பு ஆலை (சிரிக்கத கருப்பு ஆலை), சீ.எச்.டீ. ரன்தெனிய
**விநியோகம்** : ஹிங்குருகடுவ, கெஹெல் அந்கல, உடஅராவ (பெரகெட்டிய), உடஅராவ, புபல, மொரட்டுவாகம, மொரட்டுவாகம 2, ஹொரபொக்க

2021-04-10 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த** : தொல் லங்கா 3, தொல் லங்கா 4, தொல் லங்கா 5, தொல் லங்கா 1, தொல் லங்கா 2, தொல் லங்கா 6
**விநியோகம்** : மெதகம - நெலுங்கம (னரவில கொட்டுவ), வெவேயாய வகுருவெல, வுகுருவெல, அலுத்வெல, வேகட - யட்டியல்லாதொட்ட, கோனகெட்டிய ரஜ மாவத்தை, வெல்பத்ஆர, கோன்கெட்டிய 18 ஆம் கட்டை, வள்ளியம்மா கம 17 ஆம் கட்டை, கோன்கெட்டிய19 ஆம் கட்டை, கல்பிட்ட ஆரகம, பீலெஸ்ஸவெவகிராமம், கொனாகங்ஆர, தியகிரித்த, ப்லொக் 15 - 16

2021-04-17 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்** : ரந்தெனிய, கீரியகொல்ல

2021-04-20 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த** : ஹொரபொக்க கருப்பு ஆலை (சிரிக்கத கருப்பு ஆலை), சீ.எச்.டீ. ரன்தெனிய
**விநியோகம்** : உடஅராவ, புபல, மொரட்டுவாகம, மொரட்டுவாகம 2, ஹொரபொக்க, ரந்தெனிய, கீரியகொல்ல

2021-04-22 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த** : ஹொரபொக்க கருப்பு ஆலை (சிரிக்கத கருப்பு ஆலை), சீ.எச்.டீ. ரன்தெனிய
**விநியோகம்** : உடஅராவ, புபல, மொரட்டுவாகம, மொரட்டுவாகம 2, ஹொரபொக்க, ரந்தெனிய, கீரியகொல்ல

2021-04-23: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த** : வருணகம இராணுவ முகாம், உப்புல் மெட்டல் க்ரஷர்
**விநியோகம்** : வருணகம, பெல்வத்த ப்லெக் 2, ஆனபல்லம பாடசாலை வீதி, கண்டியாகம, ரணவிருப்புர, பஹல வர்ணகம

2021-04-24 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** ஹொரபொக்க கருப்பு ஆலை (சிரிக்கத கருப்பு ஆலை), சீ.எச்.டீ. ரன்தெனிய
**விநியோகம் :** உடஅராவ, புபல, மொரட்டுவாகம, மொரட்டுவாகம 2, ஹொரபொக்க, ரந்தெனிய, கீரியகொல்ல

2021-04-25 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** யுதங்கனா தர்மசேன கல் ஆலை, டீ.எம்.பீ. மெட்டல் க்ரஷர்
**விநியோகம் :** புத்தல வைத்தியசாலை, யுதங்கனாவ ஆலயம், யுதங்கனா சந்தி, யுதங்கனா அக்கர 50, புத்தல உடகம

2021-04-27 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** ஆயுர்வேத மருந்து நிலையம், வெள்ளவாய எம்.எச்.பீ., லேமஸ்தொட்ட மேற்பிரிவு, லேமஸ்தொட்ட
**மொத்த மற்றும் விநியோகம் :** கொஸ்லந்த தோட்டம்
**விநியோகம் :** கொஸ்லந்த நகரம், கொஸ்லந்த டெலிகொம், உடுமுல்ல, நாஉல்ல, கெலிபெனவெல, தியுலும, கொலொங்கஸ்தென்ன, கொட்டபக்மா, ரநசிங்ஹகம, அம்பரகல தோட்டம்

2021-04-29 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** வருணகம இராணுவ முகாம், உப்புல்மெட்டல்க்ரஷர்
**விநியோகம் :** வருணகம, பெல்வத்த ப்லெக் 2, ஆனபல்லம பாடசாலை வீதி, கண்டியாகம, ரணவிருப்புர, பஹல வர்ணகம

2021-04-30 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** ஆயுர்வேத மருந்து நிலையம், வெள்ளவாய எம்.எச்.பீ., லேமஸ்தொட்ட மேற்பிரிவு, லேமஸ்தொட்ட, யுதங்கனா தர்மசேன கல் ஆலை, டீ.எம்.பீ. மெட்டல் க்ரஷர்
**மொத்த மற்றும் விநியோகம் :** கொஸ்லந்த தோட்டம்
**விநியோகம் :** கொஸ்லந்த நகரம், கொஸ்லந்த டெலிகொம், உடுமுல்ல, நாஉல்ல, கெலிபெனவெல, தியுலும, கொலொங்கஸ்தென்ன, கொட்டபக்மா, ரநசிங்ஹகம, அம்பரகல தோட்டம், புத்தல வைத்தியசாலை, யுதங்கனாவ ஆலயம், யுதங்கனா சந்தி, யுதங்கனா அக்கர 50, புத்தல உடகம

2021-04-03 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** பவர்லூம் - பிபில

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : பிபில**

2021-04-06 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** மெதகம நகரம்

2021-04-07 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** பவர்லூம் - பிபில

2021-04-09 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** பவர்லூம் - பிபில

2021-04-10 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** மெதகம நகரம்

2021-04-19 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** யல்கும்புர 2, எம்.பீ.சீ.எஸ். பிபில, யக்குன்னேவ, ரன்மினிகம, திம்பிரிய

2021-04-20 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** உனகொல்ல, பதுள்ளகம்மான, நாகல, பெதியாவ, வெயதென, மெல்லேகம, கீணகொட

2021-04-21 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** மெதபிட்டிய, ஹெமபொல, யக்குன்னேவ, ரன்மினிகம, கபுலந்த (11 ஆம் கட்டை)

2021-04-22 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** இன்டர்லொக் கார்மன்ட்
**விநியோகம் :** பதுள்ளகம்மான, நாகல, ஜனஉதான கம்மானய, தஹம்கம, பக்கினிகஹவெல, போணகுர அராவ

2021-04-23 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** பிட்டகும்புர, கொடபோவ, நன்நப்புராவ 2, பக்கினிகஹவெல, உஸ்ஸாகல, வேகம

2021-04-24 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** இ.போ.ச. பிபில
**விநியோகம் :** தீகொல்ல, தொட்டில்லகெட்டிய, சேனபத்திய, நன்நப்புராவ 3 (7 ஆம் கட்டை), பக்கினிகஹவெல, கனவேகல்ல, பிபில வத்த

2021-04-25 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** பவர்லூம் - பிபில, பிட்டகும்புர, கொடபோவ, மீகஹவகுர, திம்பிரிய ரத்துபஸ்கெட்டிய, தம்பகஸ்பிட்டிய - மெல்லேகம, வேகம

2021-04-26 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கொடிகமுவ, அஹுகொட, கலிந்தாமுல்ல

2021-04-27 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** ரத்துபஸ்கெடிய - பிபில, பொலிஸ் - பிபில, வலிஹந்தெனிய, கனுல்வெல, சேனபத்திய

2021-04-28 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** பிபிலேமுல்ல, நன்நப்புராவ 3 (7 ஆம் கட்டை), பிட்டதெனிய, மொரகஹாமட

2021-04-29 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** வலிஹந்தெனிய, கலுகஹவாடிய, புப்பர, கிரவனாஹெல

2021-04-30 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** ரத்துபஸ்கெடிய - பிபில, இ.போ.ச பிபில, பொலிஸ் - பிபில, சிகுருலந்த, பலகொல்ல, பிபிலேமுல்ல, கடுகல, புப்பர

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : தனமல்வில**

2021-04-03 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், கஹகுரல்லன் பெலஸ்ஸ, கஹகுரல்லன் பெலஸ்ஸ பம்ப் நிலையம், அரபேகெம, ஹம்பேகமுவ, ஹம்பேகமுவ காலனி, கரபிஞ்சாலந்தயாய, தூபாராமய, கொமகல, உஸ்கல, மஹாவெவ, வலஸ்கந்த, தெபர ஆர, கெமுனபுர, 5 ஆம் கட்டை, ஆனந்தபுர, பலஹருவ, உஸ் எல்ல, சூரிகொடான, ஊருஹொர, திமுத்துகடே, நெவ் ஆர, அந்நாசிகல, தெபர ஆர 4 ஆம் கட்டை, பலஹருவ புதிய

2021-04-05 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கோமளிகம, ஊருஹொர, பலஹருவ

2021-04-06 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** இராணுவ முகாம் - குடாஓய
**விநியோகம் :** பத்ரகாளி தேவாலயம், மானெல்கல, போதிகம, குடாஓய சந்தி, வெஹெரகல, நெலுவயாய, கித்துள்கோட்டே, கிவுல்ஆர, குருகம்மானய, பத்தனயாய, பீதெனிஆர, தொல் லங்கா 1, தொல் லங்கா 2, தொல் லங்கா 3, எத்திலிவெவ சலவை, குடாஓய முகாம் சந்தி, பஹலகொட, ரத்தம்பலகம, தீவர கம்மானய, குகல்கட்டுவ, அலுத்வெவ, கிளிம்புன்ன 1, பாலுஅத்த கரமெட்டிய, தீகல் ஆர, கிளிம்புன்ன 2

2021-04-07 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** போதகம, போதிகம

2021-04-08 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** குமாரகம, மானெல்கல

2021-04-09 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** மஹாவெவ

2021-04-10 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** யுனிவர்ரல் காமன்ட், இராணுவ முகாம் - குடாஓய,
**விநியோகம் :** தனமல்வில நகரம், தனமல்வில நீர் விநியோக சபை, காமினிபுர, சர்வோதயம், சர்வோதயம் 2, மானெல்கல, போதிகம

2021-04-17 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** குடாஓய சந்தி, ரோஹனபுர

2021-04-19 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கித்துள்கோட்டே, தெபர ஆர

2021-04-20 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** தனமல்வில நீர் விநியோக சபை, 5 ஆம் கட்டை

2021-04-21 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** நெலுவயாய, ஆனந்தபுர

2021-04-22 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கிவுல்ஆர, உஸ் எல்ல, நெவ் ஆர, அந்நாசிகல

2021-04-23 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** குடாஓய சந்தி, காமினிபுர

2021-04-24 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** போதிகம, தெவ்ரம்வெஹெர

2021-04-27 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** தெவ்ரம்வெஹெர நீர் விநியோக சபை

2021-04-28 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கல்ஹிட்டியாவ

2021-04-29 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கித்துள்கோட்டே

2021-04-30 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** தனமல்வில நீர் விநியோக சபை,

**வாடிக்கையாளர்சேவைநிலையம் : தம்பகல்ல**

2021-04-03: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :**

2021-04-05: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** மஹகந்தவிலநீர்விநியோகம், கொட்டியாகல

2021-04-06: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** எத்திமலேவிலஒய

2021-04-07: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** எத்திமலேநீர்விநியோக சபை

2021-04-08: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** நீர்விநியோகம்விலாஒய,
**விநியோகம் :** குரஹெலசத்தாதிஸ்ஸகம

2021-04-09: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கமகலஎத்திமலே, எத்திமலே 60 போசன்

2021-04-10: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** ஹிரிபிட்டிய, கலுஒப்ப

2021-04-11: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** தொம்பகஹவெல

2021-04-17: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** நீலவாபெத்த

2021-04-18: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கொட்டகலகொடன

2021-04-19: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** பி.எஸ்.கோ.கோயன
**விநியோகம் :** நாமல்ஒயஜனபதய, அரட்டுகஸ்வெல, தியகொலயாய

2021-04-20: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** பங்குர, உடுகும்புர, மயுரகம்மானஎத்திமலே

2021-04-21: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** தெரேல, கொடயான

2021-04-22: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** பொலகொல்லஅரலுவின்ன, கலபெத்த 1, கலபெத்த 2

2021-04-23: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** தெபெத்தேக்கிவுல - படுகம்மான, கெமுனுபுரஅக்கர 50 குபுக்கேயாய

2021-04-24: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கொட்டிகஹெல, பஹத்தஅராவ, பொல்கொட்டனஅராவ, அம்பிட்டிய, கொலொன்வின்ன, எத்திமலே 70 போசன், கெமுனுபுரஅக்கர 50 குபுக்கேயாய

2021-04-25: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** பொல்கொட்டனஅராவ, அம்பிட்டிய

2021-04-26: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கொட்டிகல மியனவத்த, ஜயமினிகமநீர்விநியோகபை, பெரக்கும்புர

2021-04-27: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** வெலியாய, கல்கெட்டியகரனகம

**மின்பொறியலாளர்பிரதேசம் : பதுளை**

**வாடிக்கையாளர்சேவைநிலையம் : பஸ்ஸரை**

2021-04-03: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** அடாவத்த
**விநியோகம் :** ஜநதாபுர, லுனகலகம, அலகொலகல, அரவாகும்புர, உடகம - கிரவனாகொட, தொடம்கொல்ல, கெஹெல்வத்தகம, உடகிருவ1 (உடதென்ன), உடகிருவ, உடவத்த, உடகிருவ3 (அத்துன்தெமு வெவ), அலுபோகொல்ல, பல்லேகிருவ1, பல்லேகிருவ2 (பாடசாலைஅருகில்), ஜனதாபுரவடக்கு, லுனகல்லபொலிஸ் - உடபங்குவ, வெடகேவெல, பல்லேகிருவ3

2021-04-05: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** பயிற்சிநிலையம்யூரி
**மொத்த மற்றும் விநியோகம் :** கோணகலைதோட்டம், பெல்கஹதென்ன, யூரிதொழிற்சாலை, வேவஸ்ஸதொழிற்சாலை, பிபிலேகம1
**விநியோகம் :** கோணகலை, சங்கபோமாவத்தை, மவுஸ்ஸாகொல்ல, பரபாவ1 (கொட்டபிட்ட), பரபாவ2 (விஹாரைஅருகில்), தேயிலைஆராய்ச்சிநிலையம், உடகம (விஹாரைஅருகில்), உடகம (தியகில்லபொத), கிரிகல, ஆகரதென்ன (கோவில்அருகில்), வெல்கொல்ல, வெல்கொல்ல2, கல்பொக்க

2021-04-10: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கிரிகல்பொத்த

2021-04-17: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** பஸ்ஸரதோட்டம் மீத்தும்பிட்டிய
**விநியோகம் :** மீரியபெத்த, வல்லேவத்த, கெஹெல்வத்த, மதுவத்த, கெஹெல்வத்தகம, பீஸ்ஸகம, டேஸ்ப்ஷரூக், வெடகேவெல

2021-04-20: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** ரபர்வத்த, மதுகஸ்தலாவ

2021-04-21: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கோணகலை

2021-04-24: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** ரபர்வத்த, மதுகஸ்தலாவ, அலுபோகொல்ல, ஜனதாபுரவடக்கு

2021-04-27: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** படவத்ததோட்டம், கொக்காகலதோட்டம், ரோபேரிதோட்டம்
**விநியோகம் :** மெட்டிகஹதென்ன1 / வைத்தியசாலை (வெவபெத்த), மெட்டிகஹதென்ன2, பகினிகந்த, அக்கிரிய, எலமான்ன, ராகலை, பிட்டமாருவ, திக்கல, தெஹிதொல்ல

**வாடிக்கையாளர்சேவைநிலையம் : ஹாலிஎல**

2021-04-09: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** கொல்லுமன்டிய, கந்தெகெதர
**விநியோகம் :** கொஹான, பங்ஜொல்ல, எல்வர்டன், செரன்டிப், மஹதென்ன, சார்னியாதொழிற்சாலை, கல்கொட்டுவேகம, தங்கமலை, புஸ்ஸல்லகந்த, கொஹான, பங்ஜொல்ல, கீனகலை, கீனகலைபுதிய, திக்பிட்டிய, தென்னேபங்குவ

2021-04-19: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** கொஹான, பங்ஜொல்ல

2021-04-20: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** நமுனுகுல (டெலிகொம்), ஸ்பிரிங்வெளி, கவரவெல

2021-04-21: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** பெத்தெவெல, கவரகெலே

2021-04-22: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :**
**விநியோகம் :** நல்லமலை, மேமலைதொழிற்சலை

2021-04-23: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** ஓசோன், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், டயலொக் உடதொம்பே, கிங்ஸ்வூட், எகொடகம
**மொத்த மற்றும் விநியோகம் :** இமிச, உனுகல தோட்டம், ரொக்கத்தன்ன தொழிற்சலை
**விநியோகம்:** கொஹான, பங்ஜொல்ல, பெட்சோன், பிரதேச செயலகம் காரியாலயம் - ஹாலிஎல, நகர சபைகள், ஹாலிஎல டெலிகொம், ஹாலிஎல நகரம், அம்பவக்க, ரொக்கத்தன்ன தோட்டம், 5ஆம் கட்டை, ஸ்பிரிங்வெளி, நாவலதோட்டம்

2021-04-27: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** வேவல்ஹின்ன

2021-04-28: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** ஸ்பிரிங்வெளி, ஒத்தும்பே தோட்டம்

2021-04-29: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த :** போகொடமெட்டல்க்ரஷர்
**மொத்த மற்றும் விநியோகம் :** ஊவகெட்டவல
**விநியோகம் :** ஜங்குல்ல, கெட்டவல, தீகல்ல, லந்தேவெல, கொப்பெனெட்டிய, பனாக்கன்னிய

**வாடிக்கையாளர்சேவைநிலையம் : பதுளை**

2021-04-03: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** கிரிஒருவ, நெலும்கம, நெலும்வெவ, சிரிமல்கொட, பெல்லெகந்த

2021-04-05: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** நெலும்கம, நெலும்வெவ, சிரிமல்கொட

2021-04-06: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம்:** அன்தெனிய, நெலும்கம, நெலும்வெவ, சிரிமல்கொட, கலன்தோட்டம், கட்டுகெலே, தமன்வர, வேகட, கொஸ்கொல்ல, குட்டியகொல்ல, அத்கல, போஸ்டல்முகாம்

2021-04-07: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** களுகல்பிட்டிய
**விநியோகம் :** மெதிதலே, பிடபொல, வெலிஹிந்த, கோஹோவில

2021-04-08: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** வீரியபுர, அன்தெனிய, நெலும்கம, நெலும்வெவ, சிரிமல்கொட, கலன்தோட்டம், கட்டுகெலே, தமன்வர, வேகட, கொஸ்கொல்ல, குட்டியகொல்ல, அத்கல

2021-04-09: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** வினீத்தகம 2, கொஸ்கொல்ல, கிரிஒருவ

2021-04-10: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** 3 ஆம்கட்டை

2021-04-15: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** வெவஸ்ஸதோட்டம் 2

2021-04-17: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**மொத்த மற்றும் விநியோகம் :** பிங்கராவ நீர் விநியோக நிலையம்
**விநியோகம் :** குட்டியகொல்ல

2021-04-19: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** தெல்பெத்தகம,

2021-04-20: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** சில்பொலகம

2021-04-21: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** மைலகஸ்தென்ன, வினீத்தகம, முத்துமால, அன்தெனிய, நெலும்கம, நெலும்வெவ, சிரிமல்கொட, கலன்தோட்டம், கட்டுகெலே, தமன்வர, வேகட, கொஸ்கொல்ல, குட்டியகொல்ல, அத்கல

2021-04-22: 08.00 - 17.00
**மின் தடைப்படும் இடங்கள் :**
**விநியோகம் :** தயகுணசெகரமாவத்தைசந்தி

**பிரதி பொது முகாமையாளர் (ஊவா மாகாணம்)**
**இலங்கை மின்சார சபை.**
**இல. 04, ஸ்பிரிங்வெளி, ஹிந்தகொட, பதுளை.**
**தொ.பே. - 055-2222474, 055-2223474**

*வளமான வாழ்விற்கு மின்சாரம்*

**நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணங்களை www.ceb.lk மூலம் செலுத்தலாம்**

## களனிப் பல்கலைக்கழகம் - இலங்கை

### வெற்றிடங்கள்

இலங்கை, களனிப் பல்கலைக்கழகத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

**01.தொழில்நுட்ப அலுவலர் தரம் II பிரிவு “A”**

**தகைமைகள்**

01. தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா மற்றும் சமமான தகைமைகள்

**அல்லது**

02. பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா

**அல்லது**

03. சம்பந்தப்பட்ட துறையில் உயர் தேசிய டிப்ளோமா

**அல்லது**

04. சம்பந்தப்பட்ட துறையில் ஒரு (01) வருட அனுபவத்துடன் ஓர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முழுநேர காலத்தை கொண்ட சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் இரண்டு (02) வருடம் சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா

**குறிப்பு:** பதவியின் தன்மையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட துறையானது பொறியியல்/ விஞ்ஞானம்/தொழில்நுட்பம்/மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பம் போன்றவை.

**வயதெல்லை** : 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாலும் இருத்தல்

**சம்பள முறை** : U-MT 1 (III)
ரூ.35,145 - 7X355-9X495 - 42,085 (மாதாந்தம்)
(ப.மா.ஆ.சுற்றுநிருபம் 17/2016 (V) இன் பிரகாரம்)

**சேர்த்துக்கொள்ளும் முறை :** செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு

**02. தொழில்நுட்ப அலுவலர் பதவி (கட்புல செவிப்புல) தரம் III**

**தகைமைகள்**

1. ஏதாவது துறையில் க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

2. (அ) மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் நிறுவனம் அல்லது பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட ஓர் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் நியதிகள் நிறுவனத்திலிருந்து இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு /இலத்திரனியல்/பல்லூடகம் அல்லது கட்புல - செவிப்புல தொழில்நுட்பத்துறையில் N.V.Q. 5ஆம் தரத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழைப் பெற்றிருத்தல்

அல்லது

(ஆ) மூன்றாம் நிலை மற்றும் நம்பகரமான நிறுவனத்தில் கட்புல செவிப்புல வேலைகளில் ஒரு வருட அனுபவத்துடன் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் மேற்படி தகைமை (02) இற்கு இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு/இலத்திரனியல்/ பல்லூடக துறையில் தொழில்நுட்பத் தகைமையை பெற்றிருத்தல்.

**வயதெல்லை** : 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள முறை** : U-MT I (III)
ரூ. 31,625-7X300-10X355-37,275 (மாதாந்தம்) (ப.மா.ஆ.சுற்றுநிருபம் 17/2016 (V) இன் பிரகாரம்)

**சேர்க்கப்படும் முறை** : எழுத்து மூல மற்றும்/அல்லது செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு

**03. தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) தரம் III பதவி**

**தகைமைகள்**

1. பௌதீக விஞ்ஞான துறையில் க.பொ.த (உ/த) இல் மூன்று (3) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**அத்துடன்**

2. மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு அல்லது சிவில் பொறியியல் அல்லது சமமான துறையில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் நிறுவனத்திலிருந்து சிவில் பொறியியல் துறையில் N.V.Q.தரம் 5 இற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

**வயதெல்லை** : 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல்

**சம்பள முறை** : U-MT I (III)
ரூ. 31,625-7X300-10X355-37,275 (மாதாந்தம்) (ப.மா.ஆ.சுற்றுநிருபம் 17/2016 (V) இன் பிரகாரம்)

**சேர்க்கப்படும் முறை :** எழுத்து மூல மற்றும்/அல்லது செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு

**4. தொழில்நுட்ப அலுவலர் பதவி (மின்னியல்) தரம் III**

**தகைமைகள்**

1. பௌதீக விஞ்ஞான துறையில் க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று (3) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
2. மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு அல்லது மின் பொறியியல் அல்லது சமமான துறையிலுள்ள ஓர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து சிவில் பொறியியல் துறையில் N.V.Q. தரம் 5 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழை பெற்றிருத்தல்.

**வயதெல்லை** : 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல்

**சம்பள முறை** : U-MT I (III)
ரூ. 31,625-7X300-10X355-37,275 (மாதாந்தம்) (ப.மா.ஆ.சுற்றுநிருபம் 17/2016 (V) இன் பிரகாரம்)

**சேர்க்கப்படும் முறை :** எழுத்து மூல மற்றும்/அல்லது செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு

**விண்ணப்பிக்கும் முறை**

பல்கலைக்கழக இணையத்தளம் **(www.kln.ac.lk)** இலிருந்து விண்ணப்பப்படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

2021 ஏப்ரல் 20ஆம் திகதி அல்லது அதற்கு முன் காணி, தளுகம, களனிப் பல்கலைக்கழகம், உதவிப் பதிவாளர்/கல்விசாரா நிறுவனப் பிரிவை அடையுமாறு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் விதிக்கப்பட்ட படிவத்தில் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

உயர்கல்வி நிறுவனங்கள், அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிகள் சபைகளில் இருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது

அவர்கள் தமது விண்ணப்பங்களை முறையே அந்நிறுவனங்களின் தலைமையூடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பதாரிகளை குறும்பட்டியலிடும் உரிமையைப் பல்கலைக்கழகம் கொண்டிருக்கும்.

தேவைப்படும் தகைமைகளை பூர்த்தி செய்திராத, பூர்த்தியற்ற, தெளிவற்ற விண்ணப்பங்கள் மற்றும் மூடப்படும் நாளின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் அத்துடன் எந்த நிலைமையின் கீழும் மீண்டும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**பதிவாளர்**
**களனிப் பல்கலைக்கழகம்.**
**25.03.2021.**

The Housewives’ companion
Classifieds on
Daily News

## இலங்கை முதலீட்டுச் சபை

### 2021 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

### பொருட்கள் மற்றும் சேவைகள்

2021ஆம் ஆண்டிற்கான இலங்கை முதலீட்டுச் சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவது சார்பாக, 2020ஆம் ஆண்டிற்காக பதிவு செய்துள்ள வழங்குநர்களின் பட்டியல் அமுலில் இருக்கும் என இலங்கை முதலீட்டுச் சபையின் திணைக்கள பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 2021 ஆம் ஆண்டிற்காக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு ஆர்வம் காட்டுகின்ற (2020 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்யாத) புதிய வழங்குநர்கள், இலங்கை முதலீட்டுச் சபை உத்தியோகபூர்வ இணையதளத்தில் **(www.investsrilanka.com)** பிரசுரமாகியுள்ள விளம்பரத்திற்கு அமைவாக செயற்படுமாறு அறிவித்துக் கொள்கிறோம்

**தலைவர்**
**இலங்கை முதலீட்டு சபை**

## களனி பல்கலைக்கழகம் - இலங்கை

### பதவி வெற்றிடம் — பாதுகாப்பு அதிகாரி (ஆண்/பெண்) (ஒப்பந்த அடிப்படையில்)

இப்பல்கலைக்கழகத்தில் வெற்றிடமாகக் காணப்படும் பாதுகாப்பு அதிகாரி (ஒப்பந்த அடிப்படையில்) பதவிக்காக முப்படையில் அல்லது இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை பூர்த்தி செய்துள்ள கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

01. எட்டாம் தரத்தில் சித்தியடைந்து இருத்தல்
02. விளையாட்டு மற்றும் சமுகவிடயங்களில் செயற்பாட்டுடனான சமுகமளித்திருத்தல் வேண்டும்.
03. உயரம் 05 அடி 04 அங்குலத்திற்கு குறையாது இருத்தல்
04. மார்பு 3 அங்குலத்திற்கு குறையாது இருத்தல்
05. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 45 வயதிற்கு மேற்படாது இருத்தல்

- ✷ சம்பளம் - ரூ.50000.00 (மாதாந்த நிலையான)
- ✷ கால எல்லை - 01 வருடம்
- ✷ சலுகைகள் - பல்கலைக்கழக சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரித்துரிமை பெறுவர்
- ✷ தேர்ந்தெடுத்தல் - தகைமைப் பரிசீலனை மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம்

விண்ணப்பத்தை பல்கலைக்கழக உத்தியோகபூர்வ இணையதளம். https://news.kln.ac.lk/index.php/classified/vacancies
அல்லது களனிப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு பிரிவிற்கு வருகைதந்து பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு பெற்றுக்கொண்ட விண்ணப்பத்தை முறையாகப் பூர்த்தி செய்து குறித்த தகைமைகளை உறுதிசெய்வதற்கான சான்றிதழ்களின் பிரதியுடன், கடமையாற்றிய முப்படையில், பொலிஸ் அல்லது அரச பாதுகாப்பு சேவையில் சட்டரீதியிலான விலகுதலை அனுமதிக்கும் கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டையின் போட்டோப் பிரதியுடன் 2021.04.19ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு உதவிப்பதிவாளர், நிறுவன அடையாள பிரிவு, களனிப்பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பத்தை உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் பாதுகாப்பு அதிகாரி (ஒப்பந்த அடிப்படையில்) எனக் குறிப்பிடல் வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கும் மற்றும் தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**
**29.03.2021**

## சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

| தொ. இல. | பெறுகை கோவை இல. | விபரம் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் திகதி | விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனுப் பிணை |
|---|---|---|---|---|---|---|
| 01 | QTN 63/2021 | சுகததாச அதிகார சபையின் உள்ளக, திறந்தவெளி விளையாட்டரங்கு மற்றும் விளையாட்டு உணவகம், நிர்வாகக் கட்டிடம் மற்றும் சிற்றூழியர்களின் விடுதிகளை சுத்திகரிப்பதற்கான சேவையைப் பெற்றுக்கொள்ளல் | 2021-04-19 மு.ப. 10.00 மணி வரை | 2021-04-20 பி.ப. 2.00 மணிக்கு | ரூபா 3,000.00 | ரூபா 50,000.00 |

மேற்குறிப்பிடப்பட்ட சேவைகளுக்கு இயைபுடைய துறையில் அனுபவம் வாய்ந்த மற்றும் மேற்படி சேவைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் விடுத்தல் வேண்டும். விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள அறிவுரைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பின்வரும் முகவரியிலுள்ள விலைமனுப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம்.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கான விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள வகையில் மீளளிக்கப்படும் கட்டணத்தை ரொக்கப் பணமாக சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதிக்கு செலுத்தி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் தேவையானவர்களுக்கு அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.

விலைமனு ஆவணங்கள் 2021-04-05ஆம் திகதி மு.ப. 09.30 மணி முதல் வழங்கப்படும்.

விலைமனுப் படிவத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வர்த்தக வங்கியினாலும் வழங்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கான விலைமனுப் பிணைமுறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத்தொகுதி அதிகார சபையின் கொள்வனவுக் கிளையில் பெற்றுக்கொள்ளாம் என்பதுடன் தேவையானவர்கள் அவ்விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

தொலைபேசி இல. 2445677/2384490 மற்றும் 2384385

**தலைவர்,**
**சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகார சபை,**
**த.பெ. இல. 2211,**
**ஆர்தர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-13.**

### விலைமனு அறிவித்தல்

வரையறுக்கப்பட்ட அலுபோமுல்ல சர்வோதய சிரமதான சங்கத்துக்கு உரித்துடைய பானதுர, அலுபோமுல்ல, ஹொரண வீதி, சிலுவை சந்திக்கு மிகவும் அண்மையில் உள்ள ருக்கஹ வீதியை நோக்கி அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 2188ஐக் கொண்ட, இரண்டு மாடிக் கட்டடத்தை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. 2021 ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரை திருப்பிச் செலுத்தப்படாத ரூ. 1,000.00 தொகையையும் மற்றும் திருப்பிச் செலுத்தப்படக் கூடிய ரூ. 2,000.00 தொகையையும் வைப்புச் செய்து மேலே சொல்லப்பட்ட இடத்தில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தில் விலைமனுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
2021 ஏப்ரல் மாதம் 09ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு விலைமனுத்தாக்கல் செய்தல் முடிவுறுத்தப்பட்டு, அத்தினம் பி.ப.2.00 மணிக்கு விலைமனுப்பத்திரங்கள் திறக்கப்படும்.

விசாரணைகள்:
0729185355

தலைவர்/செயலாளர்
வரையறுக்கப்பட்ட
அலுபோமுல்ல சர்வோதய
சிரமதான சங்கம்
04.01.2021

Repeat
Your
Ad
For
Better
Offers

### பகிரங்க அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் கீழான, அறிவித்தல்.

கூட்டிணைப்பு திகதி : **13.07.2020**
கம்பனியின் பெயர்:
**ஹார்வட் டிரேடிங் (பீவீடீ) எல்டீடி**
கம்பனி இலக்கம்: **PV 00224222**
பதிவு முகவரி:
**23/1, அலெக்சாந்ரா வீதி, கொழும்பு - 06**

கூட்டிணைப்பு திகதி : **18.10.2020**
கம்பனியின் பெயர்:
**சமர்செட் இன்டர்நெஷனல் (பீவீடீ) எல்டீடி**
கம்பனி இலக்கம்: **PV 00229220**
பதிவு முகவரி:
**இல-16/A, பஸ்யால வீதி, மீரிகம**

கூட்டிணைப்பு திகதி : **26.10.2020**
கம்பனியின் பெயர்:
**பிசீஎல் குளோபல் ஹோல்டிங்ஸ் (பீவீடீ) எல்டீடி**
கம்பனி இலக்கம்: **PV 00229634**
பதிவு முகவரி:
**இல.84/10A, தொஸ்தரவத்த, பெப்பிலியான ரோட், கங்கொடவிட, நுகேகொடை**

கூட்டிணைப்பு திகதி : **12.11.2020**
கம்பனியின் பெயர்:
**மஞ்சித்த புரொப்பர்டி டிவெலொப்மென்ட் (பீவீடீ) எல்டீடி**
கம்பனி இலக்கம்: **PV 00230228**
பதிவு முகவரி:
**கிந்தெல்பிட்டிய, வெல்மில்ல**

கூட்டிணைப்பு திகதி : **23.11.2020**
கம்பனியின் பெயர்:
**எல் எப் எஸ் ஒட்டோ கிளப் (பீவீடீ) எல்டீடி**
கம்பனி இலக்கம்: **PV 00230655**
பதிவு முகவரி:
**இல.59/2, நொரிஸ் வீதி, கொழும்பு - 10**

கூட்டிணைப்பு திகதி : **13.12.2020**
கம்பனியின் பெயர்:
**டெலோன் குளோபல் ஹோல்டிங்ஸ் (பீவீடீ) எல்டீடி**
கம்பனி இலக்கம்: **PV 00231694**
பதிவு முகவரி:
**இல.327, கம்சபா சந்தி, ஹைலெவல் வீதி, நுகேகொடை**

கூட்டிணைப்பு திகதி : **28.01.2021**
கம்பனியின் பெயர்:
**வேர்டெக்ஸ் இனோவேட்டர்ஸ் (பீவீடீ) எல்டீடி**
கம்பனி இலக்கம்: **PV 00233872**
பதிவு முகவரி:
**இல.623/16/2A, ஜயமாவத்த, வைத்தியசாலை வீதி, ஹோமாகம**
**செயலாளர்**
**தொலைபேசி - 0768002685**

Best way
to fulfil
your
Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
Please Contact
MANAGER FRONT OFFICE
Hotline 1949
LAKE HOUSE

# இந்திய செய்திகள்



# தமிழகத்தில் அம்மாவின் அரசு தொடர வேண்டும்

## முதலமைச்சர் பழனிச்சாமி



மதுரை பாண்டிகோவில் திடலில் அ.தி.மு.க. பாரதிய ஜனதா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி பங்கேற்ற பிரசார பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சட்டமன்ற தேர்தலில் இன்றைக்கு சிறப்பாக நடைபெற்று வரும் அம்மாவின் அரசு தொடர வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். அந்த வகையில் அ.தி.மு.க., பாரதிய ஜனதா கூட்டணி அருமையாக அமைந்துள்ளது. இந்த கூட்டணி வெற்றி கூட்டணி என்று முதலமைச்சர் பழனிச்சாமி பிரதமர் பங்கேற்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

234 தொகுதிகளில் போட்டியிடும் இந்த கூட்டணி பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை பிடிப்போம். மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய அரசு மத்தியிலும், மாநிலத்திலும் அமைந்துள்ளது.

தமிழகத்தில் புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் நடைபெறும் அரசு மத்தியில் பாரத பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் அமைந்துள்ள அரசு மக்களுக்கான திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தின் வளர்ச்சியில் மத்திய அரசு முக்கிய பங்காற்றி பல்வேறு வகைகளில் உதவிகளை செய்து வருகிறது.கடந்த ஆண்டு கொரோனா வைரஸ் தொற்று பரவிய நேரத்தில் பிரதமர் நரேந்திர மோடி சிறப்பாக நடவடிக்கையை மேற்கொண்டார்.

ஒரே ஆண்டில் கொரோனா வைரசை தடுக்கும் தடுப்பூசியை கண்டுபிடிப்போம் என்று வாக்களித்தார். அவர் கூறியது போல ஒரே ஆண்டில் உலகமே வியக்கும் வகையில் கொரோனா தடுப்பூசியை கண்டுபிடித்து நமது நாட்டுக்கு பிரதமர் நரேந்திரமோடி உலக அளவில் பெருமையை சேர்த்தார்.

வல்லரசு நாடுகள் கூட கொரோனா தடுப்பூசி கண்டுபிடிக்காத நிலையில் பிரதமரின் தலைமையில் மருத்துவ நிபுணர்களின் அயராத உழைப்பால் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது.

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் ஆற்றல் மிக்க, திறமை மிக்க பிரதமராக நரேந்திர மோடி விளங்கி வருகிறார்.

தமிழகத்தில் பல்வேறு திட்டங்கள் தந்தபோது கேட்கிற நிதியை மத்திய அரசு நமக்கு தந்தது. இதனால் தமிழகத்திலும் பல்வேறு வளர்ச்சி பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தி.மு.க. ஒரு குடும்ப கட்சி. வாரிசு அரசியல் நடைபெறும் கட்சி. குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்றால் அது ஒரு கார்ப்பரேட் கம்பெனி. இங்கிருந்த பல பேர் அங்கே சேர்ந்து தற்போது தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

மக்களுக்கு சேவை செய்யும் எண்ணம் தி.மு.க.வுக்கு கிடையாது. ஆனால் மக்கள் சேவையை செய்

# பிரதமர் மோடி மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சிறப்பு தரிசனம்






மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் நேற்று முன்தினம் இரவு பிரதமர் மோடி 45 நிமிடங்கள் தரிசனம் செய்தார். கோயில் சிறப்புகள் கேட்டும், வருகை பதிவேட்டில் குறிப்பும் எழுதியுள்ளார்.

பிரசாரத்துக்காக நேற்று முன்தினம் இரவு சிறப்பு விமானம் மூலம் மதுரை வந்தார். நேராக மீனாட்சி அம்மன் கோயிலுக்கு இரவு 8:35 மணிக்கு வேட்டி, சட்டையுடன் வந்துள்ளார்.

அவரை தக்கார் கருமுத்து கண்ணன், இணைகமிஷனர் செல்லத்துரை வரவேற்று பூரண கும்ப மரியாதை செய்யப்பட்டது.



கோயிலுக்கு வெளியே அவரை பார்க்க காத்திருந்த மக்களை பார்த்து கை அசைத்துவிட்டு, கிழக்கு கோபுரம் அம்மன் சன்னதி வழியாக உள்ளே சென்று பொற்றாமரைக்குளம் அதன் பின்னணியில் தெற்கு கோபுரம் இருப்பதை கண்டு இரசித்தார்.

இரவு 8:52 மணிக்கு அம்மனை தரிசித்தார். அவரது பெயரில் அர்ச்சனை செய்யப்பட்டது. பின்னர் முக்குறுணி விநாயகர் சன்னதி வழியாக சுவாமி சன்னதிக்கு இரவு 9:05 மணிக்கு சென்றார். அங்கும் அர்ச்சனை செய்யப்பட்டது. கோயில் விழாக்கள் குறிப்பாக சித்திரை திருவிழாவின் சிறப்புகள் குறித்து பிரதமரிடம் கூற, ஆர்வமாக கேட்டுக்கொண்டார்.

பின்னர் மடப்பள்ளி அருகே அவருக்கு கோயில் சார்பில் சிறப்பு செய்யப்பட்டது. கோயில் வருகை பதிவேட்டில் தமிழகம், மதுரையின் சிறப்புகள் மற்றும் கோயிலின் முக்கியத்துவம் குறித்து குறிப்பு எழுதினார். இதைத் தொடர்ந்து பிரசாதமாக விபூதி தரப்பட்டது. இரவு 9:17 மணிக்கு தரிசனம் முடிந்து வெளியே வந்து, பசுமலை கேட் வே ஓட்டலுக்கு ஓய்வு எடுக்க சென்றார். பிரதமர் வருகையையொட்டி இரவு 7:00 மணி முதல் கோயிலுக்குள் பக்தர்கள் அனுமதிக்கப்படவில்லை. கோயிலைச் சுற்றி கமிஷனர் பிரேம் ஆனந்த் சின்ஹா தலைமையில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

# திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மகள் வீட்டில் வருமான வரித்துறையினர் சோதனை



திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மகள் செந்தாமரை வீட்டில் வருமான வரித் துறை அலுவலர்கள் நேற்றுக் காலை திடீரென சோதனையில் ஈடுபட்டனர்.

சென்னை நீலாங்கரையில் உள்ள ஸ்டாலினின் மகள் செந்தாமரை, மருமகன் சபரீசன் இல்லத்தில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர்.

தேர்தலுக்கு இன்னும் 3 நாட்களே உள்ள நிலையில் வருமான வரித்துறையினர் பல்வேறு இடங்களில் தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே திமுக வேட்பாளர் எ.வ.வேலுவுக்கு சொந்தமான இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர். வருமான வரித்துறை சோதனை அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்று கண்டனம் தெரிவித்துள்ள அரசியல் கட்சி தலைவர்கள், வருமான வரித்துறை அமைப்பை

# பெரு நிறுவனங்களுக்கு உதவுகிறார் பிரதமர்

## ராகுல் காந்தி



நாட்டில் கோடிக்கணக்கில் உள்ள ஏழைகளின் வாழ்வை மேம்பட வைக்க உதவாமல், பெரு நிறுவனங்களுக்கு பிரதமா் மோடி உதவி வருவதாக காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

வயநாடு பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். பெரு நிறுவன முதலாளிகளின் கைகளில் பணத்தை தந்தால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் என பிரதமர் நம்புகிறார்.

ஆனால், பெரு நிறுவன முதலாளிகள் எப்போதும் அந்த பணத்தை தங்களுக்காகவே எடுத்துக் கொள்கிறார்கள்.

கேரளத்தின் பொருளாதாரம் மேம்பட நியாய் திட்டத்தை காங்கிரஸ் அரசு கொண்டு வருகிறது. இதன் மூலம் ஏழை மக்களின் வங்கிக் கணக்குகளில் மாதம் ரூ.6 ஆயிரம் செலுத்தப்படும். இது ஏழைகளுக்கு மட்டும் பலன் அளிக்காமல், கேரள பொருளாதாரத்தையும் வளா்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லும். புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

ஏழைகளின் கைகளில் பணம் இருந்தால்தான் வேலைவாய்ப்புகள் பெருகும், பொருளாதாரமும் வளா்ச்சி அடையும் என்பதுதான் காங்கிரஸ் கட்சியின் கொள்கையாகும். நாட்டில் மூன்று கிரிமினல் வேளாண் சட்டங்களை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இதை அனைவரும் ஒன்று சோ்ந்து எதிர்க்க வேண்டும். வயநாடு தொகுதியில் மருத்துவக் கல்லூரி உட்பட வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி இருக்க வேண்டியது அவசியம். அதேநேரத்தில் கேரளத்தை பாதிக்கும் விவகாரங்கள் குறித்து இடதுசாரி நண்பர்களுடன் நான் பேச விரும்புகிறேன் என்றார்.

# கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள டெண்டுல்கர் ஆஸ்பத்திரியில் அனுமதி



கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு வீட்டில் தனிமைப்படுத்திலில் இருந்தார்.இந்த நிலையில் கொரோனா பாதிப்பு ஏற்பட்ட 6 நாட்களுக்கு பிறகு தெண்டுல்கர் முன்எச்சரிக்கை நடவடிக்கையாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று டுவிட்டரில் கூறியிருப்பதாவது:

உங்களின் வாழ்த்துக்களுக்கும், பிரார்த்தனைகளுக்கும் நன்றி. மருத்துவ ஆலோசனையின்படி முன் எச்சரிக்கையாக நான் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளேன். சில நாட்களில் வீடு திரும்புவேன் என்று நம்புகிறேன். அனைவரும் தங்களது நலனில் கவனம் செலுத்தி பாதுகாப்பாக இருங்கள் என்று கூறியுள்ளார்.

மேலும் 2011ம் ஆண்டு உலக கோப்பையை வென்ற 10வது ஆண்டு தினத்தையொட்டி இந்தியர்களுக்கும் மற்றும் எனது அணியினருக்கும் வாழ்த்துக்கள் என்றும் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

# ஜம்மு-காஷ்மீர் பாஜக நிர்வாகி வீட்டில் பயங்கரவாதிகள் தாக்குதல்

## காவலர் சுட்டுக் கொலை

ஜம்முகாஷ்மீர் பாஜக நிர்வாகி அன்வர் அகமது கான் வீட்டில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் காவலா் உயிரிழந்தார்.

இது தொடர்பாக காவல் அதிகாரி ஒருவர் கூறுகையில்,

பாஜகவில் பாராமுல்லா மாவட்டத்தின் பொதுச் செயலாளராகவும் குப்வாரா மாவட்டத்தின் பொறுப்பாளராகவும் அன்வர் அகமது கான் இருந்து வருகிறார். ஸ்ரீநகரின் நவ்காம் பகுதியில் அவர் தங்கியிருந்த வீட்டைக் குறிவைத்து பயங்கரவாதிகள் சிலர் வியாழக்கிழமை காலை துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

அதில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவலர் ரமீஸ் ராஜா காயமடைந்தார். பின்னர் மருத்துவமனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துவிட்டதாக மருத்துவா்கள் தெரிவித்தனா். தாக்குதல் நடைபெற்றபோது அன்வர் அகமது வீட்டில் இருக்கவில்லை.

காவலரின் துப்பாக்கியையும் பயங்கரவாதிகள் எடுத்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாகத் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகின்றன. பயங்கரவாதிகள் தாக்குதலில் உயிரிழந்த காவலா் ரமீஸ் ராஜாவுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்கு நடைபெற்றுள்ளது.








## மே.தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட்:

# இலங்கை அணிக்கு 348 ஓட்டங்கள் இலக்கு

இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின், நான்காம்நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இதன்படி 4ம் நாள் ஆட்டநேர முடிவில், இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி, விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஆட்டநேர முடிவில், லஹிரு திரிமன்னே 17 ஓட்டங்களுடனும் திமுத் கருணாரத்ன 11 ஓட்டங்களுடனும் இருந்தனர்.

இதற்கமைய மேற்கிந்திய தீவுகள் அணியின் 377 என்ற வெற்றி இலக்குடன் ஒப்பிடுகையில், இலங்கை அணி 348 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

அண்டிகுவா மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற் இலங்கை அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 354 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கிரைஜ் பிரத்வெயிட் 126 ஓட்டங்களையும் ராகிம் கோர்ன்வோல் 73 ஓட்டங்களையும் மேயர்ஸ் 49 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், சுரங்க லக்மால் 4 விக்கெட்டுகளையும் துஷ்மந்த சமீர 3 விக்கெட்டுகளையும் விஷ்வ பெனார்டோ, லசித் எம்புல்தெனிய, மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி, 258 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, திரிமன்னே 55 ஓட்டங்களையும் பெத்தும் நிஸங்க 51 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், கெமார் ரோச் 3 விக்கெட்டுகளையும் அல்சார்ரி ஜோசப் மற்றும் ஜேஸன் ஹோல்டர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கெப்ரியல், மேயர்ஸ் மற்றும் பிளக்வுட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 96 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 280 ஓட்டங்களை பெற்றிருந்த போது தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. இதனால் இலங்கை அணிக்கு 377 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பிரத்வெயிட் 85 ஓட்டங்களையும் ஹோல்டர் ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களையும் மேயர்ஸ் 55 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில், லக்மால் மற்றும் சமீர ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனையடுத்து 377 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, 4ம் நாள் ஆட்டநேர முடிவில், விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்களை பெற்றுள்ளது.



## புத்தளத்தில் பாரம்பரிய விளையாட்டு போட்டிகள்





(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் ரிக்லா விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த மாட்டு வண்டில் மற்றும் குதிரை வண்டில் போட்டிகளின் இறுதிப் போட்டி வெள்ளிக்கிழமை மாலை (26) புத்தளம் இஜ்திமா மைதானத்தில் இடம்பெற்றது.

புத்தளத்தில் பாரம்பரியமாக இந்த விளையாட்டுப் போட்டிகள் நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக தொடர்ந்தும் நடாத்தப்பட்டு வருகின்றன.

எனினும் கொவிட் 19 தாக்கத்தின் காரணமாக கடந்த காலத்தில் இந்த பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் ரத்து செய்யப்பட்டு இருந்தன.

என்றாலும் மாட்டு வண்டிகளின் உரிமையாளர்கள், குதிரைகளின் சொந்தக்காரர்கள், மற்றும் இதர வாலிபர்களை உள்ளடக்கிய ரிக்லா என்கின்ற இந்த விளையாட்டு கழகத்தினர் ரசிகர்களுடைய எதிர்பார்ப்பை தீர்த்து வைக்கும் நோக்கத்தில் இந்த போட்டிகளை இம்முறை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

தொடர்ந்து ஒரு மாத காலமாக தெரிவு போட்டிகள் நடைபெற்று இறுதிப்போட்டிள் வெள்ளியன்று நடைபெற்று முடிந்தன.

அரை கரத்தை, ரேஸ் கரத்தை, குதிரை கரத்தை ஆகிய போட்டிகள் செவ்வனே நடந்தேறின. போட்டிக்கு பிரதம நடுவராக எம்.யூ.எம். வஸீம் கடமையாற்றினார்.

நிகழ்வில் அதிதிகளாக புத்தளம் நகர சபை உறுப்பினர்களான பீ.எம். ரனீஸ், ஏ.எம்.சிஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களுடன் பெறுமதியான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## மைலோ ஊக்குவிப்பு பிரச்சாரத்தின் வெற்றியாளர்களுக்கு விளையாட்டு அமைச்சரினால் மிதிவண்டிகளை அன்பளிப்பு



மைலோ ஊக்குவிப்புப் பிரச்சாரத்தின் வெற்றியாளர்கள் உடற்பயிற்சி நிறைந்த வாழ்க்கை முறையை முன்னெடுப்பதை ஊக்குவிப்பதற்கு விளையாட்டு அமைச்சர் மிதிவண்டிகளை பரிசாக வழங்கியுள்ளார்.

சிறுவர்கள் உடற்பயிற்சிகளை சுறுசுறுப்பாக முன்னெடுப்பதற்கு உதவ வேண்டும் என்ற வர்த்தகநாம ஊக்குவிப்புப் பிரச்சாரத்திற்கு ஆதரவாக, மைலோ பிரச்சாரத்தின் வெற்றியாளர்களுக்கு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சரான கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்கள் விசேட நிகழ்வொன்றில் மிதிவண்டிகளை பரிசளித்துள்ளார்.

அமைச்சர் சமீபத்தில் தேசிய சைக்கிளோட்ட ஞாயிற்றுக்கிழமை என்ற ஊக்குவிப்பு பிரச்சாரத்தை தொடக்கி வைத்துள்ள நிலையில், சைக்கிள் ஓட்டுதல் என்பது வீட்டுக்கு வெளியில் நேரத்தை செலவிடுவதற்கும், உடற்பயிற்சியை மேற்கொள்வதற்கும் ஒரு சிறந்த வழியாகும் என்று அவர் உறுதியாக நம்புகிறார்.

மைலோவின் சமீபத்திய ஊக்குவிப்புப் பிரச்சாரம், தொலைதூர கற்றல் மற்றும் ஒன்லைன் வகுப்புகளுடன், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வெளிப்புற விளையாட்டு நேரம் மற்றும் உடற்பயிற்சிகள் இன்மை தொடர்பில் கவலைகளுடன், பல இன்னல்களைச் சந்தித்து வருகின்ற ஒரு காலகட்டத்தில் மொத்தமாக 10,000 சிறுவர்களுக்கு ரூபா. 10 மில்லியன் பெறுமதியான மிதிவண்டிகள், ஸ்கேட்போர்டுகள், கூடைப்பந்துகள், உதைபந்துகள், மடிகணினிகள், டெப் சாதனங்கள், றீலோட்டுகள் மற்றும் பலவற்றை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த வர்த்தகநாமம் இதுவரை 8,000 வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கியுள்ளதுடன், 2021 ஏப்ரல் 18 வரை வாரந்தோறும் 1,000 வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கும். மேலதிக தகவல்கள் விபரங்களுக்கு @MiloSriLanka முகநூல் பக்கத்தைப் பார்க்கவும்.



## கோவில் போரதீவு உதயதாரகை அணி சம்பியன்




(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

களுவாஞ்சிகுடி நியூ ஒலிம்பிக் விளையாட்டு கழகத்தின் மாபெரும் கிரிக்கட் தொடரில் கோவில் போரதீவு உதயதாரகை வெற்றிக் கிண்ணத்தினை சுவீகரித்தது.

களுவாஞ்சிகுடி நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட இவ் வருடத்துக்கான மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஞாயிற்றுக்கிழமை (28) கழகத் தலைவர் யோ.சதேஷா தலைமையில் களுவாஞ்சிகுடி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பிரதேசத்தின் பல கிரிக்கட் அணிகள் பங்குபற்றிய இத்தொடரின் இறுதிப் போட்டியில் குருமன்வெளி ரொபின் விளையாட்டுக் கழகத்தினை வெற்றி கொண்டு கோவில் போரதீவு உதயதாரகை அணி இறுதிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

இதன்போது இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், தமிழரசு கட்சியின் பதில் செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம், மன்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினருமான மேகசுந்தரம் வினோராஜ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

## ரி-20 தொடரில் பங்களாதேஷை 3-0 என அள்ளிச் சுருட்டியது நியூஸிலாந்து!

பங்களாதேஷ் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ரி20 போட்டியில், நியூஸிலாந்து அணி டக்வத் லுயிஸ் முறைப்படி 65 ஓட்டங்களால் சிறப்பான வெற்றியை பதிவுசெய்தது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி20 தொடரை,



முழுமையாக கைப்பற்றி நியூஸிலாந்து அணி, பங்களாதேஷ் அணியை வயிட் வோஷ் செய்துள்ளது.

ஒக்லாந்து மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில், ஆரம்பமே மழை குறுக்கிட்டதால் போட்டி 10 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்ட ஆரம்பிக்கப்பட்டது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 141 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பின் அலென் 71 ஓட்டங்களையும் கப்டில் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், டஸ்கின் அஹமட், சொரிபுல் இஸ்லாம் மற்றும் மெயிடி ஹசன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 142 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 9.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 76 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதனால் நியூஸிலாந்து அணி டக்வத் லுயிஸ் முறைப்படி 65 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மொஹமட் நய்ம் 19 ஓட்டங்களையும் மொசடக் ஹொசைன் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.



நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், டொட் ஹெஸ்ட்ல் 4 விக்கெட்டுகளையும் டிம் சவுத்தீ 3 விக்கெட்டுகளையும் ஆடம் மில்ன், லொக்கி பெர்குசன் மற்றும் க்ளென் பிலிப்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 29 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 10 பவுண்ரிகள் அடங்களாக 71 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட பின் அலென் தெரிவுசெய்யப்பட்டார். தொடரின் நாயகனாக க்ளென் பிலிப்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

## மட்டக்களப்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் கிரிக்கெட் உபகரணங்கள்





(புதிய காத்தான்குடி தினகரன் , வெல்லாவெளி தினகரன் நிருபர்கள்)

மட்டக்களப்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் கடினபந்து மற்றும் கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட கிரிகெட் சங்கம் ஏற்பாடு செய்த கடினபந்து மற்றும் கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வானது வியாழக்கிழமை(1)பிற்பகல் மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் பொறியியலாளர் என்பீ.ரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கலந்து சிறப்பித்தார்.இதன்போது பல இலட்சம் ரூபா பெறுமதியான கடினப்பந்து கிரிக்கெட் உபகரணங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கடினப்பந்து கழகங்களுக்கும்,மற்றும் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கும் விளையாட்டுத்துறை அமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். சந்திரகாந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நஸீர் அஹமட், விளையாட்டு துறை அமைச்சின் உயர் அதிகாரிகள், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை உயர் அதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் சங்க உறுப்பினர்கள்,கடினப்பந்து விளையாடும் பாடசாலையின் அதிபர்கள், விளையாட்டு வீரர்கள், கலந்து கொண்டார்கள். மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் சங்க செயலாளர் வீ.பிரதீபனின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் முற்றுப்பெற்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 3ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.